www.padippakam.com

# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 484 | 1997 நலம்பர் | ரூபா 8.00

உள்ளே

■ பொதுமக்களுக்கு எதிரான இராணுவ தாக்குதலுக்கான ஒத்திகை ........ 2
■ ரொம் ஹெனஹன் மறைவின் 20வது ஆண்டு நிறைவு: அனைத்துலக சோசலிசத்துக்கான போராளி ........ 4
■ தோட்டத் தொழிலாளர் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எப்படி?. 6–7
■ இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ..... 8–9
■ மார்க்சிசமும் உற்பத்தியின் பூகோளமயமாக்கமும் 12–13
■ பண்டிட் குயின் பெண்ணீய விமர்சகர்களை சவால்செய்யும் திரைப்படம் ........ 14–15

**மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை அக்டோபர் புரட்சி ஊர்ஜிதம் செய்கின்றது**

10–11 பக்கம்

## பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வரவுசெலவுத் திட்டம்–1998:

# விவசாயிகளுக்கு எதிரான யுத்தப் பிரகடனம்

விவசாயத் துறையை அடியோடு பலியெடுக்கும் வகையில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு வாய்ப்பான நிலைமைகளைச் சிருஷ்டிப்பதை முதன்மையாகக் கொண்ட ஒரு வரவு செலவுத் திட்டத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் இம்முறை வெளியிட்டுள்ளது. அத்தோடு வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் சாக்குகளை நிரப்பும் வகையில் ஒரு தொகை வரிச் சலுகைகளை வழங்கியுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம், தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை தவிடுபொடியாக்கும் அதன் திட்டம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்பதையும மீண்டும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

1998க்கான வரவு செலவுத் திட்டத்தில் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள முக்கிய சலுகைகளில் சில வருமாறு :

* விவசாயத் துறையில் நுழையும் பெரும் கம்பனிகளுக்கும் அவ்வாறே நடுத்தர, சிறிய கம்பனிகளுக்கும் நூற்றுக்கு 100வீதம் முதலீட்டு வரிச் சலுகை. 10 வருடகால வரிவிடுமுறை, நீண்டகால காணிக் குத்தகை.

* கடந்த வரவு செலவுத்திட்டத்தில் சகல கம்பனிகளுக்கும் நூற்றுக்கு 30 வீதம் வரை குறைக்கப்பட்ட வரி நிவாரணங்கள் தொடர்ந்தும் அமுலில் இருக்கும். அத்தோடு விவசாயம், உல்லாசப் பிரயாணக் கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கம்பனிகளுக்கு வருமானவரி நூற்றுக்கு 15வீதம் வரை குறைக்கப்படும். நிதிக் கம்பனிகளுக்கு வழங்கும் வரிச் சலுகைகள் அப்படியே தொடர்ந்தும் இருந்து வரும்.

* உல்லாசப் பிரயாணக் ஹோட்டல்களுக்கான வருமான வரியை நூற்றுக்கு 15வீதம் குறைப்பதோடு அவற்றுக்கு அவசியமான பொருட்களின் வியாபார மொத்த விற்பனவு வரி ஒழிக்கப்படும்.

* தங்க, இரத்தினக் கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள கம்பனிளுக்கு வருமான வரியில் இருந்தும் தேசிய பாதுகாப்பு வரியில் இருந்தும் விலக்களிக்கப்படும்.

* தங்க, இரத்தினக் கல் கைத்தொழில்களுக்கு உரிய உபகரணங்களை இறக்குமதி செய்ய சுங்க வரி விலக்கு. கொழும்பு பங்குமுதல் சந்தையில் புதிதாக நுழையும் கம்பனிகளுக்கு நூற்றுக்கு 5வீதம் வரி, முத்திரை வரி ரூபா.1000க்கு 50சதமாகக் குறைப்பு. ஏழைகள் வெளிவாரி, உள்வாரி சிகிச்சை பெற வாய்ப்பளிக்கும் மோசடி நிபந்தனைகளின் கீழ் ஆஸ்பத்திரிகள் அமைக்கப் பயன்படுத்தப்படும் மூலதனத்துக்கு வரி விலக்கு. அத்தகைய ஆஸ்பத்திரிகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து இலவச நிலம்,

* அத்தகைய ஆஸ்பத்திரிகளின் வருமானங்களுக்கு வருமான வரி விலக்கு. அவற்றுக்கு அவசியமான உபகரணங்களுக்கு சுங்க வரி விலக்கு.

இவை எல்லாம் கடந்த 20 ஆண்டுகளாக யூ.என்.பி., பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் பொதுஜன வாழ்க்கையை நசுக்கித் தள்ளி, ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கும் அவற்றின் உள்நாட்டு தேசிய ஏஜன்டுகளுக்கும் வழங்கியுள்ள ஒரு தொகை வரி விலக்குகளுக்கும் மற்றும் சலுகைகளுக்கும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளவை.

### விவசாயிகள் மீதான தாக்குதல்

யூ.என்.பி.அரசாங்கமும் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கமும் கடந்த காலங்களில் கொழும்பிலும் இன்னும் பல நகரங்களிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக சுதந்திர வர்த்தக வலயங்களை அமைத்து வந்தது. பொதுஜன முன்னணி அரசாங்கம் இன்று அதை விவசாயத் துறை வரை விஸ்தரிப்பதில் இறங்கியுள்ளது. ஏற்கனவே தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பெருந்தோட்டத் துறைகளை வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு தனியார்மயமாக்கம் மூலம் பலியிட்டுள்ள அரசாங்கம், இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நெற் செய்கையில் இருந்து மரக்கறி, பழவகை, கால்நடை வளர்ப்பு வரையும் இதை விஸ்தரித்துள்ளது. இவற்றை அபிவிருத்திக்கான "முக்கிய துறைகள்" எனப் பெயர் சூட்டி அவற்றை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களிடம் தாரைவார்க்க ஒரு தொகை வரி விலக்குகளும் நிவாரணங்களும வழங்கியுள்ளது. கடந்த காலத்தில் நெஸ்லே, டொபாக்கோ, சீனி கம்பனிகள் பலவும் மகாவலி வலயம் உட்பட்ட பகுதிகளுள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளன என்பது உண்மையே. ஆனால் இன்றைய புதிய வரவு செலவுத் திட்டம் விவசாயத் துறையை வர்த்தகமயமாக்கும் பேரில் ஏழை விவசாயிகளுக்கு இருப்பிடமும் இல்லாது போகும் ஒரு நிலைமைக்கு அதை வளர்ச்சி காணச் செய்வதாக உள்ளது. புதிய வரவு செலவுத் திட்டம் விவசாயக் கைத்தொழிலின் பல்வேறு துறைகளையும் பேர் குறிப்பிட்டு அவற்றுக்கு வரி விலக்கும் நிவாரணங்களும் வழங்கிக் கொண்டுள்ளது. இவை எவையும் வறுமையில் வாழும் ஏழை விவசாயிகளுக்கு அல்ல. பொதுஜன முன்னணி அரசாங்கம் செய்வது என்ன? இந்தப் பெரும் எண்ணிக்கையிலான ஒடுக்கப்பட்ட ஏழை விவசாயிகளின் வாழ்க்கை முறையை தவிடுபொடியாக்கவும் எஞ்சியோரை மிகவும் குறைந்த விலைக்கு இலாப வெறி கொண்டு அலையும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு விற்றுத் தள்ளுவதற்கான நிலைமைகளைச்

(18ம் பக்கம் பார்க்க)

# உலக நிதிச் சந்தையில் பெரும் நெருக்கடி

அக்டோபர் 27ம் திகதி நியூயோர்க் பங்குமுதல் சந்தை பெரும் வீழ்ச்சி கண்டதோடு, கடந்த நான்கு மாதங்களாக ஆசியாவில், வளர்ச்சி கண்டுவந்த 'நெருக்கடி உலகளாவிய ரீதியில் பணச் சந்தைக் குழப்பமாக தலையெடுத்துள்ளது. இது உலக முதலாளித்துவ அமைப்பினுள் இருந்துவரும் ஸ்திரமற்ற ஆட்டங்கண்ட நிலைமையை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளது.

நியூயோர்க் பங்குமுதல் சந்தையின் வரலாற்றில் ஒரே நாளில் பெரும் அளவில் பெறுமதி வீழ்ச்சியை அக்டோபர் 27ம் திகதிய கைத்தொழில் விலைச் சுட்டெண் காட்டிகள் பதிவு செய்திருந்தன. அது 554.6 புள்ளிகள் வீழ்ச்சியாகும். "கறுப்புத் திங்கட்கிழமை" எனப் பெயர் சூட்டப்பட்ட 1987 அக்டோபர் 27ம் திகதிய நியூயோர்க் பங்கு, முதல் சந்தை, 508 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டது. கடந்த ஆகஸ்ட் 8ம் திகதியில் இருந்து அக்டோபர் 27ம் திகதி வரை நியூயோர்க்கில் பங்குகளின் பெறுமானம் நூற்றுக்கு 8 வீதத்தினால் வீழ்சசி கண்டுள்ளது. இந்த நெருக்கடி காரணமாக நியூயோர்க் பங்குமுதல் சந்தையில் வரலாற்றில் முதல் தடவையாக அக்டோபர் 27ம் திகதி இரண்டாம் தடவையாகவும் பங்கு விற்பனையை நிறுத்தயை நேர்ந்தது.

அக்டோபர் 27ம் திகதிய இந்த நெருக்கடி கனடாவின் டொரான்டோவையும் ' 'பிடித்துக் கொண்டது. பங்குகளின் பெறுமதிகள் பில்லியன் டாலர்களால் அடியுண்டு போனதோடு இந்த வீழ்ச்சி 1987ஐக் காட்டிலும் மோசமானதாக விளங்கியது.

லத்தீன் அமெரிக்காவில் மெக்சிக்கோ, பிரேசில், ஆர்ஜன்ரைனாவிலும் இந்த நெருக்கடி பரவியது. பங்குகளின் பெறுமதியின் வீழ்ச்சி நூற்றுக்கு 13-15 க்கும் இடைப்பட்டதாக விளங்கியது. இந்த விலை வீழ்ச்சியை ஒரு மெக்சிக்கன் பங்குமுதல் சந்தை வர்த்தகர் "இரத்த வெள்ளம் போன்றது" எனக் குறிப்பிட்டார். இது டோக்கியோவில் நூற்றுக்கு 1.9வீதத்தினாலும் பிராங்போர்ட்டில் நூற்றுக்கு 3.6வீதத்தினாலும் லண்டனில் நூற்றுக்கு 1.64 வீதத்தினாலும் பாரிசில் 2.44 வீதத்தினாலும் வீழ்ச்சிகண்டது.

தென்கிழக்கி ஆசிய நாடுகளில் இந்த பங்குமுதல் சந்தை நெருக்கடி தொடர்ந்து வருகின்றது. நெருக்கடிக்கு உள்ளாகாத நாடு என முதலாளித்துவப்

(13ம் பக்கம் பார்க்க)



அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டுநிறைவைக் கொண்டாடும் முகமாக சோசலிச சமத்துவக் கட்சி அக்டோபர் 12ம் திகதி கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கண்காட்சியும் பொதுக் கூட்டமும் நடாத்தியது. காலை 10மணியில் இருந்து கண்காட்சியைக் காண பெருந்தொகையானவர்கள் வருகைதந்தனர். இறுதி அங்கமாக இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் 250க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர். சோ.ச.க.மத்திய குழு உறுப்பினரும் கம்கறு மாவத்த ஆசிரியருமான கே.ரத்னாயக்க தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் ஆற்றிய உரை இந்த இதழின் 10-11ம் பக்கங்களில் வெளியாகின்றது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை மேலே காண்கிறீர்கள்.

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள– தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

www.padippakam.com


தொழிலாளர் பாதை

ஆசிரியர்: கே. ரத்னாயக்க
துணை ஆசிரியர்: எஸ். இராசேந்திரன்
பதிப்பாளர்: தீபால் ஜயசேகர
சோசலிச சமத்துவக் கட்சியின்
பொதுச் செயலாளர்: விஜே டயஸ்
அலுவலகம்:
90. 1 வது மாளிகாகந்த
ஒழுங்கை
கொழும்பு - 10.
தொலைபேசி: 682220

*கொழும்பில் 'துடைத்துக்கட்டும் இராணுவ நடவடிக்கை'*

# பொதுமக்களுக்கு எதிரான இராணுவ தாக்குதலுக்கான ஒத்திகை

அக்டோபர் 25ம் திகதி பொதுஜன முன்னணி அரசாங்கம் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை என்ற பெயரில் தமிழ் மக்களைப் பயங்கரத்துக்குள் தள்ளும் வகையில் கட்டவிழ்த்துவிட்ட இனவாத அடக்குமுறை, முழுத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான ஒரு பெரும் எச்சரிக்கையாகும். இந்த முற்றுகை கொழும்பு நகரில் இடம்பெற்ற பிரமாண்டமான இராணுவ பொலிஸ் ஆக்கிரமிப்பாக விளங்கியது.

விடுதலைப் புலிகள் கலதாரி ஹோட்டல் வாகனத் தரிப்பில் நடாத்திய பயங்கரவாதக் குண்டுத் தாக்குதலின் 15 நாட்களின் பின்னர் இந்த பொலிஸ் இராணுவ முற்றுகை இடம் பெற்றுள்ளது. விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் பற்றிய காதைக் கிழிக்கும் பிரச்சாரங்களும் அதைச் சாட்டாக வைத்து, தமிழ் மக்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல்களும் இந்த முற்றுகைக்கான போர்வையையும் தூண்டுதலையும் வழங்கியுள்ளன. இந்த முற்றுகை "பயங்கரவாதிகளை துடைத்துக் கட்டுவதன்" மூலம் பொதுமக்களை விடுதலைப் புலிகளின் தாக்குதலில் இருந்து காக்கும் முகமாக இடம்பெற்றதாக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த இலட்சணத்திலான முற்றுகைகளும், பாய்ச்சல்களும், அடியோடு ஆட்களைக் கைது செய்தலும் நியாயமானதும் அத்தியாவசியமானதும் என மக்களைக் கிண்டிவிடும் இனவாத, உளவியல் யுத்தத்தில் அரசாங்கமும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் ஈடுபட்டுள்ளன. இராணுவ நடவடிக்கை இடம்பெற்ற வேளையில் அந்தந்த இடங்களில் இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருந்தோரின் "கருணை உள்ளத்தையும்" அவர்களுக்கு பொதுமக்களிடம் இருந்து கிடைத்த "ஒத்துழைப்பையும்" நேரில் கண்டவர்களாகப் பெயர் குறிப்பிடப்பட்ட அரசாங்கத்தினதும் அரசினதும் ஏஜண்டுகள் கொடுத்த விபரங்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டன. இராணுவமும் பொலிசாரும் மக்களுக்கு நன்றி தெரிவித்ததோடு, பாதுகாப்பு அமைச்சு அன்றைய தினம் மக்களுக்கு ஏற்பட்ட அசௌகரியங்களுக்காக "கவலை" தெரிவித்துக் கொண்டது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்திடம் இருந்து கிடைத்த "மனிதாபிமான தோற்றம் கொண்ட திறந்த பொருளாதாரம்" போன்றதே இந்த "மனிதாபிமான ரீதியிலான" இராணுவ முற்றுகையும்! இத்தகைய மோசடியான சுற்றிவளைப்புக்களுக்கு ஏமாந்து போனால் இனவாத நச்சுப் புகையினால் பார்வை கெட்டு, பொதுஜன முன்னணி திணிக்கும் பொறிக் கிடங்கிற்குள் அகப்பட்டுக் கொள்ள நேரிடுவது நிச்சயம்.

கடந்த காலங்களில் சிறிதுசிறிதாக வளர்ச்சி கண்டுவந்த கொடிய 'துடைத்துக் கட்டல்' இராணுவ நடவடிக்கைகள் கொழும்பிலும் அயல் நகரங்களிலும் தமிழ் ஒடுக்கப்படும் தேசிய இனத்தவர்களுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. இந்தத் தடவை அது இராணுவ முற்றுகை என்ற பெயரிலும் பரந்த அளவிலான இராணுவ பொலிஸ் ஆக்கிரமிப்பு தன்மையுடனும் இடம்பெற்றுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தைப் போன்றே விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரிவினைவாதிகளது தாக்குதலும் பொதுமக்களால் சகித்துக் கொள்ள முடியாத அளவுக்குத் தீவிரம் கண்டுள்ளது. இது முடிவில்லாத ஒரு தொடர் கதை. மக்கள் எதிர்நோக்கி உள்ள பாதுகாப்பற்ற ஒரு நிலை, இனவாத யுத்தத்தின் பெறுபேறு. பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவத் தொடர்புச் சாதனங்களும், இனவாதிகளும் பொதுமக்களை இனவாதத்தினால் வெறியூட்டி, இந்த நிஜ நிலைமையை பூசிமெழுகப் பார்க்கின்றனர்.

அக்டோபர் 25ம் திகதி இடம்பெற்ற இராணுவ முற்றுகையில் 5000 அல்லது 6000 இராணுவத்தினரும் பொலிசாரும் பங்கு கொண்டதாக ஆரம்பத்தில் செய்திகள் வெளிவந்தன. ஆனால் அரசாங்க ஊதுகுழலான லேக்ஹவுஸ் கும்பல் நிலைமையைக் குறைத்துக் காட்டும் பொருட்டு இதில் 2200 படையாட்கள் மட்டுமே ஈடுபட்டதாக அறிவித்தது.

எவ்வாறாயினும் இந்த இராணுவ பொலிஸ் முற்றுகை அன்று அதிகாலை 4மணிக்குத் தொடங்கி காலை 8மணி வரை நான்கு மணித்தியாலங்கள் நீடித்தது. இக்காலப் பகுதியில் "அத்தியாவசிய தேவைகளைத்" தவிர ஏனையவைக்கு கொழும்புக்குள் நுழைவது தடைசெய்யப்பட்டது. தமிழர்கள், வெளிநாட்டவர்கள், இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 139 பெண்களும் அடங்குவர். கைது செய்யப்பட்டோர் விசாரணைக்கென்று பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டனர். இவர்களில் 50பேர் தடுத்துவைக்கப்பட்டதாயும் ஏனையோர் இடைக்கிடையே விடுதலை செய்யப்பட்டதாயும் ஆறு மணித்தியாலங்களின் பின்னர் அறிவிக்கப்பட்டது.

## 'நியாயமான காரணம்'

இந்த முற்றுகைக்கு முன்னைய கிழமைகளிலும் ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கொழும்பில் கைது செய்யப்பட்டனர். "நியாயமான காரணம்" இல்லாது கொழும்புக்குள் நுழைந்தமையும் தங்கியமையும் இவர்களின் கைதிற்கான காரணமாகக் கூறப்பட்டது. இதன் அர்த்தம் என்ன? தமிழர்கள் இரண்டாந்தர பிரஜைகள் என்பதும் அவர்கள் தமக்கு வேண்டிய விதத்தில் தீவின் எந்த ஒரு பகுதியிலும் நடமாட முடியாது என்பதுமே. முற்றுகையின் பின்னர் வீட்டு பிரதான வதிவாளரிடம் கையொப்பம் பெற வழங்கப்பட்ட படிவம் தனிச் சிங்களத்தில் மட்டுமே இருந்தது. அத்தோடு அதில் தமிழ் மக்கள் புரியாத மொழியில் எழுதப்பட்டும் இருந்தது. தேடுதல் நடவடிக்கை "ஒழுங்குமுறையாக" இடம்பெற்றதை அத்தாட்சி செய்யும் ஒரு நற்சாட்சிப் பத்திரமாக அது விளங்கியது.

கொழும்பு பொதுமக்களின் வாழ்க்கையை அடியோடு முற்றுகைக்கு உள்ளாக்கும் வகையில் இடம்பெற்ற இந்த இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கை எவ்விதம் தமிழ் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இடம்பெற்ற இனவாத அடக்குமுறையோ அவ்விதமே முழுத் தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கும் எதிரான தாக்குதலுக்கான ஒரு ஒத்திகையுமாகும் என நாம் சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றோம்.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் முதலீட்டு வாய்ப்புகளுக்காகத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களது வாழ்க்கைத் தரங்களையும் மற்றும் உரிமைகளையும் தகர்த்து எறிவதன் மூலம் ஒரு இலாபகரமான உழைப்புப் படையை ஏற்படுத்தும் வகையிலான வேலைத்திட்டங்களுக்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுவர். இதை பொதுஜன முன்னணி அரசாங்கம் நன்கு கணித்துக் கொண்டுள்ளது. இதனால் யூ.என்.பி., ஜே.வீ.பி. உட்பட்ட பிற்போக்கு சக்திகளின் ஆதரவுடன் இந்த பொதுமக்கள் எழுச்சியை நசுக்கித் தள்ளிவிட அரசாங்கம் முன்கூட்டியே தயாராகின்றது.

இனவாதப் பிரச்சாரங்களுக்குச் செவிசாய்க்கும் எவருக்கும் இனவாத அடக்குமுறைக்கும் இராணுவ சர்வாதிகாரத் தயாரிப்புக்கும் இடையேயான தொடர்புகள் தென்படாது போகும். இதனால் முதலாளித்துவ வர்க்கத்துக்கு அவர்கள் பலிகடாக்களாக மாற நேரிடும். "திவயின" பத்திரிகைக்கு இனவாத ஆத்திரமூட்டல் கட்டுரைகளை எழுதி வரும் கும்பல் இவற்றில் "துடைத்துக் கட்டல் முற்றுகைகளை ஈழம்வாதிகள் எதிர்க்கின்றார்கள்" என்ற தலைப்பில் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பற்றி பேரளவுக்கேனும் பேசுவோர் யாரும் இருந்தால் அவர்களையும் தாக்கி உள்ளார்கள். தமிழ் மக்களை இரத்தத்தில் குளிப்பாட்டி நசுக்குவதோடு அவர்களை பிரிவினைவாதிகளின் அடக்கு ஒடுக்குமுறைக்குள் மீண்டும் மீண்டும் தள்ளிவிடுவது இந்த இனவாதிகளும் முதலாளித்துவ ஆளும் வர்க்கமுமே. இந்தக் கொடிய தாக்குதலின் மறுபுறத்தில் பொதுமக்களுக்கு எதிராக இராணுவ பாசிச சக்திகளைப் பலப்படுத்துவதும் தூண்டுவதும் இருந்துவருகின்றது.

பொதுமக்களின் எதிரில் வளர்ச்சி கண்டுவருவது இராணுவ சர்வாதிகாரத் தயாரிப்பேயாகும். 1996ல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட இலங்கை மின்சார சபை ஊழியர்களை நாடு பூராவும் தேடிப் பிடித்து, கொடிய அடக்குமுறைக்கு உள்ளாக்கியதோடு அவர்களை மீண்டும் பலாத்காரமாக வேலைக்குக் கொண்டு சென்றது. இதனை 'திடீர் சுற்றிவளைப்பு' என்ற பெயரில் இராணுவத்தினரே காட்டுமிராண்டித்தனமான முறையில் நடாத்தினர். இனவாத யுத்தத்தினைச் சாட்டாகக் கொண்டு, ஆத்திரமூட்டலைத் தூண்டவும் புலிகள் கொழும்பில் நடாத்தும் தாக்குதலுக்கு பதில் தாக்குதலுக்குத் தயாராகும் பேரில் சர்வாதிகார தயாரிப்பை இறுக்கமாக்கவும் நன்றாகப் பயன்படுத்தப்படுகின்றது.

கடந்த சில தினங்களாக கொழும்பின் பாதுகாப்பு, இராணுவ மேஜர் ஒருவரின் தலைமையிலான சபையிடம் ஒப்படைக்கப்பட உள்ளதாக பேச்சு அடிபட்டது. எப்படி என்றாலும் கொழும்பு பாதுகாப்பு வலயம் என்ற அமைப்பினுள் வருகின்றது. துறைமுகப் பாதுகாப்பு என்ற அதன் பாதுகாப்பு பிரிவில் இருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட ஒரு ஆயுதம் தாங்கிய தாக்குதல் படைப்பிரிவுக்கு இராணுவம் பயிற்சி அளிப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. கடந்த சில நாட்களில் யால காட்டு பகுதி, இராணுவ பிரிகேடியர் ஒருவரது நிர்வாகத்தின் கீழ் கொணரப்பட்டது. அக்டோபர் 25ம் திகதி கொழும்பு இராணுவ பொலிஸ் முற்றுகைப் பயிற்சித் திட்டம், இந்த தயாரிப்பை உயர் மட்டத்துக்கு கொண்டு வந்துள்ளதை காட்டிக் கொண்டுள்ளது. தமிழர் வாழும் இடங்களில் எல்லாம் அடிக்கடி இராணுவமும் பொலிசும் பாய்ந்து விழுவதுடன் முழுக் கொழும்பு நகரமுமே ஒரு யுத்த களமாக மாற்றப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதல், இனவாத யுத்தம், அதைச் சூழ விருத்தி காணும் இராணுவ பொலிஸ் அடக்குமுறை இயக்கம் என்பன தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் முன்நிலையில் அவர்கள் தமது பாதுகாப்பை தாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது. பாதுகாப்பு என்ற பேரில் முதலாளித்துவ அரச சக்திகளுக்கும் பிற்போக்கு சக்திகளுக்கும் பின்னால் அடியுண்டு போனால் பொதுமக்களின் குரல்வளையை நெரிக்கும் அரசாங்கத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே முடியும்.

இனவாத யுத்தத்துக்கும் பிரிவினைவாத யுத்தத்துக்கும் எதிராகச் சிங்கள தமிழ் மொழி பேசும் தொழிலாளர் வர்க்கம் ஒன்றுபட்டு, ஒடுக்கப்பட்ட மக்களைத் தம்மைச் சூழ அணிதிரட்டி, சோசலிசத்துக்காகப் போராடுவதால் தமது பாதுகாப்புக்கான தலைமையை ஏற்றாகவேண்டும். இத்தகைய ஒருங்கிணைந்த போராட்டத்துக்கான தலைமையை நடவடிக்கை குழுக்களையும் அவற்றின் கீழ் பாதுகாப்பு குழுக்களையும் கட்டியெழுப்புமாறு சோசலிச சமத்துவக் கட்சி என்றும் சுட்டிக்காட்டி வந்துள்ளது. இதன் உடனடி அவசியம் மீண்டும் ஒரு தடவை ஊர்ஜிதம் செய்யப்படுகின்றது அல்லவா?

**அனைத்துலக குழுவின் பகுதிகளின் இன்டர்நெட்**

* அமெரிக்கா:
**http://www.socialequality.com**

* அவுஸ்திரேலியா:
**http:www.workersnews.flex.com.au**

* பிரித்தானியா:
**http:/www.socialequality.org.uk**

* கனடா:
**http://www.egalitesociale.com**

* ஜேர்மன்:
**http://gleichheit.de**

படிப்பகம்

www.padippakam.com



## ஜே.வீ.பி. பாசிஸ்டுகளால் கொலையுண்ட ட்ரொட்ஸ்கிஸ்டின்

# ஒன்பதாவது ஆண்டு நினைவு தினம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் நீண்டகால அங்கத்தவராக விளங்கிய தோழர்.ஆர்.பி.பிட்டவெல பாசிச ஜே.வீ.பி.யினால் கொலைசெய்யப்பட்டு 1997 நவம்பர் 12ம் திகதியுடன் ஒன்பது ஆண்டுகள் பூர்த்தியாகின்றது.சோசலிச சமத்துவக் கட்சி இந்த ட்ரொஸ்கிஸ்டின் நினைவு அஞ்சலிக்காக நவம்பர் 12ம் திகதி வெலிமடையில் பகிரங்கக் கூட்டத்தை நடாத்த ஒழுங்குகள் செய்துள்ளது.

வெலிமடைப் பகுதியில் பொதுமக்களிடையேயும் ஆசிரிய தொழிற்சங்கங்களுக்கு இடையிலும் ட்ரொட்ஸ்கிசப் போராளியாக விளங்கிப் பிரசித்தி பெற்ற ஆர்.பி.பிட்டவெல 1987-90 காலகட்டத்தில் ஜே.வீ.பி. தொழிலாளர் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக நடாத்திய பாசிச அடக்குமுறைகளின் போதே கொலை செய்யப்பட்டார். இந்திய இலங்கை உடன்படிக்கையை எதிர்ப்பதாகக் கூறி தமிழர் எதிர்ப்பு இனவாதக் கூச்சலில் இறங்கிய ஜே.வீ.பி. இத்தகைய தனது இனவாத ஊர்வலங்களுக்கு கிராமப்புற ஏழை மக்கள். இளைஞர்களை பலாத்காரமாக அணிதிரட்டி வந்தது. இதற்கான தனது கொலைக் கும்பலையும் அது அணிதிரட்டி இருந்தது. பொதுமக்களை பயமுறுத்தி பாசிச கலகங்களுக்கு அவர்களை இழுத்துச் செல்லும் பொருட்டு ஜே.வீ.பி. அன்று பிரதமராக இருந்து பின்னர் ஜனாதிபதியாகிய ரணசிங்க பிரேமதாச உட்பட்ட யூ.என்.பி.தலைவர்களைக் கொண்ட கோஷ்டியுடன் "தேசபக்த ஜனதா இயக்கம்" என்ற பெயரிலான ஒரு அமைப்பையும் நிறுவிக் கொண்டிருந்தது.



கொலை செய்யப்படுவதற்கு முன்னர் தோழர்:பிட்டவெல இந்திய இலங்கை உடன்படிக்கைக்கும் யூ.என்.பி.அடக்குமுறை. பாசிச கலவரங்களுக்கும் எதிராக அவற்றின் எதிர்ப்புரட்சி தன்மையை அம்பலமாக்கி அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (இன்றைய சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி) தொடுத்திருந்த போராட்டத்தினை அபிவிருத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தார். பிட்டவெல பு.க.க.முக்கிய அங்கத்தவர்களுடன் வீட்டுக்கு வீடு சென்று இராணுவ-பொலிஸ் கொலைகளுக்கு பொதுமக்களை இழுத்துச் செல்லும் ஜே.வீ.பி. ஊர்வலங்களுக்கு செல்ல வேண்டாம் என்றும் அவற்றின் எதிர்ப்புரட்சி நோக்கத்தை அம்பலமாக்கும எதிர்ப்பு இயக்கத்தைக் கட்டியெழுப்ப இணையுமாறும் விவசாயிகள், இளைஞர்களை வேண்டும் பிரச்சாரங்களில் ஈடுபட்டார்.

ஜே.வீ.பி.கொலை கும்பல் நவம்பர் 12ம் திகதி இரவு தோழர். பிட்டவெல வீடு திரும்பும் வேளைக்கு காத்திருந்து, ஒரு விலாசத்தை தேடும் சாட்டில் அவரைப் பலாத்காரமாக கூட்டிச் சென்று தலையில் சுட்டுக் கொன்றது. பிரேத அடக்கத்துக்கு முன்னர் இறுதி மரியாதை செலுத்த நாள் இடளிக்கக் கூடாது, எவரும் அதில் கலந்து கொள்ளக் கூடாது என்பன போன்ற ஜே.வீ.பி.குண்டர்களின் மிரட்டல்களைக் கணக்கெடுக்காமல் அவரிடம் படித்த மாணவர்கள், பாடசாலை சிறுவர்கள், பிரதேசவாசிகள், கிராமத்தவர்கள் நூற்றுக் கணக்கில் பிட்டவெல வீடு சென்று இறுதிமரியாதை செலுத்தினர்.

இதன்பின் ஆறுகிழமை' 'சென்று 1988டிசம்பர் 23ம் திகதி ஜே.வீ.பி.கொலையாளிகள் பேராதனை பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தை அமைத்தவரும் அனைத்துப் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் என்ற பாசிச ஒடுக்குமுறை அமைப்புக்கு கீழ்ப்படிவதற்கு எதிராக எழுச்சி கண்டவருமான பு.க.க.வின் மற்றொரு அங்கத்தவரான பேராதனைப் பல்கலைக் கழக ஊழியர் சங்க நிர்வாக சபை உறுப்பினர் தோழர்.ஜீ.எம்.குணபாலவை கொலை செய்தனர்.

பிட்டவெல 1970பதுகளில் பு.க.க.வில் இணைந்து 1971 ஏப்பிரல் கிளர்ச்சியினால் சிறையில் வாடிய ஜே.வீ.பி. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நடத்தப்பட்ட போராட்டத்தில் இணைந்து செயற்பட்டார். அப்போராட்டத்துக்காக முன்நின்றுழைத்த ஒருவர் பிடடவெல. ஜே.வீ.பி.யினர் தமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை விடுதலை செய்ய போராடிய ஒரு போராளியை கொலை செய்ததன் மூலம் - அந்தப் போராட்ட உறுப்பினரைக் கொன்றதன் மூலம் ஜே.வீ.பி.யின் கொடிய பாசிச அபிவிருத்தி நன்கு புலனாகின்றது. தோழர்.பிட்டவெல, பு.க.க..அடிப்படையாகக் கொண்டிருந்த நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சோசலிச வேலைத்திட்டத்தில் காலூன்றி இருந்தார். தோழர். பிட்டவெலவை இம்முறை அவரை நினைவுகூர்கையில் பு.க.க. சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யப்பட்டு ஒரு ஆண்டும் இரண்டு கிழமைகளும் பூர்த்தி கண்டுள்ளது. இது அரசியல் ரீதியில் பாரிய மாற்றங்கள் கண்டு வரும் ஒரு கால கட்டமாகும். சோசலிச சமத்துவக் கட்சியானது தோழர். பிட்டவெலவை அவர் பிரதிநிதித்துவம் செய்த அனைத்துலக சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்துக்கு அவசியமான முன்நோக்கு, தலைமையை வழங்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செலலும் உறுதிமொழியுடன் நினைவு கூர்கின்றது.

# சிலாபம் சோ.ச.க. அங்கத்தவர்களுக்கு எதிரான வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

சோசலிச சமத்துவக் கட்சியின் சிலாபம் அமைப்பாளரான ஐவன் பெர்னாந்து, அங்கத்தவர் தயாரத்ன ஆகியோருக்கு எதிராக சிலாபம் பொலிசார் தாக்கல் செய்த பொய் வழக்கு அக்டோபர் 24ம் திகதி மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இந்த சோ.ச.க. அங்கத்தவர்கள் சிலாபம் வில்லியம் சில்வா பூங்காவில் வசிக்கும் யாப்பாவின் வீட்மைந்துள்ள இடத்துக்குள் குற்றம் புரியும் நோக்கத்துடன் முறைகேடாக "நுழைந்தனர்" என்பதும் அவரை 'அச்சமும் வெட்கமும் அடையும் வகையில் பேசி அச்சுறுத்தி தாக்க முயன்றனர்' என்பதுமே பொலிசார் சுமத்தியுள்ள குற்றச்சாட்டாகும்.

ஆனால் உண்மையில் நடைபெற்றது என்ன? கடந்த ஜனவரி 18ம் திகதி இந்த வில்லியம் சில்வா பூங்காவில் கம்கறு மாவத்த பத்திரிகை விற்பனையில் ஈடுபட்டிருந்த ஐவன், தயாரத்ன இருவரையும் தாக்கியதோடு அவர்களிடம் இருந்த 25 பத்திரிகைகளையும் கிழித்து எறிந்து அவர்களை பொலிசாரிடம் பிடித்துக் கொடுக்கவும் இந்த யாப்பா முயன்றார். யூ.என்.பி. குண்டனும் பொலிசாருடன் நெருங்கிய உறவு கொண்டவருமான இவர் அந்தத் தருணத்தில் குடிவெறியில் இருந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பாக சோ.ச.க. அங்கத்தவர்கள் ஜனவரி 18ம் 19ம் திகதிகளில் செய்து கொண்ட முறைப்பாட்டுடன் சம்பந்தப்பட்ட வழக்கை பொலிசார் நீதிபதியின் விசாரணைக்கு விடாது. அமுக்கி வந்தனர். பின்னர் இந்தக் குண்டனுடன் சேர்ந்து சோ.ச.க.வுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

பொலிசார் குண்டர்களுடன் சேர்ந்து சோ.ச.க.அங்கத்தவர்களை வேட்டையாடும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதை இது காட்டுகின்றது. இந்த வழக்கின் முறைப்பாட்டாளரான யாப்பா அக்டோபர் 24ம் திகதி நீதிமன்றத்துக்கு ஆஜராகாததால் வழக்கு நவம்பர் '21ம் திகதிக்கு ஒத்திவைக்கபபட்டது. இதற்கு முன்னைய விசாரணை நாளான ஆகஸ்ட் 22ம் திகதியும் இவர் வழக்கு விசாரணைக்கு சமூகமளிக்கவில்லை. ஆனால் அவரைக் கைது செய்வதற்கு பொலியார் சித்தாசி விடுக்கவில்லை என்பதை பொலிசார் ஒப்புக் கொண்டனர். இது பொலிசாருக்கும் குண்டனுக்கும் இடையேயான ஒத்துழைப்பை காட்டுகின்றது.

பொலிசார் கிரிமினல் நடவடிக்கையாகப் பெயர் சூட்டியுளளது சோ.ச.க. அங்கத்தவர்கள் அப்பிராந்தியத்தில் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகை விற்பனையில் ஈடுபடுவதையும் பிரச்சாரம் செய்வதையுமே. இது நாடு பூராவும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பொதுஜன முன்னணி அரசாங்கம் ஈடுபட்டுள்ள அடக்குமுறை தாக்குதலின் ஒரு பாகமாகும்.


## புதிய தொழிலாளர் பாதை வெளியீடு



### சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கு

பொது மக்கள் முகம் கொடுக்கும் சகல பிரச்சினைகளும் அவர்கள் ஈடுபட்டுள்ள சகல போராட்டங்களும் முன்நோக்கு. தலைமை பற்றிய அரசியல் பிரச்சினையை உக்கிரமான முறையில் தோற்றுவிக்கின்றது. இந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க, அனைத்துலகக் குழுவின் தலைமையிலான நான்காம் அகிலத்தினால் மட்டுமே முடியும். அனைத்துலகக் குழுவின் கிளைகளால் புதிய கட்சிகளை ஸ்தாபிதம் செய்வதானது. முதலாளித்துவ முறைக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் போராட்டத்துக்குக் கிளம்பும் மக்களுக்கு சமூக சமத்துவத்தையும் நீதியையும் ஜனநாயக சுதந்திரத்தினையும்" கொண்ட மாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஆட்சி பற்றிய முன்நோக்கில் வழிகாட்டுவதற்கே.

விலை ரூபா 40.00

### சோசலிச சமத்துவக் கட்சி அங்கத்தவர் இராஜ்குமார் கைதியாக இருந்து விடுதலை செய்விக்கப்பட்ட போராட்டத்தின் படிப்பினை



சோசலிச சமத்துவக் கட்சியின் அங்கத்தவர் செல்லையா இராஜ்குமார் 1996ஜூன் 14ம் திகதி பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டு. 1997 ஜூலை 20ம் திகதி வரை -ஒரு ஆண்டுக்கும் அதிக காலம் சிறைவைக்கப்பட்டு சித்திரவதைகளுக்கு உள்ளானார். சோசலிச சமத்துவக் கட்சியும் அது இணைந்து கொண்டுள்ள நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் முன்னெடுத்த போராட்டத்தின் அனைத்துலக பிரச்சாரத்தின் பெறுபேறாகவே அவர் விடுதலை செய்யப்பட்டார். அந்த அனைத்துலகப் போராட்டத்தினை பிரதிபலிக்கும் ஒரு தொகை கடிதங்களதும் பேச்சுக்களதும் தொகுதி இது.

விலை ரூபா. 10.00

## தொழிலாளர் பாதை வெளியீட்டாளர்கள்

90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10.


படிப்பகம்

www.padippakam.com

### ரொம் ஹெனஹறன் மறைவின் 20வது ஆண்டு நிறைவு:

# அனைத்துலக சோசலிசத்துக்கான போராளி



அமெரிக்க ட்ரொட்ஸ்கிச இயக்கத்தின் ஒரு முன்னணிப் போராளியாக விளங்கிய தோழர். ரொம் ஹெனஹறன் 26 வயதில் புரூக்ளினில் (நியூயோர்க்கில்) கொலை செய்யப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. கலமசு மிச்சிக்கனில் பிறந்து வளர்ந்த ரொம் ஹெனஹறன் நியூயோர்க் நகரில் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் ஒரு மாணவராக இருந்த வேளையில் அரசியலில் புகுந்தார். அவரது தலைமுறையைச் சேர்ந்த பலரைப் போலவே அவரும் வியட்னாமில் அமெரிக்கா மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளினால் தீவிரம் அடைந்தார். சமூக அநீதிகளுக்கும் இனரீதியான சமத்துவமின்மைக்கும் எதிராக 1960பதுகளிலும் 1970பதுகளின் ஆரம்ப காலத்திலும் அமெரிக்க சமூதாயத்தை ஆட்டிப்படைத்த பிரமாண்டமான போராட்டங்களினால் தீவிரம் அடைந்தார். இருந்த போதிலும் தோழர்.ரொம் ஹெனஹறன் யுத்தம், இனவாதம், ஒடுக்குமுறைகளின் பேரிலான உணர்வுகளுடன் மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை. அவர் இந்த சமூகக் கெடுதிகளின் அடிப்படை வேர்களை புரிந்து கொள்ள முயன்றார்.

அவர் இன்றைய அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான வேர்க்கர்ஸ் லீக்குடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்ட போதுதான் ஒரு அனைத்துலக புரட்சிகர இயக்கம் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இருப்பதை முதற் தடவையாக அறிந்தார். அது ஒரு சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் உலகம் பூராவும் உள்ள தொழிலாளர் வர்க்கத்தை ஐக்கியப்படுத்தப் போராடியது.

அனைத்துலகக் குழு சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் சீனாவிலும் இருந்து வந்த ஸ்டாலினிச ஆட்சிகள் நிஜ சோசலிசத்தை பிரதிநிதித்துவம் செய்யவில்லை எனவும், தொழிலாளர் வர்க்கத்தை காட்டிக் கொடுத்து எதிர்ப்புரட்சி ஸ்டாலினிச அதிகாரத்துவத்தை பிரதிநிதித்துவம் செய்வதாகவும் விளக்கியது. சோவியத் யூனியனின் வீழ்ச்சியின் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னரே நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு சோவியத் யூனியனில் தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு அரசியல் புரட்சி இல்லாது போகுமானால் ஸ்டாலினிச அதிகாரத்துவம் ரூஷ்யப் புரட்சியின் தேட்டங்களை நாசமாக்கி, முதலாளித்துவத்தை மீண்டும் புனருத்தாரணம் செய்யும் என எச்சரிக்கை செய்திருந்தது.

சோசலிசத்துக்கும் 1917 அக்டோபர் புரட்சியின் மரபுரிமைகளுக்குமான போராட்டத்தின் தொடர்ச்சி, கம்யூனிஸ்ட் கட்சிகள் எனக் கூறிக் கொள்பவைக்கு உரியவை அல்ல. அது ஸ்டாலினிசத்தின் மாபெரும் எதிரியாக விளங்கிய லியொன் ட்ரொட்ஸ்கிக்கும் அப்போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்த நா.அ.அ.கு.வுக்குமே உரியது.

நா.அ.அ.கு. 1971ஆகஸ்ட் 15ம் திகதி உலகளாவிய ரீதியில் தங்கத்துக்கும் அமெரிக்க டாலருக்கும் இடையேயான உறவு தகர்த்து எறியப்பட்டதை மார்க்சிச ரீதியில் ஆய்வு செய்தது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் உலக முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் மிகவும் உயர்ந்த வெளிப்பாடாக அதை ட்ரொட்ஸ்கிஸ்டுகள் விளக்கினர்.

முதலாளித்துவத்தின் ஸ்திரப்பாடு பற்றி பரப்பப்பட்டு வந்த பல்வேறு பிரச்சாரங்களுக்கு மத்தியிலும் இருபதாம் நூற்றாண்டில் மாபெரும் பொருளாதார மந்தத்தையும் இரண்டு ஏகாதிபத்திய உலக யுத்தங்களையும் சிருஷ்டித்த முரண்பாடுகளில் இருந்து முதலாளித்துவம் தலையெடுத்து விடவில்லை என்பதே நா.அ.அ.கு.வின் நிலைப்பாடாக விளங்கியது. நாணய நெருக்கடி ஒரு வரலாற்று திருப்புமுனையெனவும் அனைத்துலக ரீதியில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம், தொழில்கள் மீதான மோசமான தாக்குதலின் புதியதொரு காலப்பகுதி எனவும் அனைத்துலகக் குழு பிரகடனம் செய்தது.



அமெரிக்க சோசலிச சமத்துவக் கட்சி ரோம் ஹெனஹறனின் மறைவின் 20வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்திய கூட்டத்தில் அதன் துணைச் செயலாளர் ஹெலன் ஹெல்யாட் பேசுகின்றார்.

## இளைஞர், தொழிலாளர் தலைவர்

1973ல் தோழர்.ரொம் ஹெனஹறன் வேர்க்கர்ஸ் லீக்கில் சேர்ந்த போதும் அதன் உலக சோசலிசப் புரட்சி முன்நோக்கினை வரித்துக் கொண்ட போதும் அமெரிக்கத் தொழிலாளர் வர்க்கத்தினுள் மார்க்சிச அரங்கிற்கு வெற்றி கொள்வதற்கான முயற்சிக்கு பரந்த அரசியல் தளம் இருப்பதைக் கண்டார். அவர் வெகுவிரைவில் தொழிலாளர் வர்க்க இளைஞர் அரங்கிலும் தொழிலாளர் இயக்கத்தின் மிகவும் தீவிரமான போராளிகளிடையேயும் ஒரு தலைவராகினார்.

1974ல் தொழிற்சங்க அதிகாரத்துவங்களின் கட்டுப்பாடுகளையும் மீறி ஒரு தொடர்ச்சியான நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் வேலை நிறுத்தங்கள் வெடித்தன. தோழர்.ரொம் மேற்கு வெர்ஜீனிய நிலக்கரி வயல்களுக்கு பெருமளவில் பயணம் செய்தார். புலட்டீன் பத்திரிகையை விநியோகித்தார். தலைமைகளுடன் முரண்பட்டு நின்ற நிலக்கரி தொழிலாளர்களைச் சந்தித்தார். பின்னர் இளைஞர்களிடையேயும் புரூக்ளின் கடற்படை தளத்தைச் சேர்ந்த தொழிலாளர்களிடையேயும் நியூயோர்க் போக்குவரத்து அதிகார சபை தொழிலாளர்களிடையேயும் அரசியல் வேலைகளில் பரந்த அளவில் ஈடுபட்டார்.

ரொம் வேர்க்கர்ஸ் லீக்கின் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்ட் இயக்கத்தின் தலைவராகவும் பின்னர் கட்சியின் மத்திய குழு, அரசியல் குழு அங்கத்தவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். தொழில் ரீதியில் ஒரு அச்சகனாக பயிற்றுவிக்கப்பட்ட ரொம், கட்சி அச்சகத்திற்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டார்.

லூசியானாவில் ஒரு 16வயது கறுப்பு இன இளைஞனான ஹரி டெயிலர் பொய்க் குற்றச்சாட்டின் பேரில் மரண தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிராகவும் அவரை விடுதலை செய்யுமாறும் வேர்க்கர்ஸ் லீக்கும் இளம் சோசலிஸ்டுகளும் நடாத்திய பிரச்சார இயக்கத்தில் ரொம் ஹெனஹறன் ஒரு முக்கிய பாத்திரம் வகித்தார். அவர் இந்த மரண தண்டனையை எதிர்த்து ஹார்லம் ஊடாக ஒரு இளம் சோசலிஸ்டுகள் ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை நடாத்தினார்.ஹரி டெயிலர் வழக்குக்கு எதிரான பிரச்சாரத்தில் ரொம் ஈடுபட்டிருந்த வேளையிலேயே அவர் புரூக்ளின் நியூயோர்க்கில் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கான சூழ்நிலையை ஆராயும் போது அது அரசியல் ரீதியில் ஊக்குவிக்கப்பட்டது என்பது புரிகின்றது.

தோழர். ரொம் ஹெனஹறன் வாழ்க்கைமுறை இன்றைய தொழிலாளர், இளைஞர்களுக்கு ஒரு பெரும் முன்மாதிரியாகும். ரொம் அவரின் பல சமகாலத்தவர்களைப் போலல்லாது தமது போராட்டத்தை முன்னெடுக்க ஒரு விஞ்ஞானபூர்வமான கோட்பாட்டையும் விதிமுறையையும் கண்டுகொண்டார். அவர் எந்தக் கொள்கைக்காக 1977ல் தமது உயிரைத் தியாகம் செய்தாரோ அது இன்று 1990களில் மாபெரும் அரசியல் நிகழ்வுகள் மூலம் ருசுப்படுத்தப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம்: ஸ்டாலினிசத்தின் வீழ்ச்சி, அனைத்து மாபெரும் முதலாளித்துவ நாடுகளிலும் வர்க்கப் போராட்டங்களின் மறுமலர்ச்சி.

ரொம் ஹெனஹறன் ட்ரொட்ஸ்கிச இயக்கத்தில் சேர்ந்த பொழுது அவர் மத்தியதர வர்க்க தீவிரவாத குளறுபடிகளை எல்லாம் நிராகரித்தார்: எதிர்ப்பு அரசியல் முன்நோக்கு. இது அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் தாராண்மைக் கன்னையினரை சீர்திருத்தங்களையும் கறுப்பு தேசிய வாதத்தையும், மகளிர் விடுதலையையும் அமுல் செய்யுமாறு நெருக்குவதாக அமைந்திருந்தது. மாஓவாதம் போன்ற அரசியல் போக்கானது வர்க்கப் போராட்டத்தைக் காட்டிலும் விவசாயிகளை அடிப்படையாகக் கொண்ட கெரில்லா யுத்தங்களை மூன்றாம் உலக நாடுகளுக்கு முன்வைத்து வந்தது.

அன்று ஏதோ பலம் வாய்ந்தவை போல் தோன்றிய இந்த இயக்கங்களுக்கு இன்று என்ன நேரிட்டுள்ளது? ஸ்டாலினிசம் அழிந்து நாற்றம் கண்டுள்ளது. சோவியத் யூனியன் கலைக்கப்பட்டு, சீனாவில் முதலாளித்தும் மீள அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு எதிர்ப்பு இயக்கங்கள் சீரழிந்து போய்விட்டன. ஜனநாயகக் கட்சியின் தாராண்மைவாதம் ஒரு அக்கரைச் சங்கீதம் ஆகிவிட்டது. நலன்புரி அரசைத் தவிடுபொடியாக்க பில் கிளின்டன் குடியரசுக் கட்சிக்காரர்களுடன் இணைந்ததோடு இது நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த 25 வருட காலத்தினுள் தொழிலாளர் வர்க்கத்தின் பெரும்பான்மையினரின் வாழ்க்கைத் தரம் பெருமளவில் வீழ்ச்சி கண்டு விட்டது. இந்தப் போக்கு மேலும் தொடரும், மோசமடையும். இராட்சத வர்த்தக நிறுவனங்களின் அதிபர்கள் இந்நிலைப்பாட்டை வெளிவெளியாக முன்வைக்கின்றனர்.

தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் பூகோள ரீதியில் அணிதிரட்டுவது அவசியமும் சாத்தியமும் ஆகியுள்ளது. தனியார் இலாபத்துக்கு அல்லாது உழைக்கும் மக்களின் அவசியங்களுக்கு சேவை செய்யும் விதத்தில் சமுதாயத்தை மீளமைக்கப் போராட வேண்டியுள்ளது. தோழர் ரொம் ஹெனஹறன் இந்த முன்நோக்குக்காக தனது வாழ்க்கையை அர்ப்பணம் செய்தார்.அவர் இந்தப் போராட்டத்துக்கு பிரமாண்டமான தனிப்பட்ட தியாகங்களைச் செய்தார். இது அவரின் தனிப்பட்ட தரம் அல்லது வல்லமை பற்றிய பிரச்சினை அல்ல. இது அமெரிக்கன், அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்தின் அதிசிறந்த பாரம்பரியங்களை பிரதிநிதித்துவம் செய்தது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு சோசலிச சமத்துவக் கட்சிகளை தொழிலாளர் வர்க்கத்தின் புதிய சோசலிச அரசியல் கட்சிகளாக நிறுவியதன் மூலம் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தது. 'தொழிலாளர் பாதை' தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், மாணவர்கள் அனைவரையும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்வதன் மூலம் ரொம் ஹெனஹறனின் மார்க்சிச போராட்ட பாரம்பரியங்களை முன்னெடுக்குமாறு இந்த 20வது ஆண்டு நிறைவு வேளையில் வேண்டுகின்றது.


தோழர். ரொம் ஹெனஹறன் குடும்ப அங்கத்தவர்கள்

படிப்பகம்

www.padippakam.com



# பிரித்தானிய தொழிற் கட்சி பிராந்திய பிளவுகளுக்கு தூபம்

ஸ்கொட்லாந்துக்கும் வேல்சுக்கும் அதிகாரப் பரவலாக்கம் வழங்குவது தொடர்பாக பிரித்தானிய தொழிற்கட்சி அரசாங்கம் சமீபத்தில் நடாத்திய கருத்துக் கணிப்பு வாக்கெடுப்புக்கு ஆதரவாக அந்த இரண்டு பிராந்தியங்களிலும் கிடைத்த வாக்குக்கள், பிரிவினை உணர்வுகளுக்கு எண்ணெய் வார்ப்பதாக அமைந்துள்ளது.

ஸ்கொட்லாந்தில் நடந்த வாக்கெடுப்பில் சுமார் 75 வீதத்தினர் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட தனிப் பாராளுமன்றத்தை அமைப்பதற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். வேல்ஸில் தொழிற் கட்சியின் பிராந்திய சபையை அமைக்கும் திட்டம் குறிப்பிடத்தக்க பெரும்பான்மை ஆதரவினைப் பெற்றுக் கொள்ளாத போதிலும் அத்திட்டம் அமுலுக்கு விடப்பட உள்ளது.

அடுத்த வருடம் தொழிற் கட்சி லண்டன் மேயர் பதவியையும் ஒரு சபையையும் கூடவே திணிக்க எண்ணியுள்ளது. ஆனால் வேல்சில் அரசாங்கத்துக்கு கிடைத்த குறுகிய பெரும்பான்மை காரணமாக தொழிற்கட்சி அரசாங்கம் பிரித்தானியாவின் ஏனைய பாகங்களிலும் பிராந்திய சபைகளை அமைக்கும் தனது வேலைத்திட்டத்தை தற்காலிகமாக ஒத்திவைக்க நேரிட்டுள்ளது.

வாக்களிப்பில் கலந்து கொண்டவர்களின் குறைந்த அளவிலான எண்ணிக்கை - ஸ்கொட்லாந்து 60வீதம், வேல்ஸ் 50வீதம்- வாக்களர்களிடையே நிலவும் குழப்பத்தை எடுத்துக் காட்டுகின்றது. தொழிற் கட்சி அரசாங்கத்தின் அதிகாரப் பகிர்வு திட்டத்துக்கு தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் வேல்ஸ், ஸ்கொட்லாந்து தேசியவாதிகளும் பல்வேறு தீவிரவாதக் குழுக்களும் ஆதரவளிக்கின்றன. பிற்போக்கு கொன்சர்வேடிவ் கட்சி இதனை எதிர்த்து பிரச்சாரம் செய்கின்றது. பலர் வாக்களிப்பில் கலந்து கொள்ளாதுள்ளனர்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக வேலையின்மையும் வறுமையும் வளர்ச்சி கண்டுள்ள ஒரு நிலையில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் தேசியவாதத்துக்குத் தூபம் இடப்பட்டுள்ளதை வாக்கெடுப்பு சுட்டிக்காட்டியது. 1979ல் அதிகாரப் பகிர்வின் பேரில் ஸ்கொட்லாந்திலும் வேல்ஸிலும் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பு நிராகரிக்கப்பட்டது. சமீபத்தில் நடாத்தப்பட்ட கருத்துக்கணிப்புக்கான பிரச்சாரத்தில் தொழிற்கட்சியும் அதன் சகாக்களும் இந்த அதிகாரப் பகிர்வு சமூகச் சீர்திருத்தங்களை அமுல் செய்வதற்கான ஒரு புதிய அடிப்படையை வழங்கும் எனக் கூறிக் கொண்டனர். ஒரு ஸ்கொட்லாந்து பாராளுமன்றமோ அல்லது ஒரு வேல்ஸ் பேரவையோ (Assembly) தொழிலாளர்கள் தமது சொந்த வாழ்க்கையை நிர்ணயம் செய்வதிலும் தொழில், சம்பளம், சமூக சேவைகளைக் காப்பதிலும் பரந்த அதிகாரங்களை வழங்கும் என்றனர்.

இது உண்மைக்கு அப்பாற்பட்டதாகும். தொழிற் கட்சி ஆட்சியாளர்கள் மக்களுக்கு இடையே பிரிவினை, தேசியவாத உணர்வுகளுக்கு தூபம் போடுகின்றனர். பொதுச் சேவை செலவினங்கள் வெட்டப்பட்டும் சுகாதார, கல்வி சேவைகளுக்கான உரிமைகள் ஒழிக்கப்பட்டும் வருகையிலேயே இதனை அது செய்கின்றது. டொனி பிளேயரின் இன்றைய தொழிற் கட்சி அரசாங்கம் அடுத்த செலவு வெட்டுக்களுக்கான பொறுப்பினை இந்தப் புதிய அதிகாரப் பகிர்வின் மூலம் பிராந்திய சபைகளை அமைத்துச் சாதிக்கப் பார்க்கின்றது.

இந்த பிராந்திய சபைகள் அமைக்கும் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்துக்கு எதிரான அதிகாரபூர்வமான பிரச்சாரத்தினை ஜூலியன் ஹொட்ஜ் போன்ற கோடீஸ்வரர்களும் கொன்சர்வேடிவ் கட்சியும் முன்னெடுத்தன. அவர்களின் நிலைப்பாடு என்ன தெரியுமா? இந்த அதிகாரப் பகிர்வு ஏகாதிபத்திய சகாக்களுடனான அவர்களின் போட்டியிடும் வல்லமையை பலவீனமாக்கி, அரசியல் ஸ்திரமற்ற நிலையைத் தோற்றுவித்துவிடும் என்பதாகும்.'

பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சி தொழிற்கட்சியின் கருத்துக் கணிப்பை எதிர்த்தது. இந்த இரண்டு குழுக்களில் எதுவின் பின்னாலும் அணிதிரளக் கூடாது என அது தொழிலாளர்களைக் கேட்டுக் கொண்டது. ஆகஸ்ட் 16ம் திகதி சோசலிச சமத்துவக் கட்சி வெளியிட்ட அறிக்கை கூறியதாவது : "இன்றைய சமூக பேரழிவுக்கான பதில் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் பிரிவினைவாத உணர்வுகளை ஊக்குவிப்பதும் தொழிலாளர் வர்க்கத்தைக் கூறுபோடுவதும் அல்ல; ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் அதிகாரங்களும் கோரிக்கைகளும் பலவீனமடைந்து போகமாட்டாது. மாறாகப் பலமடையும். தொழிலாளர்கள் பிரிக்கப்படுவர். அவர்களைச் சுரண்டும் பிரித்தானிய ஆளும் வர்க்கத்தின் வல்லமை அதிகரிக்கும்." என்றது.

அதிகாரப் பரவலாக்கத்துக்கும் தேசிய பிரிவினைக்குமான கோரிக்கைகள் மத்தியதர வர்க்கத்தினதும் பெரும் வர்த்தக நிறுவனங்களதும் ஒரு பகுதியினரின் நலன்களில் இருந்தே எழுந்துள்ளன. ஸ்கொட்லாந்து, வேல்ஸ் பொருளாதாரங்களின் விரைவாக முன்னேறும் பாகங்களை கூறுபோட்டு ஐரோப்பிய வர்த்தகக் கூட்டினுள் சேர்த்துக் கொள்ள துடிக்கின்றனர். கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம் பெறும் உற்பத்தியின் பூகோளமயமாக்கமும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் வளர்ச்சியும் பிரித்தானியாவை பொருளாதார ரீதியில் துண்டாடத் தூண்டியுள்ளன. ஒவ்வொரு பிராந்தியமும் மற்றையதுடன் அனைத்துலக முதலீட்டுக்காகப் போட்டியிட்டுக் கொண்டுள்ளன.

## இஸ்லாமிய இயக்கத் தலைவர் கொலை முயற்சி தோல்வி

# மத்திய கிழக்கு நெருக்கடி உக்கிரம்



பெஞ்சமின் நெத்தானியாகு



யசீர் அரபாத்



மன்னர் ஹுசைன்

ஜோர்தானைத் தளமாகக் கொண்ட ஹமாஸ் இஸ்லாமிய இயக்கத்தின் தலைவர் காலித் மெஷாலைக் கொலை செய்ய இஸ்ரேலிய உளவு ஏஜன்சியான மொசாட் எடுத்த முயற்சி தோல்வி கண்டதோடு பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாவின் அரசாங்கம் பெரும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. இது கூடவே யசீர் அரபாத்தின் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆளுமையை பலவீனம் காணவைத்த இஸ்லாமிய அடிப்படைவாதிகளின் கரங்களைப் பலம்பெறச் செய்துள்ளது.

ஜோர்தானின் தலைநகரான அம்மானில் கடந்த செப்டம்பர் 25ம் திகதி கனடியன் உல்லாசப் பயணிகளாக வேடம் பூண்ட இரண்டு மொசாட் ஏஜன்டுகள் காலித் மெஷாலின் உடம்பில் வெளிவாரி காயங்கள் ஏதும் ஏற்படாத விதத்தில் ஒரு வகை நச்சு இரசாயனத்தை தடவிக் கொலை செய்ய முயற்சித்தனர். இந்த முயற்சி தோல்வியில் முடிந்ததோடு இரு மொசாட் ஏஜன்டுகளும் ஜோர்தான் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

இந்தக் கொலை முயற்சி மொசாட் இரகசிய ஏஜன்டுகளால் நீண்ட காலமாக மிகவும் அந்தரங்கமான விதத்தில் பாலஸ்தீனியர்களுக்கும் அராபியர்களுக்கும் எதிராக கையாளப்பட்ட கொலைகார, பயங்கரவாத நடவடிக்கையாகும். இந்தப் பாணியில் 1950பதுகளில் மொராக்கோ தேசியவாத, தொழிலாளர் தலைவர் எல் மஹதி பென்பார்க்கா கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டது. 1988ல் பீ.எல்.ஓ.தலைவர் அபு ஜிகாத் டுனிஷியாவில் கொலை செய்யப்பட்டதில் இருந்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் மால்டா ஹோட்டலில் இஸ்லாமிக் ஜிகாத் தலைவர் பாத் ஷகாகி கொலை செய்யப்பட்டது வரை எண்ணற்ற பயங்கரவாத நடவடிக்கைகளில் மொசாட் ஈடுபட்டிருந்தது.

ஒரு பாலஸ்தீனிய இஸ்லாமிய இயக்கத் தலைவரை ஜோர்தானில் வைத்து கொலை செய்ய எடுத்த முயற்சி. அரசியல் ரீதியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. மன்னர் ஹூசேயினின் அரசாங்கம் தனது சொந்த இஸ்லாமிய இயக்கத்தின் சவால்களுக்கு உள்ளாகி வந்த ஒரு நிலையில் முதலில் இந்த மொசாட் சதியை மூடி மறைக்க முயன்றது. காலிட் மெஷாலுக்கு எதிரான கொலைச் சதியை ஒரு சிறிய தெருச் சண்டை என்ற வகையில் சித்தரித்துக் காட்ட ஹூசெயின் அரசாங்கம் முயன்றது. ஆனால் திரையின் பின்னணியில் சில விடயங்கள் இடம் பெற்றுவந்தன. ஹமாஸ் இயக்கத் தலைவரைக் கொல்ல மொசாட் பாவித்த நச்சுத் திரவத்தினையும் அவரின் உயிரைக் காக்க கூடிய மருந்தினதும் பெயரையும் தராது போனால் மொஷாட் ஏஜன்டுகளைத் தூக்கிலிடப் போவதாகவும் இஸ்ரேலுடனான இராஜதந்திர உறவுகளை முறித்துக் கொள்ளப் போவதாகவும் ஜோர்டான் அரசாங்கம் மிரட்டியது.


இஸ்ரேலிய பிரதமர் நெத்தானியாஹு மற்றும் உயர்தர அதிகாரிகளுடன் மிகவும் அந்தரங்கமான முறையில் ஜோர்டான் சென்றார். முதலில் அவர் அது "அரச இரகசியம்" எனக் கூறி இந்த தகவல்களை வழங்க மறுத்துவிட்டார். ஜோர்தானுக்கு இந்த உயிர்காக்கும் மருந்தினை அனுப்புவதாக மட்டும் வாக்குறுதி அளித்தார். இந்த மருந்து ஹமாஸ் தலைவரை அடியோடு தொலைத்துக்கட்டும் படுமோசமான மருந்தாகவும் இருக்கலாம் என அஞ்சி இதற்கு ஜோர்டானிய அதிகாரிகள் இணங்க மறுத்துவிட்டனர்.மன்னர் ஹூசெயினது தொடர்ச்சியான அச்சுறுத்தல்களாலும் வாஷிங்டனின் நெருக்குவாரங்களின் அதிகரிப்பினாலும் இஸ்ரேல் பிரதமர் வேண்டிய தகவல்களை வழங்க இணங்கினார்.

இந்த 'மெஷால் விவகாரம் தோல்வி கண்டதைத் தொடர்ந்து இஸ்ரேலுக்கும் ஜோர்டானுக்கும் இடையே ஒரு இரகசிய ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது என்பதை இரண்டு அரசாங்கங்களும் நிராகரித்தன.இதைத் தொடர்ந்தே இஸ்ரேல் சிறையில் ஆயுள் சிறைத் தண்டனைக்கு உள்ளாகி இருந்த ஹமாஸ் இயக்க ஸ்தாபகரான ஷெயிக் அஹமத் யசின் விடுதலை செய்யப்பட்டார். அவர் முதலில் ஜோர்தானுக்கு சென்றார். அங்கிருந்து காஸா பகுதிக்கு சென்ற அவருக்கு வீர வரவேற்பு வழங்கப்பட்டது. இவரோடு மேலும் 20 பாலஸ்தீனிய சிறைக் கைதிகளும் சியோனிச ஆட்சியாளர்களால் விடுதலை செய்யப்பட்டனர். இதே வேளையில் நெத்தானியாவின் சியோனிச அரசாங்கம் பாலஸ்தீனியர்களைக் கொலை செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இஸ்ரேலிய சிறையில் இருந்து வந்த பல சியோனிச கொலைக் குற்றவாளிகளையும் விடுதலை செய்தது. பாலஸ்தீனிய கைதிகள் இஸ்ரேலில் விடுதலை செய்யப்பட்டமை ஜோர்டானில் கைதான மொஷாட் கொலைகார ஏஜன்டுகள் பிரச்சினை இல்லாது இஸ்ரேல் திரும்புவதை ஊர்ஜிதம் செய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நெருக்கடியின் தாக்கம் அரபாத் தலைமையிலான பாலஸ்தீனிய அதிகாரிகளையும் பெரிதும் பாதித்துள்ளது. இது காஸாவிலும் மேற்குக் கரையிலும் உள்ள ஹமாஸ் இயக்க ஆதரவாளர்களுக்கு எதிராக அரபாத்தின் பாதுகாப்புப் படையினர் பாய்ந்து விழுந்துள்ள ஒரு கட்டத்தில் இடம்பெற்றுள்ளது. ஹமாஸ் இயக்க அங்கத்தவர்களின் கைதும் அந்த இயக்கத்தினர் நடாத்தி வந்த அமைப்புக்களும் பீ.எல்.ஓ..அதிகாரிகளால் இழுத்து மூடப்பட்டுள்ளது. இது இஸ்ரேலின் மீதான ஒரு தொகை பயங்கரவாத குண்டுவீச்சுக்களைத் தொடர்ந்து அமெரிக்க, இஸ்ரேலிய ஆட்சியாளர்களின் நெருக்குவாரங்களின் கீழேயே இடம்பெறுவதாக நம்பப்படுகின்றது. யசீனையும் இஸ்லாமிய குழுவைச் சேர்ந்த அங்கத்தவர்களையும் இஸ்ரேல் விடுதலை செய்தமை, அரபாத் ஆட்சியாளர்களை மீண்டும் பின்வாங்கத் தள்ளியுள்ளது. ஹமாஸ் தலைவரை ஜோர்டானிடம் கையளித்தமை மன்னர் ஹூசெயினின் அந்தஸ்தை பலப்படுத்துவதாக தோன்றுகின்றது. இஸ்லாமிய இயக்கத்துடன் ஒரு கூட்டினை ஏற்படுத்திக் கொள்வது பீ.எல்.ஓ.வின் ஆளுமையை சவால் செய்யவும் இஸ்ரேலுடனான பேச்சுவார்த்தைகளில் அதற்கு ஒரு பதிலீட்டைத் திணிக்கவும் செய்யும் ஒரு முயற்சியாகும் என அரபாத் ஜோர்டானிய மன்னரை இடைவிடாது குற்றம் சாட்டி வருகின்றார்.

படிப்பகம்

www.padippakam.com


தோட்டத் தொழிலாளர்கள் வாழும் லயின் அறைகள் (இடது)


தோட்டத் துரையின் மாளிகை (வலது)

# தோட்டத் தொழிலாளர் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எப்படி?

ஏ. சாந்தகுமார்

இந்நாட்டின் ஜனத்தொகையில் நூற்றுக்கு 8 வீதத்தினரான தோட்டத் தொழிலாளர்கள் மத்திய, ஊவா, சப்பிரகமுவ, மேற்கு, வடமேல் மாகாணங்களில் உள்ள 25 தனியார் கம்பனிகளுக்குச் சொந்தமான தோட்டங்களிலும் இன்னமும் அரசாங்கத்திடம் இருந்துவரும் சிறிய தோட்டங்களிலும் வசிக்கிறார்கள். முன்னர் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் கைகளில் இருந்துவந்த இந்தத் தோட்டங்கள் 1972ல் அரசுடமையாக்கப்பட்டன. இன்று இவற்றை மீண்டும் தனியார் கம்பனிகளின் கைக்குள் தள்ளும் நடவடிக்கைகள் பூர்த்தி அடையும் நிலையில் உள்ளன.

தோட்டங்களில் வசிக்கும் மக்களில் நூற்றுக்கு 94வீதத்தினர் தொழிலாளர்கள். தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டின் முழுத் தொழிலாளர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கினர். தோட்டங்களில் இருந்து கிடைக்கும் வெளிநாட்டுச் செலாவணி இன்னமும் முழுச் செலாவணியில் நூற்றுக்கு 50வீதமாக உள்ளது. 1976 க்கு முன்னர் இது 76வீதமாக விளங்கியது. இலங்கையினுள் தோட்டத் தொழிலாளர்கள் நீண்ட வரலாறு படைத்த உற்பத்தி நடவடிக்கையில் நீண்டகாலமாக ஈடுபடுத்தப்பட்டு வரும் தொழிலாளர் குழுவாக உள்ளனர். இலங்கையின் அனைத்து மக்களதும் வடுதலைக்கான போராட்டத்தை முன்னெடுக்க தோட்டத் தொழிலாளர்களும் மற்றும் தொழிலாளர்களும் ஒன்றுபட்டாக வேண்டும்.

இலங்கைத் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் ஆரம்ப காலத்தில் இருந்தே தோட்டத் தொழிலாளர்களையும் நகர்ப்புறத் தொழிலாளர்கள் உட்பட்ட மற்றும் தொழிலாளர்களையும் பிளவுபடுத்த படுகொடூரமான தாக்குதல்களை நடாத்தியது. 1949ல் தோட்டத் துறையில் தமிழ் பேசும் தொழிலாளர்களின் குடியுரிமையை ஒழித்துக் கட்டுவதற்காக நடாத்திய தாக்குதல் அத்தகைய ஒரு கொடிய தாக்குதலாகும். அதனை எதிர்த்து அன்று போராடியது தோட்ட, நகர்ப்புறத் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக ஐக்கியத்துக்காகப் போராடிய போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியேயாகும். பிற்காலத்தில் இக்கட்சியின் தலைவர்கள் அந்தப் போராட்டத்தைக் கை கழுவிவிட்டுவிட்டனர். இந்தப் பிளவின் மூலம் தோட்டத் தொழிலாளர்களை மோசமான சுரண்டலுக்கு உள்ளாக்கிய ஆளும் வர்க்கம், முழுத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் மீதும் ஒடுக்குமுறை முதலாளித்துவ வர்க்க ஆட்சியை நடாத்த அதைப் பயன்படுத்திக் கொண்டது.

சிங்கள முதலாளித்துவத் தலைவர்கள் இந்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு தோட்டத் தொழிலாளர்களிடையே வேரூன்றிய தொழிற் சங்கத் தலைவர்களின் முண்டு கிடைத்தது. இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணி தலைவர்கள் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் பதுங்கிக் கொண்டுள்ளனர். மறுபுறத்தில் முதலாளி வர்க்கத்தினையும் சிங்கள இனவாதிகளையும் தூக்கிப் பிடிக்கும் விதத்தில் மலையகத்துக்கு தனி ஆட்சி வேண்டும் என்ற கோஷத்தையும் எழுப்பி வருகின்றனர்.

இ.தொ.கா.தலைவர்கள் முதலாளித்துவ அரசாங்கங்களினுள் நுழைந்து கொண்டதன் மூலம் குடியுரிமை உட்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு கண்டு விட்டதாக கூப்பாடு போடுகின்றனர். ஆனால் 1949ல் குடியுரிமை பறிக்கப்பட்ட மக்கள் அந்த உரிமை வழங்கப்பட்டுவிட்டதாக கூறப்பட்டதன் பின்னரும் தொடர்ந்தும் அந்த உரிமைகளற்ற இரண்டாந்தர பிரஜைகளாகவே இருந்து வருகின்றனர். 160,000 மக்களுக்கு பெயரளவில் தன்னும் இந்த உரிமை கிடையாது. இந்திய, இலங்கை அரசாங்கங்கள் இந்தத் தொழிலாளர்களை நசுக்கும் பொருட்டு இடைக்கிடையே உடன்படிக்கைகளும் செய்து கொள்கிறார்கள். தோட்டத் தொழிலாளர்கள் இன்றும் கூட நிர்வகிக்கப்படுவது ஏனைய தொழிலாளர்களுக்கு செல்லுபடியான சட்டவிதிகளால் அல்ல. இன்னமும் இந்தியத் தொழிலாளர் சட்டதிட்டங்களின் கீழ் இருந்து வரும் அவர்களுக்கு ஏனைய தொழிலாளர்களுக்கு கிடைக்கும் சம்பள உயர்வுகள் கூடக் கிடைப்பது இல்லை. இன்றைய தோட்டத் தனியார்மயத்தின் கீழ் அவர்கள் முகம் கொடுக்கும் ஜனநாயக உரிமைகள் தொழில், சம்பளம், நலன்புரி பிரச்சினைகள் மோசமடைந்துள்ளன.

## 24 மணியும் கட்டுப்பாடு

அன்று தொடக்கம் இன்றுவரை தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்கும் ஒரு முக்கிய அடிப்படைப் பிரச்சினை வீடில்லாப் பிரச்சினை. ஏனைய தொழிலாளர்களைப் பொறுத்த மட்டில் வேலை நேரத்தில் அவர்கள் முதலாளித்துவ எஜமானனின் ஆணைக்கு கட்டுப்பட்டுள்ளனர். ஆனால் தோட்டத் துறையில் தொழிலாளர்கள் வீடுகளின் உரிமை தோட்டத்துக்கு உரியதாக இருந்துவருவதால் அதை நிர்வகிக்கும் முதலாளி தோட்டத் தொழிலாளியின் முழு வாழ்க்கையையும் 24 மணித்தியாலத்தையும் கட்டுப்படுத்தும் உரித்தைக் கொண்டுள்ளான்.

தோட்ட வீடுகளின் இலட்சணங்களைப் பாருங்கள். நூற்றுக்கு 98 வீதத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வசிப்பது பல தசாப்தங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட 16 8 அடி அல்லது 12 10 அடி கொண்ட லயின் அறைகளில் ஆகும். இந்த அறையில் பெற்றோர், திருமணமான பிள்ளைகள், ஏனைய குழந்தைகள், முதியோர் ஆகியோர் ஒன்றாக ஜீவிக்கத் தள்ளப்பட்டுள்ளனர். இந்தத் தொழிலாளர் தனிப்பட்ட வாழ்க்கையை ஓட்டுவதற்கு எதுவிதமான இடமும் கிடையாது. கூரைகளும் சுவர்களும் தகர்ந்து போன இந்த அறைகள் அசுத்தமான சாக்கடைகளால் சூழப்பட்டுள்ளன. எவ்வளவுக்கு எவ்வளவு குடும்பம் அதிகரிக்கின்றதோ அந்தளவுக்கு லயின் அறைகள் சீரமைக்கப்படுவதில்லை. இருக்கின்றவற்றுக்கு அயலில் கொட்டில் போன்றவற்றை தொழிலாளர்கள் அமைத்துக் கொள்கின்றார்கள். இத்தகைய கொட்டில் அறைகளை அமைத்துக் கொண்ட தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகிகளால் வேலை இடைநிறுத்தப்பட்டு வருடக் கணக்காக வேலை இல்லாமல் வாழ்கின்றார்கள்.

இத்தகைய சட்ட விரோதமான வேலை நீக்கங்களுக்கு உள்ளான தொழிலாளர்கள் நீதிமன்றம் சென்றால் அங்கு கிடைப்பது தோட்ட நிர்வாகிகளுக்கு சாதகமான தீர்ப்பேயாகும். சில வேளைகளில் மாவட்ட நீதிமன்றங்கள் தொழிலாளர்களுக்குச் சாதகமான தீர்ப்பை வழங்கினாலும் தோட்ட நிர்வாகிகள் அவற்றை குப்பைக் கூடையில் வீசிவிடுகின்றார்கள்.தொழிற்சங்க அதிகாரிகள் இந்தத் தொழிலாளர்களை அடியோடு ஒதுக்கி விட்டுள்ளனர். தொழிலாளர்கள் தற்காலிகமாக அமைத்துக் கொண்டுள்ள கொட்டில்களின் எண்ணிக்கை 22410 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர் வீடுகளில் நூற்றுக்கு 58 வீதத்துக்கு மலசலகூட வசதிகள் கிடையாது. நூற்றுக்கு 98 வீதத்துக்கு மின்சார வசதிகள் கிடையாது. லயின் அறைகளின் யன்னல்கள் மழை, பூச்சி காரணமாகப் பூட்டப்பட்டு உள்ளன. அவற்றுக்கு வெளிச் சோட்டமே கிடையாது. நாள் பூராவும் உழைத்துக் களைத்த பெண் தொழிலாளர், உணவு தயாரிக்கச் சென்றால் புகைமண்டலத்தைச் சகிக்க முடியாத நிலைமைக்குத் தள்ளப்படுகின்றாள். நூற்றுக்கு 98 வீதமான அறைகள் மண்ணினால் கட்டப்பட்டவை. இதனால் மழையினாலும் நிலம் ஊறுவதாலும் அசுத்தம் அடைகின்றது. தோட்டத் தொழிலாளர்களின் உடல், உள நிலைமை பாதிக்கப்படுவதற்கு "வீடுகளின்" இந்த நிலைமை ஒரு முக்கிய காரணியாகும்.

தோட்டத்துறை தோட்டங்களில் நூற்றுக்கு 55 வீதமானவை நுவரெலியா, பதுளை, கண்டி, மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளன. இவை தேயிலைத் தோட்டங்கள். அநேகமாக இவை ஒரே தொடர்ச்சியாக அமைந்துள்ளன.சில தோட்டங்களின் நடுவில் சிறிய கிராமங்கள் உள்ளன். 1970பதுகளில் இருந்து ஏழைக் கிராமப்புற மக்களை தூண்டிவிடும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட புதிய கிராமங்களையும் தோட்டங்களின் நடுவில் காணமுடியும். இந்தத் தோட்டங்களில் வசிக்கும் மக்களின் எண்ணிக்கை சுமார் 8 இலட்சமாகும்.

இரத்தினபுரி, மொனராகலை, கேகாலை மாவட்டங்களில் பெருமளவுக்கு இறப்பர் தோட்டங்கள் அமைந்துள்ளன. இங்குள்ள தொழிலாளர்களில் நூற்றுக்கு 80வீதமானோர் தோட்டங்களில் வசிக்கின்றனர். கிராமங்களில் இருந்து வேலைக்கு வருவோர் நூற்றுக்கு 20 வீதத்தினரே. இவர்களால் பராமரிக்கப்படுவோர் உட்பட முழுச் சனத்தொகை சுமார் 4 இலட்சமாகும்.

கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, கம்பஹா, புத்தளம், குருணாகலை மாவட்டங்களில் இறப்பர் , தெங்கு செய்கை பண்ணப்படுகின்றது. இத்தோட்டங்களின் உள்ளேயும் அயலிலும் வயல்களும் கிராமங்களும் உள்ளன. நூற்றுக்கு 60வீதமான தொழிலாளர்கள் தோட்டங்களில் வசிக்கின்றார்கள்.நூற்றுக்கு 40வீதமானோர் கிராமங்களில் இருந்து

படிப்பகம்

வேலைக்கு வருகின்றார்கள். இங்கு ஜனத்தொகை இரண்டரை இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தோட்டப் பகுதி முழுவதிலும் 4 இலட்சம் குடும்பங்கள் வாழ்கின்றன.

தோட்டப்பகுதியில் வசிப்பிடங்கள் வருமாறு :

| | |
|---|---|
| இரட்டை லயின் அறைகள் | 104556 |
| ஒற்றை லயின் அறை | 108825 |
| தற்காலிக குடிசைகள் | 22410 |
| கொட்டில்கள் (இரட்டை) | 30600 |
| தற்காலிக வீடுகள் | 35100 |

இவற்றில் ஓரளவில் மனித வாழ்க்கைக்கு ஏற்றவை எனக் கூறக் கூடியது சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் அமைக்கப்பட்ட( இரட்டை )வீடுகளையே . அவற்றை நல்ல நிலைக்குக் கொணர வேண்டுமானால் மேலும் வசதிகள் வழங்கப்பட வேண்டும். ஏனையவை மனித வாழ்க்கைக்கு எந்த விதத்திலும் இலாயக்கான நிலையில் இல்லை. சிங்களக் கிராமங்களில் இருந்துவரும் சுமார் 35100 குடும்பங்கள் தோட்டங்களுக்கு அருகே -தாழ் மலைப் பகுதியில் மணல் குடிசைகள் அமைத்துக் கொண்டுள்ளனர்.

தோட்டங்களில் லயின் முறையை ஒழிக்கும் மசோதா 1950பதுகளில் கொணரப்பட்டுள்ளது . ஆனால் அது சட்ட்பீ புத்தகத்தில் ஒட்டறை பிடித்துக் கொண்டுள்ளது. 1912 பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட இந்தியத் தொழிலாளர் சட்டத்தில் தொழிலாளர் நோய்கள் பற்றிய சட்ட விதிகளில் ஒரு கணவன், மனைவி, குழந்தை இருந்தால் தனி லயன் காம்பரா வழங்கப்பட வேண்டும் எனக் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இது வரையும் இத்தகைய லயன் அறைகளில் மூன்று குடும்பங்கள் வீதம் வாழ்கின்றன.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பிரகடனம் இலக்கம் 110 சரத்து 86ல் பெருந்தோட்டத் துறை தொழிலாளர்களுக்கு வசதியான வீடுகள் வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐ.நா.சபை 1987ம் ஆண்டை வீடமைப்பு ஆண்டாகப் பிரகடனம் செய்தது. இவை எல்லாம் ஏனைய மக்களைப் போலவே தோட்டத் தொழிலாளர்களின் கண்களிலும் மண்போட முதலாளி வர்க்கம் கையாண்ட மோசடிகளாகும்.

இந்நிலைமையினுள் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கம் இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி அமைப்புக்களின் தலைவர்களையும் சேர்த்துக் கொண்டு, தோட்டங்களின் வீடில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் பேரில் புதிய மோசடிகளில் இறங்கியுள்ளது. இந்த வேலைத் திட்டங்களை நடைமுறைப் படுத்தும் பேரில் "தோட்டத்துறை வீடமைப்பு நலன்புரி நிதியம்" என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை அமைத்துள்ளதோடு அதன் கீழ் சகல தோட்டங்களிலும் வரையறுக்கப்பட்ட தோட்டப் பணியாளர் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது எனவும் இதை விளக்கும் விதிகள் கொண்ட புத்தகம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. அதன் மூலம் இந்தக் "கூட்டுறவு" சாதிக்கப் போவது என்ன என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்த வீடமைப்புக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் தேர்ந்தெடுக்கப்படப் போவது அங்கத்தவர்கள் மூலம் அல்ல. உத்தியோகபூர்வ ரீதியில் தோட்ட சுப்பிரென்டன்ட் இந்த சங்கத்தின் தலைவராக விளங்குவார். பிறப்பு முதல் இறப்பு வரை தோட்டத் தொழிலாளர்களை நிர்வகிக்கும் இந்தச் சுப்பிரென்டன்ட்தான் சங்கத்தின் தலைவராக இருப்பாரேயானால் இந்தப் பழைய வீடமைப்புத் திட்டமே புதிய பெயரில் அழைக்கப்படப் போகின்றது. அவ்வளவுதான். காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்து தொழிலாளர்களை நிர்வகிக்கக் கையாண்ட தந்திரங்களை தொடர்ந்தும் கையாள ஆட்சியாளர்கள் தயாராகி வருகின்றார்கள்.

மறுபுறத்தில் இந்த கூட்டுறவுச் சங்கங்கள், தொழிலாளர்களிடம் இருந்து பணம் அறவிடும் வீடமைப்புத் திட்டத்துக்கு தொழிலாளர்களை கீழ்ப்படுத்தும் வகையில் இயங்கும்.

## வாக்குறுதிகள்

1993 மேயில் நடைபெற்ற மாகாண சபைகளுக்கான தேர்தலில் தோட்டத் தொழிலாளர்கள் வசித்துவந்த வீடுகளை அவர்களுக்கே வழங்குவதாக அரசாங்கமும் இ.தொ.கா.வும் கூறிக் கொண்டன. 1994 பொதுத் தேதல் காலத்தில்(ஜூலை17) யூ.என்.பி.யும் இ.தொ.கா.வும் நுவரெலியாவில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் தொழிலாளர்களின் வசிப்பிடங்களையும் மரக்கறித் தோட்டங்களையும் தொழிலாளர்களுக்கே வழங்குவது என இதை மேலும் புதுப்பித்துக் கொண்டனர். இன்று இ.தொ.கா.வும் மலையக மக்கள் முன்னணியும் மற்றும் தொழிற் சங்கங்களும் தொழிலாளர்களுக்கு லயின் அறைகளையும் மரக்கறித் தோட்டங்களையும் கையளிக்கும்படி குரல் எழுப்புவது முன்னர் இப்படி ஒரு வாக்குறுதியையே தாம் வழங்காதவர்கள் போலாகும்.இவர்களின் இந்தப் "பிரச்சாரம்" அரசாங்கத்தையும் தனியார் தோட்டக் கம்பனிகளையும் காப்பாற்றும் ஒரு இயக்கம்ரீகும். தொழிலாளர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுக்கும் பொறுப்பில் இருந்து அரசாங்கத்தையும் முதலாளித்துவத் தோட்டக் கம்பனிகளையும் காக்கும் பொருட்டு ஏற்கனவே உடைந்து, தகர்ந்து போன லயின் அறைகளை தொழிலாளர்களின் தலைகளில் கட்டி அடிக்கத் தொழிற்சங்கத் தலைவர்கள் தயாராகி வருகின்றனர்.புதிய வீடுகளை கட்டிக் கொடுக்க ஏற்படும் செலவை பார்த்தால் இப்போதுள்ள லயின் அறைகளை தொழிலாளர்களுக்கு கொடுத்துவிடுவதே அரசாங்கத்திற்கும் கம்பனிகளுக்கும் இலாபமாகும் என தொழிற்சங்கத் தலைவர்கள் கணித்துக் கொண்டுள்ளனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கம் இதற்கிடையே தோட்டத் தொழிலாளர்களின் கண்களில் மண் போடும் இன்னொரு நடவடிக்கையாக பெருந்தோட்டக் கைத்தொழில் வீடமைப்பு பிரதி அமைச்சர் ஒருவரையும் நியமனம் செய்துள்ளது. இதன் கீழ் இடைக்கிடையே தோட்டத் தொழிலாளர்கள் சிலருக்கு காணிகளை வழங்கி, வீடுகளைக் கட்ட கடன் வழங்குவது ஆரம்பமாகி உள்ளது. இந்தக் கடன் சுமார் ரூபா.20,000 ஆகும். இன்று கட்டிடப் பொருட்களின் விலையைப் பார்க்கும் போது இப்பணத்தைக் கொண்டு நல்ல ஒரு மாட்டுத் தொழுவத்தைக் கூடக் கட்டிக் கொள்ள முடியாது. 20 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு ஆரோக்கியமான வீட்டை நிர்மாணிக்க சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவாகியதாகக் கூறப்படுகின்றது. தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் கடன் பணத்தைக் கொண்டு வீடு அமைப்பது எப்படி?

தோட்ட வீடமைப்புத் திட்டத்தை தயார் செய்ய அரசாங்கத்தின் பல்வேறு துறையினரும் செயற்பட்டு வருவதாக இடைக்கிடையே பகிரங்கமாகக் குறப்பட்டு வந்தது. வீடமைப்பு அமைச்சு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, நிதி அமைச்சு சுகாதார அமைச்சு, கூட்டுறவு அமைச்சு, ஆகியவை இவையாகும். இவை அத்தனையும் போதாது என்று பெருந்தோட்டத்துறை வீடமைப்பு அமைச்சு என்று வேறொன்றும் அமைக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்காமல் அதை ஆதாளபாதாளத்தில் தள்ளிவிடும் மோசடிகள்! தோட்டத் தொழிலாளர் தொடர்ந்தும் லயின் அறைகளிலேயே ஜீவியம்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு வேண்டியது உடைந்து தகர்ந்து போன பழைய லயின் அறைகளின் உரித்தோ அல்லது புதிய பெயர்களில் இடத்துக்கு இடம் கட்டப்படும் லயின் அறைகளில் இருந்து மாறுபடாத "வீடு" களின் உரித்தோ அல்லது உறுதியோ அல்ல. அவர்களுக்கு நாகரீகமான வாழ்க்கைக்கு உகந்த வீடுகள் அவசியம்.

இலாபம் கறப்பதை இலக்காகக் கொண்ட இந்த அமைப்பின் கீழ் அத்தகைய நாகரீகமான வீட்டைப் பெற்றுக் கொள்ள முடியாது. இது காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இருந்து முதலாளித்துவ அரசாங்கங்களின் ஆட்சிகள் ஊடாக இன்று தனியார் கம்பனிகளின் கீழ் கொணரப்பட்டுள்ள தோட்டத் தொழிலாளர்கள் பெற்றுக் கொண்டுள்ள தீர்க்கமான அனுபவம் ஆகும். தோட்டத் தொழிலாளர்களின் ஜனநாயக உரிமைகள் ஒழித்துக் கட்டப்பட்டுள்ள ஒரு நிலைமையில் அவர்களின் வாழ்க்கைத் தரமும் மற்றும் உரிமைகளும் படு கொடூரமான முறையில் நசுக்கப்பட்டுள்ளன. இன்று மீண்டும் ஒரு தடவை தனியார் கம்பனிகளின் கைக்குத் தோட்டங்கள் கைமாறியிருப்பது நவீன தொழில் நுட்பத்தை பாவித்து இலாபச் சுரண்டலை பிரமாண்டமான மட்டத்துக்கு உயர்த்தியுள்ள ஒரு நிலையிலாகும். தொழிலாளர்களை பெருமளவில் தோட்டங்களில் இருந்து வேலை நீக்கம் செய்வதும். சிறிய அளவிலான தொழிலாளர்களிடம் வேுலை துரிதப்படுத்தல் மூலம் உபரி உழைப்பை மோசமான முறையில் கசக்கிப் பிழிந்து கொள்வதுமே கம்பனிகளின் நோக்கம். கடந்த இரண்டு ஆண்டுகளிலும் தோட்டக் கம்பனிகள் பிரமாண்டமான இலாபத்தை கசக்கிப் பிழிந்து கொண்டுள்ளன. தொழிலாளர்களுக்கு பெயரளவில் இருந்து வந்த நலன்புரி சேவைகள் கூட ஒழிக்கப்பட்டுவிட்டன. இது இலாபத்துக்கான தாக்குதலின் ஒரு பாகமாகும். ஏனைய உரிமைகளைப் போலவே வீடில்லா பிரச்சினையும் மேலும் மேலும் உக்கிரம் அடையும். ஒரு நிலைமைக்கு தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிடும்.

கம்பனிகளின் இலாபப் பொதிகளை நிரப்பிக் கொள்ளுவதில் தொடர்பு கொண்டுள்ள தொழிற் சங்கங்கள், தொழிலாளர்கள், தொழிலாளர்களை வறுமையின் பிடியில் வைத்திருக்கவும் செயற்படுகின்றார்கள். தொழிலாளர்களுக்கு தாக்குதல் கொடுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர் பதவிகளில் குந்திக் கொண்டுள்ளார்கள். இ.தொ.கா. தலைவர் தொண்டமான், தோட்டச் சொந்தக்காரர்; ஒரு முதலாளி. அவர் முன்னர் யூ.என்.பி.அரசாங்கத்தின் அமைச்சராக 17 வருடங்கள் தொழிலாளர்களின் உரிமைகளை தாக்கி வந்தவர். மலையக மக்கள் முன்னணித் தலைவர் பீ.சந்திரசேகரன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சர்; சிறப்பு சலுகைகள் மூலம் செல்வங்களை குவித்துக் கொண்டுள்ளவர்.

தமது ஜனநாயக உரிமைகள் ஒழிக்கப்பட்ட நிலையிலும் கூட தோட்டத் தொழிலாளர்கள் வீட்டு உரிமை உட்பட்ட அடிப்படைத் தேவைகளையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்ளப் .போராட மீண்டும் மீண்டும் முன்னணிக்கு வந்துள்ளனர். இலாபம் சுரண்டும் முதலாளித்துவ அமைப்பு இந்த பிரச்சினையை தீர்க்காமையும் அவற்றை மோசமாக்கியமையும் தொழிற்சங்கத் தலைவர்களின் வங்குரோத்தினையும் தொழிலாளர்களின் எதிரில் இந்த உரிமைகளை வெற்றிகொள்ள புதிய முன்னோக்கினதும் தலைமையினதும் அவசியத்தினையும் தோற்றுவித்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினை முதலாளித்துவ அமைப்பின் நாற்றமெடுப்பின் வெளிப்பாடாகும். அவ்வாறே அது இலங்கையின் சகல இடங்களிலும் தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் முகம் கொடுத்துள்ள பிரச்சினையுமாகும்.இலாபம் கறக்கும் முதலாளிகள் தமக்காகவும் வெளிநாட்டு முதலாளிகளுக்காகவும் மாளிகைகளும் சகல வசதி வாய்ப்புக்கள் நிறைந்த நவீனமயமாக்கப்பட்ட வீடமைப்புத் தொகுதிகளும் ஹோட்டல்களும் அமைத்துக் கொள்கின்றார்கள்.ஏகாதிபத்திய நாடுகளின் இப்போதைய தொழிலாளர்களிடையே மட்டுமன்றி கீழ்மட்ட மத்தியதர வர்க்கக் குடும்பங்கள் இடையேயும் வறுமை சீக்கிரமாக வளர்ச்சி கண்டு வருகின்றது இதனால் வீடில்லாது அவர்கள் நடைபாதைகளை வீடாக்கிக் கொண்டவர்களின் தட்டில் சேர்ந்து கொண்டுள்ளார்கள். 'ஒரு இலட்சம் வீடமைப்பு', 'பத்து இலட்சம் வீடமைப்பு முதலான இலங்கை முதலாளித்துவ அரசாங்கங்களின் திட்டங்கள் வீடில்லாப் பிரச்சினையைத் தீர்க்க முடியாத மோசடிகளாகும்.

நாகரீகமான வாழ்க்கையை ஓட்டுவதற்கு மின்சாரம், நீர், விளையாட்டு, மற்றும் கலாச்சார வசதிகள் கொண்ட பெரும் வீடமைப்புத் திட்டங்கள், தோட்டத் தொழிலாளர்களுக்கும் மற்றும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அமைக்கப்பட வேண்டும். இலாபம் கறக்கும் ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தினால் அவற்றை அமைப்பது பற்றி நினைத்தும் கூடப் பார்க்க் முடியாது. அத்தோடு அத்தகைய திட்டங்களுக்கு முதலாளி வர்க்கம் எதிரி. தொழிலாளர்களைக் கட்டுப்படுத்தி நிர்வகித்து வயிற்றை நிரப்பிக் கொள்ளும் தொழிற்சங்கத் தலைவர்கள் இத்தகைய வீடமைப்புத் திட்டங்களை அதிசயமாகக் கொள்ளலாம். காரணம்? அவர்கள் இலாபம் கறக்கும். இலாபம் சுரண்டும் அமைப்புக்கு கீழ்ப்பட்ட முதலாளித்துவ, மத்தியதர வர்க்க வாழ்க்கை முறைகளுக்கு அடியோடு பணிந்து போன தோட்டத் தொழிலாளர்களுக்கு நாகரீகமான வாழ்க்கை அனாவசியமானதெனக் கொள்ளும் ஒட்டுண்ணிகள் கும்பலாக இருப்பதே. தொழிலாளர்கள் என்றும் உழைப்பு அடிமைகளாக இருக்க வேண்டும் என்பதே இந்த அதிகாரத்துவங்களின் நிலைப்பாடாகும்.

இலாபம் சுரணடுவதை அல்லாது மனிதனின் சட, கலாச்சார வாழ்க்கையை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட சமூக முறையின் கீழேயே தோட்டத் தொழிலாளர்களின் வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். அதற்கான வளங்களை தொழிலாளர் ஆட்சியின் கீழ் முதலாளித்துவ சொத்துக்களை தேசியமயமாககி, பொருளாதாரம் முழுவதிலும் செய்யும் மறுசீரமைப்பு மூலமே பெற்றுக் கொள்ள முடியும். அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் இணைந்து அனைதுலக சோசலிசத்துக்காகச் செய்யும் . போராட்டத்தின் ஒரு பாகமாக தோட்டத் தொழிலாளர்கள், இலங்கையின் மற்றும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களுடன் ஒன்றிணந்து சோசலிசத்துக்கான போராட்டத்துக்கு கிளர்ந்து எழுதல், வீடில்லாப் பிரச்சனையை தீர்ப்பதற்கும மற்றும் உரிமைகளைக் காப்பதற்குமான பாதையுமாகும். இந்த வேலைத்திட்டத்தை சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கின்றது. இந்த வேலைத்திட்டத்துக்கான போராட்டத்துக்கு இணையுமாறு தொழிலாளர்களையும் இளைஞர்களையும் நாம் வேணடுகின்றோம்.

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-8

யூ.என்.பி. அரசாங்கம் 1977ல் ஆட்சிக்கு வந்ததுதான் தாமதம் யாழ்ப்பாணத்தில் தொடங்கி நாடு பூராவும் கட்டவிழ்த்துவிட்ட இனவாத படுகொலைகள், இரத்தக் களரிகளின் எதிரில் சமசமாஜ ஸ்டாலினிச தலைவர்கள் அரசாங்கத்துக்கு சுண்ணம் பூசுவதிலும் இனவாதக் குண்டர்களைத் தூண்டுவதிலும் ஈடுபட்டனர்.

இந்தத் துரோகக் கட்சிகள் இரண்டும் அச்சமயத்தில் அமைத்துக் கொண்டிருந்த இடதுசாரி ஐக்கிய முன்னணி 1977 ஆகஸ்ட் 24ம் திகதி 'ஜனதின' பத்திரிகையில் வெளியிட்ட கட்டுரையில் பின்வருமாறு கூறிக் கொண்டது: "இந்த நிலைமையின் எதிரில் அரசாங்கம் செயற்பட்ட விதம் எந்த விதத்திலும் திருப்தியற்றது என்பதே இடதுசாரி ஐக்கிய முன்னணியின் கருத்து என்றாலும் அதை ஒரு சந்தர்ப்பவாதப் பிரச்சினையாக இழுக்க இடதுசாரி ஐக்கிய முன்னணி விரும்பவில்லை.....

"சமாதானக் குழுக்களை அமைத்து அவற்றை செயற்பட வைக்க அரசாங்கத்தின் ஒத்துழைப்பு அவசியம். ஆதலால் இத்தகைய சமாதான குழுக்களை அமைக்கவும் அவற்றை செயற்பட வைக்கவும் தமது ஒத்துழைப்பை வழங்குமாறு பொலிசாரையும் ஆயுதப் படைகளையும் அரசாங்கத்தின் ஏனைய அதிகாரிகளையும் உடன் கட்டளை வழங்குமாறு நாம் அரசாங்கத்திடம் கோருகின்றோம்."

இந்த அறிக்கையை புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சரியான விதத்தில் "யூ.என்.பி. அரசாங்கத்துக்கு பந்தம் படிக்கும் ஆயுதப் படைகளுக்கு சேவகம் செய்யும் அறிக்கை" என அழைத்தது.

இந்தக் கட்டுரைத் தொடரின் ஆசிரியரால் எழுதப்பட்டு அவரின் பெயரில் 1977 ஆகஸ்ட் 26ம் திகதிய 'கம்கறு மாவத்த' பத்திரிகையில் வெளியிடப்பட்ட கட்டுரையில் சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளின் அறிக்கையை பற்றி மேலும் தெளிவுபடுத்தப்பட்டு இருந்தது. அது பின்வருமாறு குறிப்பிட்டது: "இந்தத் தீர்க்கமான கட்டத்தில் தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பையிட்டுக் குரல் எழுப்பாத எவரும் சோசலிஸ்ட் என்ற பெயருக்கு பொருத்தமானவர் அல்ல. சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்கள் இந்த கொள்கை சார்ந்த பொறுப்பில் இருந்து ஓட்டம் பிடித்துள்ளனர்...

"இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைவர்கள் கூறுவது என்ன? இந்த ஆட்சியாளர்களின் "திருப்தியற்ற "செயற்பாடு தோன்றுவது ஒரு "சந்தர்ப்பவாத பிரச்சினையா" என்கிறார்கள். வடக்கில் தமிழ் மக்களதும் சரி தெற்கில் சிங்கள மக்களதும் சரி எந்த ஒரு அடிப்படை பிரச்சினையையும் தீர்த்து வைக்காத முதலாளித்துவ ஆட்சியாளர்கள், படுகொலைகளையும் ஒடுக்குமுறையையும் ஒரே தீர்வாக்கிக் கொண்டுள்ளதாக மக்கள் படுகொலைகளின் மத்தியில் தன்னும் வாய்திறந்து பேசாத தலைமைகள் முதலாளித்துவ அமைப்புக்கு எதிராகத் தலையிடுவது எப்படி? அத்தகைய தலைமை முதலாளித்துவ வர்க்கத்தின் சகல எதிர்ப்புரட்சி திட்டங்களிலும் அதை ஊர்ஜிதம் செய்து குரல் கொடுக்கும் சந்தர்ப்பவாதத் தலைமையாகும்."

ஆகஸ்ட் 12ம் திகதி யாழ்ப்பாணம் சென்ட் பற்றிக் கல்லூரியில் நடைபெற்ற கார்ணிவேலில் தமிழ் மக்களுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டு விஸ்தரிக்கப்பட்ட ஆத்திரமூட்டுகின்றதும் அழிவு நிறைந்ததுமான நடவடிக்கைகளின் பின்னணியில் செயற்பட்ட பிற்போக்கு சக்திகளைப் பெயர் குறிப்பிட்ட அக்கட்டுரை, சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களின் துரோகத்தை விபரிக்கையில் மேலும் கூறியதாவது:

"நாடு பூராவும் தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான ஆத்திரமூட்டும் தூண்டுதல்களதும் சொத்து சூறையாடல்களதும் கொலைகளதும் முன்னணியில் நின்றது, தேர்தல் காலத்தில் தலையில் பச்சைத் தொப்பி போட்டுக் கொண்ட யூ.என்.பி.காடையர்களும் பொலிஸ்காரர்களுமே. பிரதமர் உட்பட்ட யூ.என்.பி.தலைவர்கள் வாய்களைத் திறந்த போதெல்லாம் இவர்களைத் தூண்டினர். இனவாத சி.ல.சு.க. காரர்களும் இதில் சேர்ந்து கொண்டனர். ஆத்திரமூட்டும் வதந்திகளைப் பரப்பும் அப்பட்டமான சாதனங்களாக ஆயுதப் படைகள் விளங்கின. இதை முழு நாடும் அறியும்.

"இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைவர்களை இந்தச் சம்பவங்கள் ஒன்றைப் பற்றியோ அல்லது அதன் சிருஷ்டிகர்த்தாக்கள் பற்றியோ ஒரு வார்த்தை தன்னும் கூறாமல் நாடு சகஜ நிலைமைக்குத் திரும்புவது பற்றிப் பேசுவது படுகேவலமான மோசடியாகும்.

"இந்தச் சகல நிலைமைகளும் அம்பலமாகி உள்ள ஒரு நிலைமையில் தமிழ் மக்களின் பாதுகாப்பினை புறக்கணித்து யூ.என்.பி.அரசாங்கத்துக்கும் ஆயுதப் படைகளுக்கும் பந்தம் பிடிப்பது ஒன்றில் கோழைத்தனமான மடையர்களுக்கு அல்லது திட்டமிட்டு தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இயக்கத்தை தடம்புரள வைக்கும் முதலாளித்துவ கொந்தராத்தினை எடுத்தவருக்கே சாத்தியமாகும். சமசமாஜ-கம்யூனிஸ்ட் தலைமையின் பெரும்பான்மை குழுவினர் இரண்டாம் தரத்தைச் சேர்ந்தவர்கள். இதை அவர்கள் தமது வரலாற்றின் மூலம் நிரூபித்துக் கொண்டுள்ளார்கள். முதலாம் தரத்தைச் சேர்ந்த சிலரும் கடந்த கூட்டரசாங்க காலத்தில்-எச்சில் சோற்றில் வயிற்றை நிரப்பிக் கொண்டு இந்தக் கட்சிகளின் தலைமையினைப் பிடித்துக் கொண்டுள்ளனர். இப்போது தமது வர்க்கத்தினதும் விவசாயிகளதும் வேலையற்ற இளைஞர்களதும் வீட்டுப் பெண்களதும் தமிழ் பேசும் மக்கள் பகுதியினரதும் அடிப்படை உரிமைகளைக் காக்கும் பொருட்டு முன்னணியில நிற்கையில் தொழிலாளர் வர்க்கத்திற்கு உள்ள முக்கிய தடை இந்தத் தலைவர்கள் கும்பலே" (விஜே டயஸ் கொள்ளை, கொலை பரவுகையில் சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்களின் சந்தர்ப்பவாத அறிக்கை கம்கறு மாவத்த,1977 ஆகஸ்ட் 26)

இந்த ஆய்வுகளுக்கு இணங்க தொழிலாளர் வர்க்கத்தின் முக்கிய பணியாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகையில் "கம்கறு மாவத்த" ஆசிரியத் தலையங்கம் பின்வருமாறு குறிப்பிட்டது: "யூ.என்.பி.அரசாங்கத்தின் கீழ் ஆரம்பமான இனவாத ஆத்திரமூட்டல்களின் முக்கிய படிப்பினை, சீர்திருத்தவாத தலைமைகளை கலைத்துவிட்டு தமது கைக்குள் அரச அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் முன்நோக்கின் கீழ் வழிநடாத்தும் தலைமையைக் கட்டியெழுப்பும் பணியை தொழிலாளர் வர்க்கம் பின் தள்ளிப் போடமுடியாது. தொழிலாளர் வர்க்கத்தினை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்குவது என்பது எதிர்ப்புரட்சியின் சக்திகளை ஆயுதபாணிகளாக்குவது ஆகும்.

"யூ.என்.பி.அரசாங்கத்தை வெளியேற்றி, தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் முன்நோக்கின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்தைச் சூழ தமிழ் பேசும் மக்கள் உட்பட்ட சகல ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட தொழிலாளர் வர்க்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நிபந்தனையற்று ஊர்ஜிதம் செய்வதும் அனைத்து இனவாத சட்டங்களையும் ஒழித்துக் கட்டுவதும் சகல முதலாளித்துவ இராணுவங்களையும் குண்டர் படைகளையும் கலைக்கும் பொருட்டு தொழிலாளர் வர்க்கத்தின் பாதுகாப்பு கமிட்டிகளை கட்டியெழுப்புவதும் இனவாதக் குண்டர் படைகளை வீதிகளில் இருந்து கலைக்க நடவடிக்கை எடுப்பதும் இந்த முன்நோக்கின் தவிர்க்க முடியாத அமசங்களாகும்."

சமசமாஜ கம்யூனிஸ்ட் தலைவர்கள் மட்டுமன்றி சகல வகையான மத்தியவாதிகளும் குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் இந்த முன்நோக்கும் வேலைத்திட்டமும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடையே வேரூன்றச் செய்யும் போராட்டத்துக்கு எதிராகச் செயற்பட்டனர். அதில் விக்கிரமபாகு கருணாரத்னவின் தலைமையில் பிற்காலத்தில் நவ சமசமாஜக் கட்சியை அமைக்க ஒன்றிணைந்த வாசுதேவ நாணயக்கார முக்கிய பேர்வழியாவார்.

## 1978 அரசியலமைப்புச் சட்டம்

இந்தச் சகலரதும் உதவியோடு தனது கையைப் பலப்படுத்திக் கொண்ட யூ.என்.பி.அரசாங்கம் ஆகஸ்ட் இனவாதப் பயங்கர இயக்கத்தின் மத்தியில் நாடு பூராவும் அடக்குமுறையை இறுக்கமாக்கும் பொருட்டு புதிய அரசியலமைப்பு சட்டத்தை வரைந்து கொள்ள விரைவாக நடவடிக்கை எடுத்தது . 1977 செப்டம்பரில் அதற்கான தெரிவுக் குழு அமைக்கப்பட்டது. 1948 சுதந்திரம் எனச் சொல்லிக் கொள்ளப்பட்ட பெப்ரவரி 4ம் திகதியின் 30 ஆண்டுகளின் பின்னர் 1978ல் ஜே.ஆர்..ஜயவர்தன ஜனாதிபதி பதவியில் வேரூன்றிக் கொள்ளப் பயன்படுத்தினார். புதிய அரசியலமைப்புச் சட்டத்தினை நிறைவேற்றிக் கொள்வதற்கு முன்னர் 1972 அரசியலமைப்புக்குக் கொணர்ந்த ஒரு திருத்தத்தின் மூலம் இதற்கு வழி வகுக்கப்பட்டது. 1972 அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் ஜனநாயகம் சதா காலமும் ஸ்தாபிதம் செய்யப்பட்டுவிட்டதாக கொல்வின் ஆர்.டி.சில்வா கூறிக் கொண்ட வாய்வீச்சு இதன் மூலம் ஆகாயத்தில் வெடித்துச் சிதறியது. 1975-76ல் தோன்றிய தொழிலாளர் வர்க்கப் போராட்டத்தினைப் போலவே யூ.என்.பி.யின் திறந்த பொருளாதாரக் கொள்கையின் தீய விளைவுகளுக்கு எதிராக தவிர்க்க முடியாத விதத்தில் தோன்ற இருந்த ஒரு தொகை வர்க்கப் போராட்டங்களையிட்டு கிலியடைந்து போயிருந்த யூ.என்.பி., சி.ல.சு.க. பிளவுபடாத விதத்தில் சர்வாதிகார



1977ல் பொலிசாரால் தீயிடப்பட்ட யாழ் நகர சந்தை

www.padippakam.com



அதிகாரங்களைக் கைக்குள் போட்டுக் கொள்வதையிட்டு எந்தளவுக்கு வெறி கொண்டிருந்தனர் என்பது நிறைவேற்று ஜனாதிபதி பதவியை ஸ்தாபிதம் செய்வதில் காட்டிய கடுகதி வேகத்தின் மூலம் பிரசித்தமாகியது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் அரசியலமைப்பு தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளை பகிஷ்கரிக்க தீர்மானம் செய்தனர். எனினும் முதலாளித்துவ அமைப்புடனும் அதன் ஆட்சியுடனுமான பிரிக்க முடியாத உறவை அம்பலமாக்கும் வகையில் இதற்கிடையே அரசியலமைப்பு நிர்ணயம் தொடர்பாக யூ.என்.பி.அரசாங்கம் கூட்டிய ஒரு தொகை மகாநாடுகளிலும் கலந்துரையாடல்களிலும் பங்கு கொண்டது. இது சோல்பரி அரசியலமைப்பு நிர்ணயத்தில் கலந்து கொள்வதை பகிரங்கமாக "பகிஷ்கரித்த" ஏகாதிபத்தியச் சார்பு தேசிய காங்கிரஸ் , அதனுடன் தொடர்புடைய ஒரு தொகை கலந்துரையாடல்களை சோல்பரி பிரபுவுடன் அந்தரங்கமாக நடாத்திய கோழைத்தனமான மோசடியை ஞாபகத்துக்குக் கொணரும். ஆட்சியில் இருந்த முதலாளித்துவ பகுதியினரின் ஆணையை எதிர்க்கும் வாய்வீச்சுக்களுக்கு இடையேயும் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் கைக்கூலி முதலாளித்துவ பகுதியினரின் பலவீனங்கள் அவர்களின் வாய்வீச்சுக்களுக்கு இணங்க மாறுவது கிடையாது. அவ்வாறே 'ஆளும் முதலாளித்துவ பகுதியினருடன் ஒடுக்கப்படும் தேசிய இனங்களின் கைக்கூலி முதலாளிகள் நடாத்தும் கொடுக்கல் வாங்கல்களின் பேரில் கையாள்வது வார்த்தைகளா? ஆயுதமா? என்பதற்கு இணங்க அவர்களின் வர்க்க விதிமுறைகள் மாற்றம் கண்டுவிடாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலமைப்பு சபையின் நடவடிக்கைகளில் பகிரங்கமாக கலந்து கொள்ளாதது ஏன்? இதை 1977 அக்டோபர் 5ம் திகதி அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அறிக்கை மூலம் வெளிப்படுத்தினார். அது தமிழ் தேசிய வாதத்தினதும் அதன் முதலாளித்துவ பிற்போக்கு தன்மையையும் அம்பலப்படுத்தியது. அவர் கூறியதாவது : "ஜயவர்தன தம்மை ஆட்சி செய்வது பிரதமராகவா அல்லது ஜனாதிபதியாகவா என்பதையிட்டு தமிழ் மக்களுக்கு அக்கறை கிடையாது என அவர் கூறினார். தமிழ் மக்களுக்கு இந்த அரசாங்கங்களின் வடிவங்களையிட்டு அக்கறை இல்லை. எமது வீடு தீப்பிடித்து கொண்டுள்ள நிலையில் நாம் கதவுச் சீலை நீலமா பச்சையா என்பதையிட்டு அக்கறைப்பட்டுக் கொள்ள முடியுமா?" என அவர் அர்த்தமற்ற வகையில் கேள்வி எழுப்புகின்றார்.

பாராளுமன்ற ஆட்சி முறையை நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையாக மாற்றுவது முதலாளித்துவ வர்க்க ஆட்சியின் வடிவத்திலான ஒரு மாற்றம் என்பது உண்மைதான். இந்த அர்த்தத்தில் எடுத்தால் பாராளுமன்ற முறை பாசிச ஆட்சி முறையாக மாற்றம் காண்பது சம்பந்தமாகவும் இது பொதுவில் நியாயமான ஒரு காரணமாகும். **ஆனால் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நோக்குமிடத்து இந்த மாற்றம்** பிரமாண்டமான அர்த்தம் பெறுகின்றது. "பாராளுமன்ற முறை முதலாளித்துவமாகும். மக்களை ஒடுக்குகின்றது. நிறைவேற்று ஜனாதிபதி முறை அல்லது பாசிச ஆட்சி முறையும் முதலாளித்துவமாகும். மக்களை ஒடுக்குகின்றது. ஆதலால் இந்த ஆட்சி முறைகளின் மாற்றங்களையிட்டு பொதுமக்கள் அக்கறைப்பட்டுக் கொள்ள வேண்டியதில்லை" இது தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பற்றி அணு அளவும் அக்கறை இல்லாத முதலாளித்துவச் சார்பு பிலிஸ்தீன்களின் நோக்காகும்.

நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்புச் சட்டம் சிங்கள, தமிழ் மொழி பேசும் பொதுமக்கள் இருசாராரையும் நசுக்கி ஒடுக்குவதை இலக்காகக் கொண்டுள்ள ஒரு நிலையில் அதைப் பற்றி அமிர்தலிங்கம் தமிழ் மக்களின் "அக்கறையை" பொதுமக்களில் இருந்து வேறுபடுத்தி தனிப்படுத்தி காட்டுகையில் ஒரே சமயத்தில் இரண்டு விடயங்களை



மூளாய் ஆஸ்பத்திரி ஊழியர்களின் மறியல் போராட்டம். இதில் பு.க.க. அங்கத்தவர்கள் தொழிலாளர் பாதையுடன் பங்குகொண்டனர்.

வெளிக்காட்டினார். அதாவது. இனவாதத்தைத் தூண்டித் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை மோத வைத்து சர்வாதிகாரி ஆட்சியை திணிக்க தள்ளப்பட்ட யூ.என்.பி.விதிமுறையை போலவே வளர்ச்சி கண்டு வந்த தமிழ், தேசிய பிரிவினைவாதத்துக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி காட்டிய ஆதரவாகும். இந்த இரண்டு விதிமுறைகளையும் ஒன்றாக உள்ளீர்த்துக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணி அந்த இரு விதிமுறைகளதும் கூட்டினதும் பிற்போக்குத் தன்மையைக் காட்டிக் கொண்டது.

தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத பாகுபாடு காட்டவும் அவர்களுக்கு எதிராக யுத்த நடவடிக்கைகளில் இறங்கவும் 1972 அரசியலமைப்பு சட்டத்தில் இருந்து செயற்பட்டு வந்த முதலாளித்துவ ஆளும் வர்க்கத்துக்கு இந்த நிலைமை தெளிவற்றதாக இருக்க இல்லை. **சீர்திருத்தவாதிகளும் வர்க்க சமரசவாதிகளும் இதையிட்டு அக்கறையின்றியும் இணைந்தும் போயிருந்தனர்.**

புதிய நிறைவேற்று ஜனாதிபதி அரசியலமைப்பு சட்டத்துக்கு எதிராக சிங்கள-தமிழ் மக்களின் கூட்டு போராட்டத்தை தவிர்க்கும் பொருட்டு முதலாளித்துவச் சார்பு சமசமாஜ-ஸ்டாலினிஸ்டுகளும் நானாவித குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் கொண்டிருந்த முயற்சிக்கு உதவும் வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நடவடிக்கைகளை யூ.என்.பி.யினர் பெரிதும் மதித்தனர். இது தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த படையல் அமிர்தலிங்கத்துக்கு வழங்கப்பட்டதன் மூலம் திட்டவட்டமாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டியது. இது வரைகாலமும் பாராளுமன்றத்தில் எந்தவொரு எதிர்க் கட்சித் தலைவருக்கும் கிடைத்திராத ஒரு தொகை சலுகைகள் அவருக்கு வழங்கப்பட்டன. ஜே.ஆர்.ஜயவர்தனவிடம் இருந்து உத்தியோகபூர்வ வாசஸ்தலம், உத்தியோகபூர்வ வாகனம் அத்தோடு பூரண பாதுகாப்பு படையும் கிடைத்தன.

## "நியாயமான அவகாசம்"

ஜயவர்தனவின் படையல்களுக்குப் பதிலாக பதில் படையல்களை வழங்கும் பொறுப்பில் இருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தப்பித்துக் கொள்ள முடியவில்லை.யூ.என்.பி.அரசாங்கத்தின் அமைச்சர்கள் கலந்து கொண்ட அரசாங்க வைபவங்களைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ் குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் பிரச்சாரம் செய்து வந்தன. அங்ஙனம் செய்ய தமிழர் விடுதலைக் கூட்டணியினர் வாக்குறுதி வழங்கி இருந்தனர். அப்படி இருந்தும் அமிர்தலிங்கம் அந்த வாக்குறுதிக்கு காலால் உதைந்துவிட்டு, 1977 டிசம்பரில் வர்த்தக அமைச்சர் லலித் அத்துலத் முதலி பங்கு கொண்டதும் யாழ்ப்பாணக் கச்சேரியில் இடம்பெற்றதுமான ஒரு வைபவத்தில் கலந்து கொண்டார். தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அன்று ஆற்றிய உரையில் "தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை நீதியாகவும் நியாயமாகவும் தீர்த்து வைப்பதாகவும் பிரதமர் ஜே.ஆர். ஜயவர்தன் எமக்கு வாக்குறுதி தந்துள்ளார். அதற்கு 'நியாயமான அவகாசம் வழங்க வேண்டும்" எனக் குறிப்பிட்டார். ஜயவர்தனாவைப் போலவே சுதந்திரம் எனப்பட்டதற்கு பின்னைய 30 ஆண்டுகளின் முழு முதலாளித்துவ ஆட்சிக் காலத்தின் நீதியையும் நியாயத்தையும் அளவீடு செய்வதற்கு ஒருவருக்கு அனுபவம் இருந்தாலும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தின் முதலாளி வர்க்கத்தினால் அதன் அடிப்படையில் நின்று கொள்வது பெரும் கஷ்டமாக இருந்தது. அது ஏகாதிபத்தியச் சார்பு சகல முதலாளித்துவப் பகுதியினரதும் தன்மையாக விளங்கியது. தமிழர் விடுதலைக் கூட்டணி ஜே.ஆர். ஜயவர்தனவுக்கு வழங்கிய 'நியாயமான கால அவகாசம்,' சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் மீது காட்டுமிராண்டி ஒடுக்குமுறையை திணிக்க வழங்கிய அவகாசமாக நிரூபிக்கப்படுவதற்கு அதிக காலம் செல்லவில்லை.

## வர்க்கப் போராட்டங்களின் எழுச்சி

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜயவர்தன ஆட்சிக்கு முண்டு கொடுக்கத் தள்ளப்பட்டது. இது அவர்களுக்கு கிடைத்த சலுகைகளின் பேரில் செலுத்தும் ஒரு கப்பத்தை விட அதற்கான காரணி அச்சமயத்தில் யாழ்ப்பாணப் பிராந்தியத்திலும் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக வர்க்கப் போராட்டங்கள் தோன்றத் தொடங்கியமையேயாகும். இந்தப் போராட்டங்களில் இன்னமும் உடைந்து போகாது இருந்து வந்த சிங்கள தமிழ் தொழிலாளர் வர்க்க ஐக்கியம் வெளிப்பாடாகியது. இது ஆளும் வர்க்கப் பிரதிநிதிகள் என்ற முறையில் ஜயவர்தனாவை போலவே அமிர்தலிங்கத்தினது நடுக்கத்தையும் வளர்ச்சி காண வைத்தது.

இத்தகைய ஒரு போராட்டமாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாக சிங்கள, தமிழ் மாணவர்கள் ஒன்றிணைந்து தொடுத்த விரிவுரை பகிஷ்கரிப்பு விளங்கியது. யாழ்ப்பாண வளாக மாணவர்கள் முகம் கொடுத்த பிரமாண்டமான பிரச்சினைகளுக்கு தீர்வு முன்வைக்க 1977 செப்டம்பர் 14ம் திகதி கல்வி அமைச்சர் அதன் செனட் சபைக்கு வருவதாக வழங்கி இருந்த வாக்குறுதியை மீறியதையிட்டு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக துணை வேந்தர் அலுவலகத்தை முற்றுகையிடுவதன் மூலம் போராட்டம் ஆரம்பமாகியது. அந்த எதிர்ப்பு பிரச்சாரத்தின் பேரில் இடம்பெற்ற கூட்டங்களில் கொழும்பு, வித்தியோதய பல்கலைக் கழகங்களின் மாணவர் சங்க தலைவர்களும் உரை நிகழ்த்தினர்.

அந்த விதத்தில் பார்த்தால் மாணவர் எதிர்ப்பு பிரச்சாரங்கள் ஏற்படுத்தக் கூடிய சமூக, அரசியல் தாக்கங்கள் பிரமாண்டமானதாக இல்லாது போயினும் பெருமளவுக்கு மாணவர் போராட்டங்கள், வளர்ச்சி கண்டுவந்த தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களுக்கான ஒரு முன்அறிகுறியாக விளங்கியது. வளர்ச்சி கண்டுவந்த கூட்டு வர்க்கப் போராட்டங்கள் தொடர்பாக தலைதூக்கி வந்த பீதி, யூ.என்.பி.யின் சர்வாதிகார திட்டங்களைச் சூழ சிங்கள, தமிழ் முதலாளிகள் மீண்டும் அணிதிரள்வதற்கான காரணியாகியது.

முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் இந்தச் சார்பினை விரிவாக விளக்கி , தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக, வாழ்க்கை உரிமைகளை காக்கும் பொருட்டான வேலைத் திட்டத்தை முன்வைத்தது புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும்.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஸ்தாபிதம் செய்யும் அரசியலமைப்புச் சட்ட வரைவு வேலைகள் ஆரம்பித்ததுதான் தாமதம் ஒரு அறிக்கையை வெளியிட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அதில் பின்வருமாறு குறிப்பிட்டது :

"ஜே.ஆர்.ஜயவர்தன அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் போனபாட்டிச சர்வாதிகாரியாகத் தோன்றி, தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக உள்நாட்டு யுத்தத்தினை தொடுக்கும் நிச அதிகாரத்தை தனது கைக்குள் போட்டுக்கொள்ள முயல்கிறார். அத்தகைய சர்வாதிகார அதிகாரங்களைத் திரட்டிக் கொள்ளாமல் ஏகாதிபத்திய நிபந்தனைகளின் கீழ் வரும் பொருளாதாரப் பேரழிவுகளை பொதுமக்களின் தலைகளில் கட்டியடிக்க முடியாது என்பதை யூ.என்.பி.காரர்கள் அறிவர்.

"இங்கு தொழிலாளர் வர்க்கமும் விவசாயிகள், இளைஞர்கள் வீட்டுப் பெண்கள் உட்பட்ட சகல ஒடுக்கப்படும் மக்களும் தமது முழுப் பலத்தையும் கொண்டு இந்த முயற்சியை தோற்கடிக்க இப்போது போராட வேண்டும்.

"முதலாளித்துவ ஜனநாயகம் பற்றி கொண்டிருக்கும் அணுவளவிலான நம்பிக்கை கூட இக்கட்டத்தில் பேராபத்தான விளைவுகளைக் கொணரும். முதலாளித்துவ அமைப்பின் கீழ் அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் பெரிதும் சிறந்த ஜனநாயகத்தினை புத்திசுவாதீனமற்றவர்கள் மட்டுமே எதிர்பார்க்க முடியும்.

"தொழிலாளர் வர்க்கத்தினதும் விவசாயிகளதும் இளைஞர்கள் வீட்டுப் பெண்கள் உட்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் இயக்கத்தினதும் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையை கூட்டும் போராட்டத்தின் முன்னணியில் இப்போது தொழிற்சங்கம் நிற்க வேண்டும். ஒடுக்குமுறை சட்டங்களை ஒழிக்கின்றதும் தமிழ்மொழி பேசும் மக்கட் பகுதியினரின் மொழி உரிமை உட்பட்ட அடிப்படை உரிமைகளை ஸ்தாபிதம் செய்கின்றதும் அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்றதும் என்ற விதத்தில் அடிப்படை உரிமைகளை ஸ்தாபிதம் செய்யும் அரசியலமைப்பினை தயார் செய்ய அத்தகைய ஒரு அரசியலமைப்பு நிர்ணய சபையினால் மட்டுமே முடியும்.

"சர்வாதிகாரத்துக்கு தயாராகும் யூ.என்.பி.அரசாங்கத்தை உடனடியாக வெளியேற்றவும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரவும் போராடுவதன் மூலம் மட்டுமே இந்த இலக்கினை அடைய முடியும்.

"இது வார்த்தை ஜாலங்களில் இறங்கி, காலத்தை வீணடிப்பதற்கான கால கட்டம் அல்ல. புரட்சித் தலைமையின் கீழ் மற்றும் ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரையும் அணிதிரட்டி, முதலாளித்துவ சர்வாதிகார திட்டங்களை தோற்கடிக்க உடனடி நடவடிக்கை எடுப்பது இன்றுள்ள அவசரத் தேவையாகும்."(கம்கறு மாவத்த ஆசிரியத் தலையங்கம் 1977செப்டம்பர்06)

தொடரும்.

படிப்பகம்

# அக்டோபர் புரட்சியின்



# மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை அக்டோபர் புரட்சி ஊர்ஜிதம் செய்கின்றது

## -சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ்

சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் இளைஞர் அமைப்பான இளம் சோசலிஸ்டுகள் இயக்கமும் அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டு நிறைவையொட்டி கடந்த அக்டோபர் 12ம் திகதி கொழும்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நடாத்திய பொதுக் கூட்டத்தில் சோ.ச.க.பொதுச் செயலாளர் விஜே டயஸ் நிகழ்த்திய உரையின் முதலாம் பாகம்.



தேர்ழ்ர். தலைவர் அவர்களே, தோழர்களே, தோழியர்களே

அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டு நிறைவுபெறும் இத்தருணத்தில் அந்தப் புரட்சியின் பெறுபேறாக ஸ்தாபிதம் செய்யப்பட்ட ஐக்கிய சோசலிச சோவியத் குடியரசு ஸ்டாலினிஸ்டுகளால் கலைக்கப்பட்டு ஆறு ஆண்டுகளும் கழிந்து போயுள்ளது. இந்த இரண்டு நிகழ்வுகளையும் ஒன்றாக எடுத்து நோக்கின் இந்த நூற்றாண்டினுள் மனித இனம் உலக ரீதியில் முகம் கொடுத்த அடிப்படையான மூலோபாய, அரசியல் பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுக்கின்றோம்.

உலக சோசலிசப் புரட்சியின் முதல் நடவடிக்கையாக ரூஷ்ய அக்டோபரை தயார் செய்யும் பொருட்டு உக்கிரமும் நீண்டதுமான முயற்சி, முதலாம் ஏகாதிபத்திய உலக யுத்தம், அதன் மத்தியில் வெகுஜனப் போராட்டங்களின் எழுச்சி, இரண்டாவது சோசலிச அனைத்துலகம் சீரழிந்தமை, போல்ஷிவிக் கட்சி தலைமை தாங்கிய ரூஷ்யப் புரட்சியின் வெற்றி, 1918,1921, 1923 களில் ஜேர்மன் புரட்சி முகம் கொடுத்த துன்பகரமான தலைவிதி, ஸ்டாலினிசத்தின் எழுச்சி, அதற்கு எதிராக ட்ரொட்ஸ்கியின் தலைமையில் இடம்பெற்ற போராட்டம், மூன்றாம் அகிலத்தின் சீரழிவு, நான்காம் அகிலத்தின் ஸ்தாபிதம், இரண்டாம் உலக யுத்தம், அதைத் தொடர்ந்து யுத்தத்தின் பின்னைய பொருளாதாரச் செழிப்பு, அந்நிலைமையினுள் தலையெடுத்த சீர்குலைப்புவாதம், அனைத்துலகக் குழுவின் போராட்டம், உலக முதலாளித்துவ அமைப்பின் நெருக்கடி, பூகோள ரீதியான பொருளாதாரம், அனைத்து பழைய தேசியவாத அமைப்புக்களினதும் காலவதியும் ஸ்தம்பிதமும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகள் சோசலிச சமத்துவக் கட்சிகளாக ஸ்தாபிதம் இவை எல்லாம் இந்நூற்றாண்டினுள் மனித இனம் முகம் கொடுத்த தீர்க்கமான பிரச்சினைகளின் ஒரு தொகுப்பாகும்.

இன்று உலகம் பூராவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முகம் கொடுக்கும் எந்த ஒரு பிரச்சினைக்கும் இந்தச் சகாப்தத்தின் தொகுப்பான மேற்காட்டிய பிரச்சினைகள் போரிட்டுக் கொண்ட விதத்தினைப் பற்றிய அனுபவத்தைப் பெற்றுக் கொள்ளாமல் தீர்வு காண முடியாது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினதும் அதன் பகுதிகளதும் தீர்க்கமான தன்மை இந்த விடயத்திலேயே தங்கியுள்ளது.

மனித இனம் தனது விடுதலையை முன்னிட்டு இந்த நூற்றாண்டு பூராவும் மேற்கொண்ட பல்வேறுபட்ட ஈடிணையற்ற முயற்சிகளின் படிப்பினைகளைப் பெற்றுக் கொண்ட களஞ்சியமாக ட்ரொட்ஸ்கிச உலக இயக்கம் விளங்குகின்றது. எனவே தான் இந்த இயக்கத்தின் செல்வாக்குக்கும் அதன் பிணைப்புக்கும் உள்ளாகுவது இன்றைய தலைமுறையினருக்கு இன்றியமையாதகின்றது. சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் இளைஞர் அமைப்பான இளம் 'சோசலிஸ்டுகள் இயக்கமும் அக்டோபர் புரட்சியைக் கொண்டாடுவது அதன் இன்றியமையாத மதிப்பிடற்கரிய தேட்டத்தை இன்றைய வெகுஜன இயக்கத்திற்கும் சிறப்பாக அதன் இளைஞர் தலைமுறைக்கும் உரித்தாக்குவதற்கேயாகும். அதனை எம்மால் மட்டுமே செய்ய முடியும் என நாம் பெருமையுடன் கூறிக் கொள்கின்றோம். அதன் எதிர்ச் சக்திகளின் எதிரில் அஞ்சாது, அவர்களின் பொறிகளில் வீழ்ந்து போகாது முதலாளித்துவ வெகுஜன அபிப்பராயத்தின் எதிரில் அடிபணியாதும் கொள்கைப்பிடிப்பான விதத்தில் மார்க்சிச அடிப்படைக் கொள்கையை காக்கப் போராடிய நீண்டதும் தீர்க்கமானதுமான போராட்ட பாரம்பரியங்களைக் கொண்ட இன்றைய தொடுவையை பிரதிநிதித்துவம் செய்வது நாமாக இருப்பதே.

எதிர்காலத்துக்கு உரிமை கோரும் இளைஞர் தலைமுறையினரைப் போலவே புவியின் முன்னணியில் நிற்போரும் இந்தக் கூட்டத்தின் பெரும்பான்மையினராகக் கலந்து கொண்டிருப்பது உத்சாகமளிக்கின்றது. அது ட்ரொட்ஸ்கிச முன்நோக்குக்கும் எதிர்வரும் பிரமாண்டமான புரட்சிகரப் போராட்டங்களுக்கும் இடையேயான ஐக்கியத்தினை வெளிப்படுத்திக் கொண்டுள்ளது. அது ஒரு நல்ல சுப சகுனமாகும். இந்த நிலைமையை சமசமாஜ, ஸ்டாலினிச, இ.தொ.கா. போன்ற பழைய தொழிலாளர் வர்க்கக் கட்சிகளும் அந்தச் சீர்கெட்ட பழைய சம்பிரதாயங்களையே முன்னெடுக்கும் நவசமசமாஜ கட்சி போன்ற கட்சிகள் பக்கம் 'இளம் தலைமுறையினர் காட்டும் வெறுப்புடனும் அவமரியாதையுடனும் ஒப்பிட்டு ப் பார்க்குமிடத்து இந்த விடயத்தை புரிந்து முறையாக கொள்ள முடியும்.

நூற்றாண்டு அதன் இறுதியை அண்மித்துக் கொண்டுள்ள வேளையில் அந்தக் கடந்த நூற்றாண்டு பற்றிய ஒரு ஐந்தொகையை தயார் செய்யும் அவசியம் தினமும் மக்களிடையே தோன்றுகின்றது. இந்த நூற்றாண்டு கழிந்தது எப்படி? நாம் இன்று முகம் கொடுக்கும் பிரச்சினைகளின் அடி ஆழம் என்ன? இக்கேள்விகள் தட்டிக் கழிக்க முடியாத விதத்தில் தலையெடுக்கின்றன. முதலாளித்துவ அமைப்பின் உறுதிப்பாட்டை பற்றியும் அதன் சதா காலம் பற்றியும் விரிவுரையாற்றுபவர்கள் இந்தக் கேள்விகளுக்கு நிஜமான பதில் அளிக்க முடியுமா? பொதுமக்களை ஏமாற்றும் பொருட்டு பதில் தயார் செய்யும் வரை மோசடியான ஒப்புதல் வாக்குமூலங்களை விட வேறெதையும் அவர்களால் வழங்க முடியுமா? அத்தகைய சந்தர்ப்பங்களில் "பிழைவிடுவது உலக நியதி" போன்ற தலைவிதி வாதங்களின் பின்னால் மறைந்து கொண்டு அவர்கள் இயலாக் கட்டத்தில் ஒப்புக் கொள்ளும் தவறுகளை திருத்திக் கொள்ள எதுவிதமான வரலாற்று வல்லமையும் தமக்கு கிடையாது என்பதை மூடி மறைப்பதற்கே முயற்சிக்கின்றனர். பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும் அதற்கு சேவகம் செய்த ஜே.வீ.பி. உட்பட்ட சகலரதும் அறிக்கைகளில் இந்தப் படுகேவலமான மோசடியும் வங்குரோத்தும் ஒன்றாகக் கட்டிபட்டுள்ளதைக் கண்டு கொள்ள முடியும்.

### பெருமைக்குரிய பாரம்பரியம்

ஒரு நிஜ மார்க்சிசக் கட்சியினால் மட்டுமே தனது இயக்கத்தின் வரலாற்றை நோக்கி காலங்கடத்தாது பீடுநடைபோடவும் ,அதைப் பற்றிப் பெருமையுடன் அப்பட்டமாகப் பேசிக் கொள்ளவும் முடியும்.பொதுமக்களின் வரலாற்று அவசியங்களை நிஜமாகவும் விஞ்ஞான ரீதியிலும் பிரதிநிதித்துவம் செய்வது மார்க்சிசக் கட்சியாக விளங்குவதே அதற்குக் காரணம். அது எமது இயக்கத்தின் பெருமைக்குரிய பாரம்பரியம். நாம் இங்கு முன்வைத்துள்ள அக்டோபர் புரட்சி பற்றிய கண்காட்சி காட்டும் வரலாற்று அறிக்கையும் இங்கு நான் கூறிய விடயத்தை தெளிவுபடுத்துகின்றது. அங்கு எமக்கு ஒளித்து மறைப்பதற்கு எதுவும் கிடையாது. திரித்துக் காட்டுவதற்கு எதுவும் கிடையாது. இந்த வரலாற்று அறிக்கையில் இருந்துதான் இன்றைய தலைமுறையினர் கற்றுக் கொள்ள வேண்டும்.

இலங்கையில் போலவே, இந்தியத் துணைக் கண்டத்தில் போலவே உலகம் பூராவும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அரசியல் ரீதியில் வழிதடுமாறச் செய்யப் பரப்பப்பட்டுள்ள சில கருத்துக்களை-தவிடுபொடியாக்க அவசியமான சில கருத்துக்களை ரூஷ்யப் புரட்சியினதும் அதன் பிற்பட்ட காலத்தினதும் நிலையில் இருந்து தெளிவுபடுத்த நான் விரும்புகின்றேன்.

முதலில் நாம் ரூஷ்ய தொழிலாளர் வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரம் என்ன என்ற பிரச்சினையை மார்க்சிஸ்டுகள் போராடித் தீர்த்துக் கொண்ட முறைமையை ஆராய்ந்து பார்ப்போம்.

இந்தப் பிரச்சினை ரூஷ்யாவினுள் ஆழமான கருத்து வேறுபாடுகளுக்கும் அவ்வாறே விவாதங்களுக்கும் காரணமாகும்.அதற்கான புறநிலைக் காரணங்கள் இருந்தன. அதில் முக்கியமானது ரூஷ்யா இந்நூற்றாண்டின் ஆரம்பம் வரைக்கும் கடந்து சென்றிருந்த வரலாற்றுக் கட்டத்தின் சிக்கலைப் போலவே தொழிலாளர் வர்க்கத்தின் எண்ணிக்கையிலும் சிறுபான்மையாக விளங்கியது.

ரூஷ்ய மன்னன் ஸாரின் கீழ் ஜனநாயக உரிமைகள் மறுக்கப்பட்ட ஒரு தொகை தேசிய இனங்கள் வாழ்ந்ததைப் போலவே நிலமானித்துவ நிலவுடமையாளர்களின் கெடுபிடிகளுக்கு உள்ளான கோடிக்கணக்கான அடிமை விவசாயிகள் நாட்டின் ஜனத்தொகையில் பிரமாண்டமானவர்களாக விளங்கினர். அவர்களின் தீர்க்கமானதும் உக்கிரமானதுமான பிரச்சினைகள் ஐரோப்பிய முதலாளி வர்க்கங்கள் தீர்த்து வைத்த ஜனநாயகப் புரட்சியின் பணிகளுடன் இணைந்தவையாக விளங்கின. ஆதலால் பரந்த பொதுமக்களை பொறுத்த மட்டில் அடிப்படையானதும் முக்கியமானதுமாக விளங்கியது முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சியுடன் இணைந்த பணியை தீர்த்து வைப்பதாகும்.

ஆனால் தோன்றிய பிரச்சினை ரூஷ்ய முதலாளி வர்க்கம் அந்தப் பணியை இட்டு நிரப்புவதில் வெற்றி பெறுமா? என்பதேயாகும். 20பதாம் நூற்றாண்டு தோன்றுவதற்கு முன்னரே முதலாளி வர்க்கம் கடந்த காலத்தைப் போல் நிலமானித்துவ அமைப்புக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்து , ஜனநாயகத்தை ஸ்தாபிதம் செய்யும் பணியினை இனியும் அந்த வர்க்கம் இட்டுநிரப்பப் போவதில்லை என்பதை வெளிக்காட்டிக் கொண்டது. முதலாளித்துவ பிரான்சுப் புரட்சியின் 60 ஆண்டுகளின் பின்னர் ஜேர்மனியில் 1848ல் தோன்றிய புரட்சிகர நிலைமையினுள் அந்நாட்டின் முதலாளி வர்க்கம், தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து தனது சொத்து உரிமைக்குத் தொடுக்கப்படும் மிரட்டலையிட்டு நனவாக இருந்தது.புரட்சியை நசுக்கும் பொருட்டு நிலமானித்துவ அரச வம்ச இளவரசர்களுடன் சேர்ந்து கொண்டது. ரூஷ்யாவினுள் முதலாளி வர்க்கத்தின் செயற்பாடு இதில் இருந்து மாறுபடாது என்பதே மார்க்சிச பிளாக்கானோவ் பரம்பரையைச் சேர்ந்த லெனின், ட்ரொட்ஸ்கி இருவரதும் அசையாத நிலைப்பாடாக விளங்கியது. ஆதலால் எதிர்வரும் ரூஷ்யப் புரட்சியில் முதலாளி வர்க்கத்துக்கு எதிராக நின்று கொண்டுள்ள தொழிலாளர் வர்க்கம் அரசியல் ரீதியில் சுயாதீனமாக அணிதிரண்டு பொது மக்களுக்கிடையே முதலாளி வர்க்கம் தொடர்பாக இருந்து வரும் சலனங்களுக்கு எதிராகப் போராடி, தனது வரலாற்று பணியினை இட்டு நிரப்ப வேண்டும் என்பதே அவர்கள் இருவரதும் தீர்க்க தரிசனமாகியது. இது தொடர்பாக ஆரம்பம் தொட்டே லெனின், ட்ரொட்ஸ்கி இடையே கருத்துவேறுபாடு இருக்கவில்லை.

இந்த உடன்பாடு தொடர்பாக ஸ்டாலினிஸ்டுகள் சிருஷ்டித்துள்ள திரிப்புக்கள் ஏராளம். ஸ்டாலின் அதனை ட்ரொட்ஸ்கிக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை எழுப்புவதற்காக மட்டும் செய்யவில்லை. லெனினை தனது குப்பைக் கூடைக்குள் தள்ளிவிட்டு, தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்துக்கான போராட்டத்தை, சீர்குலைத்து , முதலாளி வர்க்கத்துடன் அணிதிரள்வதற்காகவே செய்தார்.

### புரட்சியின் உந்து சக்திகள்

ஆனால் அந்த திரிப்பினை நாற்றம் காண வைக்கும் ஒரு உதாரணத்தினை நிரந்தர வரலாற்றில் இருந்து எடுத்துக் காட்டுகின்றேன்: ஜேர்மன் சமூக ஜனநாயகப் புரட்சிகர இயக்கத்தின் ஆரம்ப காலத்தில் பிரதான தலைவரும் கோட்பாட்டாளருமான கார்ள் கவுட்ஸ்கியினால் "ரூஷ்யப் புரட்சியின் உந்து சக்திகள்" என்ற பெயரில் ஒரு நூல் வெளியிடப்பட்டிருந்தது. 1906ல் இந்த ஜேர்மன்

www.padippakam.com





# 80 வது ஆண்டு நிறைவு

நூலின் இரண்டு ரூஷ்ய மொழிபெயர்ப்புக்கள் இரண்டு இடத்தில் இருந்து வெளியாகின. அவை அப்போது வெளிநாட்டில் இருந்த லெனினாலும் 1905 புரட்சியின் பின்னர் பீட்டர் அன்ட் போல் சிறையில் சிறைவைக்கப்பட்டிருந்த ட்ரொட்ஸ்கியினாலும் வெளியிடப்பட்டிருந்தன. இந்த இருவரும் ஒரே பத்திரத்தில் ஒரே விதத்தில் ஈர்க்கப்பட்டது ஏன்? அதனது ஏற்புடமையை ஒரே விதத்தில் இருவரும் மதிப்பிட்டது ஏன்? அந்த ரூஷ்ய புரட்சியின் உந்து சக்தியாக தொழிலாளர் வர்க்கத்தை அவர்கள் இருவரும் இனங்கண்டு கொண்டிருந்ததே காரணம்.

தமது மொழிபெயர்ப்பு நூலுக்கு முன்னுரை எழுதிய லெனின் குறிப்பிட்டது இதுதான்: "எமது புரட்சியின் பொது இலட்சணங்களின்படி அது முதலாளித்துவம் ஆகுமா? அல்லது சோசலிசம் ஆகுமா? அது பழைய சூத்திரமயமாக்கம் என கவுட்ஸ்கி கூறுகின்றார். கேள்வி எழுப்பப்படவேண்டியது அந்த விதத்தில் அல்ல. ரூஷ்யாவின் புரட்சி முதலாளித்துவப் புரட்சியாகாதது. ரூஷ்யாவின் இன்றைய புரட்சிகர இயக்கத்தில் முதலாளித்துவ வர்க்கம் அதன் ஒரு உந்து சக்தியாக இல்லாததாலாகும். எனினும் ரூஷ்யாவின் புரட்சி சோசலிசம் ஆகிவிடாது."

ரூஷ்ய முதலாளி வர்க்கம் எதிர்ப்புரட்சி அணியில் நின்று கொண்டுள்ளதையும் ஆதலால் தொழிலாளர் வர்க்கம் அதில் இருந்து சுயாதீனமாக அணிதிரள வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்ட லெனின் இன்னமும் தீர்க்கப்படாது இருந்து வந்த பிரச்சினை தொழிலாளர் வர்க்கத்துக்கும் கிராமப்புற குட்டி முதலாளித்துவ மக்களுக்கும் இடையேயான கூட்டின் அரசியல் தன்மை என்ன என்பதே. தொழிலாளர்களதும் விவசாயிகளதும் ஜனநாயக சர்வாதிகாரம் என்ற உருவில் அது தோன்றும் என்பதே லெனினின் நிலைப்பாடாக விளங்கியது.

ட்ரொட்ஸ்கி இப்பிரச்சினையை நன்கு தெளிவாகத் தீர்த்துக் கொண்டார். அவர் "எமது புரட்சி" என்ற நூலில் அதைப் பின்வருமாறு தெளிவுபடுத்தினார்: "முதலாளித்துவப் புரட்சியில் சிறப்பான முறையில் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் ஜனநாயக தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரம் (அல்லது தொழிலாளர்களதும் விவசாயிகளதும் சர்வாதிகாரம்) பற்றி எந்த விதமான பேச்சும் இருக்க முடியாது. தொழிலாளர் வர்க்கம் தனது சர்வாதிகாரத்தின் ஜனநாயக சுயரூபத்தை காப்பது என்பது புரட்சியின் வேலைத்திட்டத்தினை விரைவுபடுத்தாமல் பூரணப்படுத்திக் கொள்ள முடியாது.

ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்ளும் தொழிலாளர் வர்க்கம் அதன் பேரில் இறுதி வரையில் போராடும் ஆட்சியைக் கொண்டிருப்பதையும் உறுதி செய்வதையும் இலக்காகக் கொண்ட இந்தப் போராட்டத்தில் ஒரு ஆயுதம் சிறப்பாக கிராமப்புற மாகாணங்களில் பிரச்சாரமும் ஒழுங்கமைப்பும் விங்குவதோடு மற்றொன்று கூட்டுப்பண்ணை வேலைத்திட்டமாகும். கூட்டுப் பண்ணை ஆட்சியில் உள்ள கட்சிக்கு அதில் இருந்து முன்னேறுவதற்கான தவிர்க்க முடியாத பாதையாக விளங்குவதோடு, தொழிலாளர் வர்க்கத்தின் உதவியோடு ஆட்சியை காப்பாற்கான விதிமுறையுமாகும்.

புரட்சியின் உந்து சக்தியை அதில் கலந்து கொள்ளும் சமூக சக்திகளின் வரலாற்று நடவடிக்கை போக்கிற்கு இணங்கக் கணித்து, பெரிதும் விஞ்ஞானபூர்வமாகவும் புத்திக் கூர்மையுடனும் தீர்க்கதரிசனமாகக் கண்டறிவதில் ட்ரொட்ஸ்கி வெற்றி கண்டார்

இந்தக் கோட்பாட்டு நிலைப்பாட்டை 1905 புரட்சியின் உயிர்ப்புஷ்டியான அனுபவங்களின்படி ருசுப்பித்துக் காட்டவும் ட்ரொட்ஸ்கி செய்தார். அந்தப் புரட்சியில் பீட்ரோகிராட் நகரில் அமைக்கப்பட்ட முதலாவது சோவியத்தின் தலைவராக செயற்பட்டவர் ட்ரொட்ஸ்கி. முதலாவதாகத் தொழிலாளர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட சோவியத்திடம் விவசாயிகள் இடைவிடாது தமது குறைபாடுகளுக்கு தீர்வுகேட்டு பெட்டிசம் முன்வைத்த விதத்தையும் விவசாயிகளின் பிரதிநிதிகள் சோவியத் சபையிடம் தூர இடங்களில் இருந்து வந்து சேர்ந்த விதத்தையும் ட்ரொட்ஸ்கி சுட்டிக் காட்டுகின்றார். ஏழை விவசாயிகளுக்கு நகரத்தின் முற்போக்கு வர்க்கத்தினால் தலைமை வழங்கப்பட வேண்டிய விதத்தையும் அந்த தலைமையை வழங்குகையில் தொழிலாளர் வர்க்கத்துக்கு இருந்து வந்த வரலாற்று வல்லமை இந்த படிப்பினைகளின் மூலம் நடைமுறை ரீதியில் ருசுப்படுத்தப்பட்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தின் அவசியமும் அது புரட்சியில் வழங்கும் தலைமைப் பணியும் இங்ஙனம் முன்வைக்கப்பட்டது. வர்க்க சமரசமும் அவ்வாறே முதலாளித்துவச் சார்பும் கொண்ட மென்ஷிவிக். சமூக ஜனநாயகவாதிகளுக்கு எதிராகவாகும். மென்ஷிவிக்குகள் தமது விதிமுறையை சீரமைத்துக் கொள்வது சமூக சக்திகளின் வரலாற்று உந்துதலுக்கு இணங்க அல்லாது பொறிமுறை ரீதியில் செய்யப்பட்ட புள்ளிவிபரவியல் கணக்கெடுப்புக்களுக்கு இணங்கவேயாகும். அவர்களின் கண்கள் ரூஷ்யாவின் தொழிலாளர் வர்க்கம் முழுச் சனத்தொகையில் நூற்றுக்கு 7-8 வீதமான சிறுபான்மையினருடன் கட்டுண்டு கிடந்தது. அவர்கள் பொருளாதாரத்திலும் மத்தியமயமான சமூக சக்தியாகவும் கொண்டிருந்த இடம் அதைக் காட்டிலும் பெரிதும் அளப்பரியதாகும். உதாரணமாக எடுத்தால் பீட்டர்ஸ்பேர்க் நகர கைத்தொழில் நகரில் 40 இலட்சம் தொழிலாளர்கள் திரண்டு இருந்தனர். இதில் 33 இலட்சத்து 50 ஆயிரம் பேர் வேலை செய்வது 140 இராட்சத பக்டரிகளிலாகும். மென்ஷிவிக்குகளின் கவனத்தில் இவ்விடயங்கள் ஏறுவதாக இருக்கவில்லை. அவர்களுக்கு எதிராக புரட்சியின் பின்னர் அமைக்கப்படும் அரசாங்கத்தின் தன்மை பற்றி லெனின் கொண்டிருந்த கருத்தையும் புரட்சிக் கட்சியின் சுயாதீனமான பாத்திரத்தின் தீர்க்கமான தன்மை பற்றி ட்ரொட்ஸ்கி கொண்டிருந்த கருத்தையும் உலக யுத்தத்தின் மத்தியில் பெற்ற படிப்பினைகளுக்கு அமைய மாற்றிக் கொண்டு, அவர்கள் இருவரும் போல்ஷிவிக் தலைவர்கள் 1917 அக்டோபர் புரட்சியின் இணைத் தலைவர்களாகினர்.

## சம முன்னோக்கு

ஸார் மன்னர் ஆட்சியினால் வேட்டையாடப்படுவதில் இருந்து தப்ப இரு நாடுகளில் வாழ்க்கையை நடாத்திய லெனினும் ட்ரொட்ஸ்கியும் 1917 பெப்பிரவரி புரட்சி சம்பந்தமாகவும் அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த முதலாளித்துவ அரசாங்கம் சம்பந்தமாகவும் வர்க்க சமரசவாதிகளுக்கு எதிராக வெவ்வேறான ஆனால் ஆளுக்காள் சமமான விதத்தில் முன்நோக்கினை அபிவிருத்தி செய்து கொண்டனர். ட்ரொட்ஸ்கி தாம் நியூயோர்க் நகரில் முகம் கொடுத்த ஒரு சம்பவத்தை அழகான விதத்தில் விபரிக்கின்றார். அவர் பெப்பிரவரி புரட்சி சமயத்தில் அமெரிக்காவில் வாழ்ந்த பரந்த அளவிலான ரூஷ்ய மக்களிடையே அரசியல் ரீதியில் தொழிற்பட்டு 'நொச்சி மிர்' என்ற ரூஷ்ய மொழி சஞ்சிகையை வெளியிட்டு வந்தார்.

(16ம் பக்கம் பார்க்க)

## சோசலிச சமத்துவக் கட்சியின் வடபிராந்திய குழுவின் வாழ்த்துச் செய்தி

"அக்டோபர் புரட்சியின் 80வது ஆண்டுநிறைவுக் கூட்டத்துக்கு எமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

"சாப்பாட்டுக்கு மட்டும் வாயைத் திறவுங்கள்" என இங்குள்ள மக்கள் கூறுகின்றார்கள். இக்கட்டத்தில் அவர்களைப் பற்றியும் பேசுங்கள். அவர்கள் சார்பிலும் பேசுங்கள். வாயைத் திறவுங்கள். குரல் கொடுங்கள். அக்குரல் மூலம் இலங்கைத் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப முன்நோக்கிச் செல்ல வேண்டும். இந்த ஐக்கியம் மட்டுமே எமது விடுதலைக்கான அடிப்படை அவசியம். இத்தகைய ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப போராடாமல், வாயை மூடிக்கொண்டு, குரல் கொடுக்காமல் பட்டினியில் மடிந்து போவதைப் பரிசாக ஏற்றுக்கொண்டு, மடிந்து போக நாம் தயார் இல்லை. நாம் உயிர்வாழும் வரையில் தொழிலாளர் வர்க்க ஐக்கியத்துக்காகப் போராடச் சபதம் பூணுகின்றோம்.

நாம் போல்ஷிவிக்குகள் சென்ற பாதையில் செல்வோம். இந்த உத்வேகத்துடன் லெனினின் உருவை மனதில் பதித்து கொண்டு, நாம் ஒரு உருவத்தை வரைந்து கொண்டோம். அந்தச் சித்திரம் சோசலிஸ்ட் குரலை முன்னெடுக்கின்றது. இந்தச் சித்திரத்தினை நாம் என்றும் எமது உள்ளத்தின் அடியில் நிரந்தரமாக ஊன்றியுள்ள சிந்தனையை வெளியரங்குக்கு கொணரும் குரலாக நோக்க வேண்டும். போல்ஷிவிசம் எமது உடம்பில் எங்கும் தொழிற்படும் உயிராகும். அது எமது சகபாடி. எமக்கு வழிகாட்டுவது மார்க்கிசம், லெனினிசம், ட்ரொட்ஸ்கிசம்.

அக்டோபர் புட்சியின் 80வது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் நாமும் கலந்து கொள்வோம். உங்களுடன் கூட்டத்தில் பேசுவோம் என மனதில் சித்திரம் வரைந்து மகிழ்ச்சி அடைகின்றோம். அக்டோபர் புரட்சி நீடூழி வாழ்க! என கூட்ட இறுதியில் நாமும் சேர்ந்து குரல் கொடுப்போம். நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் உலக சோசலிசப் புரட்சிக்கு தலைமை வழங்கி முன்னோக்கிச் செல்லுவோம் எனக் குரல் கொடுப்பதாக கூறி, நிறைவு செய்கின்றோம்.


//



அக்டோபர் புரட்சி 80வது ஆண்டு நிறைவையொட்டி சோ.ச.க. நடாத்திய கண்காட்சியை ஆர்வத்துடன் ரசிப்போர்.

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சிசமும் உற்பத்தியின் பூகோளமயமாக்கமும்

2

மூலதனம் மார்க்ஸ் விளக்கியது போல், மூன்று உருவில் இருந்து கொண்டுள்ளது. பண்ட மூலதனம் - முதலாளித்துவ நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள், நிதி மூலதனம், உற்பத்தி மூலதனம்-இயந்திரங்கள், மூலப் பொருட்கள்.

முதலாளித்துவ வரலாற்றின் முன்னோடிக் காலப்பகுதிகள் மூலதனத்தின் பூகோளமயமாக்கத்தினை (அனைத்துலக வர்த்தகத்தின் பரம்பலின் ஊடாக) பண்ட வடிவிலும் பின்னர் மூலதனத்தின் பூகோளமயமாக்கத்தை (அனைத்துலக முதலீட்டினதும் நிதியினதும் வளர்ச்சியின் ஊடாக)பண வடிவிலும் கண்டனர். ஆனால் உற்பத்தி வடிவிலான மூலதனம்- இலாபத்தைக் கறக்கும் உற்பத்திப் போக்கில் தொழிலாளர் வர்க்கத்தின் உழைப்புடன் இணைந்த இயந்திரம். மூலப்பொருட்கள்- தொடர்ந்தும் தேசிய அரசுடனேயே பிணைக்கப்பட்டு இருந்து வந்தது.

ஆனால் தொடர்ந்தும் நிலைமை அவ்வாறாக இருந்து வரவில்லை. உற்பத்தி வடிவிலான மூலதனம் பூகோளமயமாகியது.

உற்பத்தி மூலதனத்தை தேசிய அரசில் இருந்து பிரிப்பதோடு உலக முதலாளித்துவத்தில் மற்றுமோர் தீர்க்கமான பண்புரீதியான மாற்றமும் ஏற்பட்டது. அதனை தொழிலாளர் சனத் தொகையின். வாழ்க்கைத் தரத்தின் விஸ்தரிப்பில் இருந்து இலாபத் திரட்சியை பிரித்தல் எனக் குறிப்பிடலாம்.

யுத்தத்தின் பின்னைய செழிப்பில் பொருளாதார வளர்ச்சியும் இலாபப் பரம்பலும் அதிகரித்த தொழில் வாய்ப்புக்களுடனும் உயர்ந்த சம்பளம். வாழ்க்கைத் தரத்துடனும் இணைந்து கொண்டிருந்தது. "ஜெனரால் மோட்டார்ஸ் கம்பனிக்கு எது நல்லதோ அது அமெரிக்காவுக்கு நல்லது" என 1950பதுகளில் ஜெனரால் மோட்டர்ஸின் தலைவராக இருந்த சார்ள்ஸ் வில்சன் குறிப்பிட்டதில் நியாயமான உண்மை பொதிந்து போயிருந்தது.

இது எதுவிதத்திலும் தொடர்ந்து உண்மை அல்ல. சகல முதலாளித்துவ நாடுகளிலும் இலாபம் திரட்டப்படுவது எல்லாவற்றுக்கும் மேலாக உள்வாரி செலவுத் திறமைகள் (செலவு வெட்டு) தொழில் வெட்டு. உழைப்பை வெட்டித் தள்ளும் புதிய போக்குக்களை அபிவிருத்தி செய்தல் மூலமாகும். "தமது கைத்தொழிலின் பெருப்பத்தை விரைவாகக் குறைப்பவர் அதிகமாக இலாபம் பெறுகின்றார்" என்ற விதியை கடைப்பிடிக்கின்றார்.

இதுவரை நாம் இன்றைய முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படையில் போக்குக்களில் சிலவற்றைச் சுட்டிக் காட்டியுள்ளோம். ஆனால் பிரச்சினை வெறுமனே இந்த வரலாற்று மாற்றத்தினை சுட்டிக் காட்டுவது அல்ல. ஒரு விஞ்ஞான ஆய்வு ஆரம்பிக்க வேண்டிய இடம் இதுதான். இந்தப் போக்கின் பின்னணியில் உள்ள உந்து சக்திகள் என்ன? முதலாளித்துவத்தின் முழு வரலாற்று அபிவிருத்தியின் ஆய்வுகளின் அடிப்படையில் அவற்றை விளக்குவது எப்படி? இந்தக் கேள்விகளுக்கு நான் இப்போது திரும்ப உள்ளேன்.

## உபரிப் பெறுமானத்தை கறத்தல்

எந்த ஒரு வர்க்க சமுதாயத்தையும் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் ஆளும் வர்க்கத்தினால் அந்த சமூகத்தினுள் உடனடி உற்பத்தி மூலம் உபரி உழைப்பு பறித்துக் கொள்ளப்படும் விதத்தினை அம்பலமாக்குவதே என மார்க்ஸ் ஒருமுறை குறிப்பிட்டார். முதலாளித்துவத்துக்கு முன்னைய அடிமை, நிலமானித்துவ அமைப்பினுள் இந்தப் போக்கானது அரசியல் அதிகாரத்தினையும் பலாத்காரத்தையும் பிரயோகம் செய்வதன் மூலம் இடம்பெற்றது. அதாவது பொருளாதார மூலங்களுக்கு அப்பாற்பட்ட முறைகளிலாகும்.

தமது வாழ்க்கையை நடாத்துவதற்கு அவசியமான அளவுக்கு மேலாக தாம் உற்பத்தி செய்த உபரியை சொத்துடமை வர்க்கத்துக்கு கொடுக்க விவசாயியோ அல்லது அடிமையோ நெருக்கப்பட்டான்.

முதலாளித்துவ சமுதாயத்தில் இது அரசியல் பலாத்காரத்தின் மூலம் அல்லாது கூலி உழைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு உற்பத்தி முறையில் இருந்து எழும் பொருளாதாரப் போக்கின் உடனடி விளைவாக எழுகின்றது.

எவ்வாறாயினும் நிலமானித்துவத்துக்கும் அடிமை முறைக்கும் முரண்பட்ட விதத்தில் முதலாளித்துவ அமைப்பில் உபரி முறையை பிடுங்கிக் கொள்ளும் இந்தப் போக்கு தெளிவாகவும் ஊடுருவுவதாயும் தெரியக் கூடியது அல்ல. அதற்குப் பதிலாக உண்மையில் சுரண்டல் சமத்துவத்தின் அடிப்படையில் தொழிற்பட்டுக் கொண்டுள்ளதாகத் தோன்றுகின்றது. உழைப்புச் சக்தியை வாங்குவதும்(முதலாளி) உழைப்புச் சக்தியை விற்பனை செய்வபனான கூலி தொழிலாளியும் சந்தையினுள் சமத்துவமாக ஆளையாள் எதிர்கொள்கின்றார்கள்.

சமத்துவம் பற்றிய இந்தத் தோற்றப்பாட்டின் பின்னணியில் உற்பத்திச் சாதனங்களில் இருந்து முழுமனே பிரிக்கப்பட்டதும் தமது உழைப்பு சக்தியைத் தவிர வேறு விற்பனைக்கு எதுவும் இல்லாதவனுமான "சுதந்திர" சம்பள தொழிலாளி வர்க்கத்தை சிருஷ்டித்ததுமான நீண்ட முழு வரலாற்று போக்கு நின்று கொண்டுள்ளது. முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் இந்தப் போக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்றது. ஆனால் இந்த வர்க்கத்தைச் சிருஷ்டிக்க இடமளித்த போக்கு ஆசியாவின் சகல நாடுகளிலும் (சீனாவைப் போல்) இலட்சம். மில்லியன் கணக்கான விவசாயிகள் தமது உழைப்புப் சக்தியை அல்லது உழைக்கும் வல்லமையைத் தவிர விற்பனைக்கு வேறு எதுவும் இல்லாமல் செய்யப்பட்டு நகரங்களுக்கு கலைக்கப்பட்டு வருகின்றார்கள். உபரி உழைப்பின் ஊற்றுவாய் இருப்பது உழைப்பு சக்தியினதும் அதாவது கூலி உழைப்பாளி முதலாளிக்கு விற்கும் பண்டம் ஒரு வேலை நாளினுள் பொருள் உற்பத்தியின் போக்கினுள் பாவிக்கப்படும் இயந்திரம். மூலப் பொருட்களுக்கு அவன் சேர்க்கும் பெறுமதிக்கு இடையே பிரமாண்டமான மாற்றத்தினுள் உபரிப் பெறுமானத்தின் ஊற்றுவாய் உள்ளது. தொழிலாளர்கள் உழைப்புச் சக்தியின் பெறுமதிக்கு மேலாக உள்ள இந்த மேலதிகப் பெறுமானம் அல்லது உபரிப் பெறுமானம் இலாபத்தினதும் மூலதனத் திரட்சியினதும் அடிப்படையை ஏற்படுத்துகின்றது.

ஆனால் முதலாளித்துவ உற்பத்தியின் இருதயத்தில் உள்ள முதலாளித்துவ திரட்சிப் போக்கு ஒரு அடிப்படையானதும் தவிர்க்க முடியாததுமான முரண்பாட்டினால் பண்பாக்கம் செய்யப்படுகின்றது. உபரிப் பெறுமானத்தின் தனி ஊற்றுவாயும் அதுவாக இருப்பதால் முதலாளித்துவ அமைப்புப் போக்கின் தனி ஊற்றுவாயும் உயிர்ப்புஷ்டியான உழைப்பாக இருப்பதால்



நிக் பீம்ஸ்

முதலாளித்துவத் திரட்சிப் போக்கின் தொழிற்பாட்டின் அர்த்தம் உயிர்ப்புஷ்டியான உழைப்பு. உற்பத்திப் போக்கில் இடப்பட்ட முழு மூலதன அளவில் வரவர இது வீதாசாரமாக மாறுவதேயாகும்.

இதை வேறுவிதமாகச் சொன்னால்: ஒரு குறிக்கப்பட்ட அளவிலான உயிர்வாழும் உழைப்பு உபரி பெறுமானத்தின் ஒரே மூலம் பெருமளவிலான தொகையான மூலதனத்தை விரிவுபடுத்த வேண்டி இருக்கும் ஆதலால் முழு இலாப வீதமும் அதாவது முழுமையாக மூலதன விரிவாக்கத்தை ஆளுமை செய்யும் வீதமும் வீழ்ச்சி காணும் ஒரு உயிர்வாழும் போக்கு நிலவுகின்றது.

மார்க்ஸ் 'த்'மது ஆய்வுகளைத் தொடங்குவதற்கு பெரிதும் முன்னரே இந்தப் போக்கு காணப்பட்டதோடு அவருக்கு முன்னைய சகல முதலாளித்துவ பொருளியலாளர்களதும் அக்கறைக் குரியதாகவும் விளங்கியது. புதிதாக அபிவிருத்தி கண்டு வரும் முதலாளித்துவ உற்பத்தி முறையில் சில உயிர்புஷ்டியான வரையறைகள் இருந்து கொண்டுள்ளதை அவர்களுக்கு அது சுட்டிக்காட்டியது. இது போட்டியினால் ஏற்படுவது என அடம்ஸ் ஸ்மித் குறிப்பிட்ட வேளையில் ரிக்கார்டோ விவசாயத்தின் வீழ்ச்சி கண்டுவரும் உற்பத்தியின் விளைதிறனால் ஏற்பட்டதாகக் கூறினார்.

எனினும் மார்க்ஸ் இலாப வீதம் வீழ்ச்சி காணும் போக்கு முதலாளித்துவ உற்பத்தி அபிவிருத்திப் போக்கில் இருந்தே எழுந்ததாகக் காட்டினார். இது உழைப்பின் உற்பத்தித் திறனின் வீழ்ச்சியின் பெறுபேறாக அல்லாது அதன் அதிகரிப்பின் வெளிப்பாட்டின் விளைவாக ஏற்பட்டது என்றார். மூலதனத்தின் அதிகரிப்பு இயந்திரங்கள், பக்டரிகள், மூலப்பொருட்கள் உழைப்பின் சமூக விளைதிறனின் பெருக்கத்தை பிரதிபலித்தன. ஆனால் உயிர்வாழும் உழைப்புக்கு சார்பு ரீதியில் மூலதனத்தில் ஏற்பட்ட அதே அதிகரிப்பே தான் இலாப வீதம் வீழ்ச்சி காணும் போக்கை அதிகரிக்க வைத்தது.

## முதலாளித்துவ அபிவிருத்தியின் நீண்ட கால வளைகோடு

இலாப வீதத்தின் வீழ்ச்சியின் போக்கு எல்லாவற்றுக்கும் மேலாக "வரலாற்று நிலைப்பாட்டில் இருந்து""நவீன அரசியல் பொருளாதாரத்தின் மிகவும் முக்கியமான விதி" என மார்க்ஸ் கணித்தார்.

இந்த விதியின் வரலாற்று முக்கியத்துவம் சார்ந்திருப்பது உற்பத்திச் சக்திகளையும் உழைப்பின் சமூக விளைதிறனையும் அதிகரிக்க வைக்க முதலாளித்தவத்தில் உள்ள ஈவிரக்கமற்ற உந்துதலும் உற்பத்திச் சக்திகள் இந்த விதத்தில் இடைவிடாது புரட்சிகரமயமாக்குவதன் உள்ளும் கூலி உழைப்பையும் மூலதனத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு தகர்ந்து கொட்டுவதை நோக்கி தவிர்க்க முடியாத விதத்தில் பயணம் செய்வது எப்படி என்பதையும், அதன் மூலம் சமூகத்தின் சோசலிச பரிணாமத்துக்கும் சமூக உற்பத்தியின் பெரிதும் உயர்ந்த வடிவத்தை அபிவிருத்தி செய்ய புறநிலை நிலைமைகளை ஆயத்தம் செய்வது எப்படி என்பதையும் தெளிவாக்குகின்றது.

இந்த விதியின் தொழிற்பாட்டின் நிலைப்பாட்டில் இருந்து நான் முதலாளித்துவ உற்பத்தி சாதனங்களின் வரலாற்று அபிவிருத்தியை சுருக்கமாக ஆய்வு செய்ய இப்போது திரும்பவுள்ளேன்.அதைச் செய்வதற்கு முன்னர் நான் இரண்டு மிக முக்கியமான விடயங்களை வலியுறுத்த இடமளியுங்கள்.

முதலாவது, இலாபவீதம் வீழ்ச்சி கண்டு செல்லும் போக்கு விதியானது , முதலாளித்துவத்தின் உள்ளான ஒவ்வொரு பொருளாதார அபிவிருத்தியையும் இந்த விதியின் அடிப்படையில் விளக்க முடியும் என்பதைக் குறிக்காது .

இரண்டாவது, இலாப வீதம் எங்கும் எப்போதும் வீழ்ச்சி கண்டு செல்வதைக் குறிக்காது. மாறாக இந்தப் போக்கின் இயக்கமே முதலாளித்துவ உற்பத்தியின் ஏனைய சகல விதிகளைப் போலவே, எதிர்ப் போக்குக்களை செயற்பட வைக்கின்றது. இந்த எதிர்ப் போக்குக்களின் இயக்கம் உற்பத்தியின் உழைப்பு விளைதிறனை அதிகரிப்பதன் மூலமும் உபரி உழைப்பை ஈர்த்துக் கொள்வது , அதிகரிப்பதன் மூலமும் முதலாளித்துவ விஸ்தரிப்பு காலப்பகுதியை கொணரச் செயற்படுகின்றது.

இருந்த போதிலும் இந்த விதியின் அடிப்படையில் முதலாளித்துவத்தின் வரலாற்று அபிவிருத்தியினைக் கணிப்பதன் முக்கியத்துவம், நாம் முதலாளித்துவ விஸ்தரிப்பு, நெருக்கடியின் வெடிப்புக் காலப்பகுதிகளையும் அத்தகைய ஒரு

படிப்பகம்

www.padippakam.com



சகாப்தத்தில் இருந்து மற்றொன்றுக்கு இடைமருவுவதையும் விளக்க முடியும் என்பதைக் குறித்து நிற்கின்றது.

கார்ள் மார்க்சும் பிரெடரிக் எங்கேல்சும் கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதிய 1847 தொடக்கம் இன்று வரையிலான கடந்த 150 ஆண்டு காலத்துள் முதலாளித்துவத்தின் வரலாற்று அபிவிருத்தியின் நீண்ட வளைகோட்டில் கணிசமான வேறுபட்ட கட்டங்களையும், வேகமான இலாப விஸ்தரிப்பின் காலப்பகுதியில் இருந்து ஒரு இடத்தில் ஸ்தம்பித்து நிற்பதோடு வீழ்ச்சிகள் வரையிலான இலட்சணங்களையும் நாம் தெளிவாக இனங்கண்டு கொள்ள முடியும்.

கம்யூனிஸ்ட் அறிக்கையை எழுதிய காலத்தில் ஐரோப்பா 1848 புரட்சியினுள் வெடிக்க இருந்த சமூக, அரசியல் குமுறல்களின் விளிம்பில் இருந்து கொண்டிருந்தது. ஆனால் மார்க்சின் எதிர்பார்ப்பான சோசலிஸ்ட் புரட்சி முதிர்ச்சி காணாத ஒன்றாக நிரூபிக்கப்பட்டது. 1848ன் பின்னைய நீண்ட காலப் புயல்கள், அமுக்கங்களின் பின்னரே 25 ஆண்டுகளுக்கு நீடித்த மாபெரும் பொருளாதார விஸ்தரிப்பு காலப்பகுதி தோன்றியது.

1873 நிதி நெருக்கடி ஒரு திருப்பத்தைக் குறித்து நின்றது. உடனடியான நெருக்கடி தீர்க்கப்பட்டது. ஆனால் அதைத் தீர்த்தமை, 1850களின் 1860களின் விஸ்தரிப்பு கால நிலைமைகளுக்கு திரும்பியதைக் குறிக்கவில்லை. அதற்கு மாறாக இதன் பின்னர் விலைகளும் இலாபங்களும் 20வருடங்களுக்கு தேங்கி நின்ற ஒரு காலப்பகுதி தொடர்ந்தது. உண்மையில் 1930பதுகளுக்கு முன்னர் இக்காலப்பகுதி பொருளாதார இலக்கியத்தில் மாபெரும் மந்த காலம் என அழைக்கப்படுவது வழமையாக இருந்தது.

இக்காலப்பகுதி பூராவும் இலாப வீதங்கள் மீதான தொடர்ச்சியான நெருக்குவாரங்கள் உற்பத்தி போக்குக்களின் பரிணாமத்தையும் சந்தைகளுக்கும் இலாபங்களுக்குமான உக்கிரமான போட்டியினதும் செலவைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட புதிய பரந்த உற்பத்தி வடிவங்களை அபிவிருத்தி செய்வதனதும் உந்து சக்தியாக விளங்கின.

பெரும் முதலாளித்துவ வல்லரசுகள் தமக்கென காலனிகளையும் செல்வாக்கு பிராந்தியங்களையும் பேரரசுகளையும் பிரித்துக் கொண்டமைக்கான உந்து சக்தியாகவும் கூடவே இது இருந்து வந்தது. உதாரணமாக 1870க்கு முன்னர் ஆபிரிக்காவின் பத்தில் ஒரு பங்குக்கு குறைவான பங்கே ஐரோப்பிய முதலாளித்துவ வல்லரசுகளினால் காலனிகளாக்கப்பட்டு இருந்தது. ஆனால் நூற்றாண்டின் இறுதியில் முழுக் கண்டத்தினதும் 90வீதம் காலனித்துவ ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

19ம் நூற்றாண்டின் இறுதிக் காலாண்டில் காலனிகளின் சுரண்டலுடன் சேர்ந்து உழைப்பின் உற்பத்தி திறனின் பரந்த அதிகரிப்பின் வீழ்ச்சி காணும் இலாப வீதத்தினை மீண்டும் அதிகரிக்கச் செய்து, முதலாளித்துவ விஸ்தரிப்பின் காலப்பகுதியை உருவாக்கியது.

1890களின் நடுப்பகுதியில் பொருளாதார அரங்கில் ஆதிக்கம் கொண்டிருந்த பொருளாதார மந்தத்தின் இருண்ட முகில்கள் திடீரெனக் கலைந்தன. இது நாகரீகத்தின் ஒரு புதிய சகாப்தம் தொடர்பான முதலாளி வர்க்கத்தின் சகல வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வைக்கும் காலப்பகுதி வந்து விட்டது போல் தோன்றியது.

இந்த விஸ்தரிப்பின் புதிய காலப்பகுதி உருவாக்கிய சுபீட்ச மனோபாவம் எத்தகைய பலம் வாய்ந்ததாக விளங்கியது என்றால் அதை மார்க்சிச இயக்கத்தின் உள்ளும் தலைநீட்டச் செய்தது. அன்று பரந்த சோசலிச கட்சியாக விளங்கிய ஜேர்மன் சமூக ஜனநாயகத்தின் தலைவர்களில் ஒருவரான எட்வர்ட் பேர்ண்ஸ்டீன், முதலாளித்துவத்தின் வீழ்ச்சி பற்றிய மார்க்சின் கோட்பாடு, வரலாற்றினால் தவறானதாக நிரூபிக்கப்பட்டுவிட்டதென்ற முடிவுக்கு வந்தார்.

ஜேர்மன் சமூக ஜனநாயகம், சமூகப் புரட்சி வேலைத் திட்டத்தைக் கைவிட்டு, முதலாளித்துவ அமைப்பினுள்ளான ஒரு சமூக சீர்திருத்தக் கட்சியாகத் தன்னை பரிணாமம் செய்து கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார். உண்மையில் சோசலிசத்தின் இலட்சியங்கள் பழைய அமைப்பை தூக்கி வீசுவதன் ஊடாக அல்லாது அதைத் தொடர்ந்து விஸ்தரிப்பதன் மூலமே யதார்த்தமாகும்.

ஆனால் நாகரீகத்தின் ஒரு புதிய சகாப்தத்தை கொணர்வதற்கு மாறாக முதலாளித்துவத்தின் விஸ்தரிப்பே முதலாம் உலக யுத்த வடிவில் காட்டுமிராண்டித்தனத்தின் வெடிப்புக்கு இட்டுச் சென்றது. உலக யுத்தத்தின் வெடிப்பு பொருளாதார அபிவிருத்தி வளைகோட்டில் ஒரு தீர்க்கமான திருப்பத்தைக் குறித்து நிற்கின்றது. அதன் பின்னர் அதன் வெடிப்புக்கு முன்னர் இருந்து வந்த நிலைமைகளுக்கு திரும்பிச் செல்ல இடமிருக்கவில்லை.

உண்மையில் ஐரோப்பா முழுமையாக 1926 வரை யுத்தம் முடிவடைந்து எட்டு ஆண்டுகளின் பின்னர் அதன் 1913 உற்பத்தி மட்டத்தை அதனால் அடைய முடியவிலலை. பின்னர் இது 1930பதுகளில் முழு முதலாளித்துவ அமைப்பும் பொருளாதார மந்தத்தினுள் தலைமூழ்கிப் போவதற்கு முன்னர் ஒரு மூன்று ஆண்டு குறுகிய சார்பு செழிப்பையே அனுபவித்தது. இது யுத்தத்துடன் இணைந்த உற்பத்தி விஸ்தரிப்புடன் மட்டுமே முற்றுப் பெற்றது.

உலக முதலாளித்துவ அமைப்பு யுத்தத்துக்கு பின்னைய காலப்பகுதியில் அதன் நன்மையில் பெரிதும் நம்பிக்கை கொண்டவர்களின் எதிர்பார்ப்புக்களுக்கு மாறாக ஒரு புதிய பொருளாதார, அரசியல் சமபலநிலையை ஸ்தாபிதம் செய்தது. அது மாபெரும் விஸ்தரிப்பு காலப்பகுதிக்கான கட்டுமானத்தை வழங்கியது.

இந்தப் போக்குக்கு பல பக்கங்களும் அம்சங்களும் உள்ளன. யுத்தத்தின் பின்னைய அமைப்பின் நிர்மாணமானது ஒரு தொகை சிக்கலான பொருளாதாரப் போக்குக்களதும் அரசியல் ஆரம்பிப்புக்களதும் பெறுபேறாகும். எமக்குள்ள நேர காலத்தினுள் வெகு இலகுபடுத்தும் ஆபத்துக்கு முகம் கொடுத்தும் நான் இதனுடன் தொடர்புபட்ட அடிப்படை பொருளாதார போக்குக்களைக் குறிப்பிடுகின்றேன்.

ஒரு காலத்தில் "பொன் யுகம்" (Golden Age) என அழைக்கப்பட்ட இந்தக் காலப்பகுதியை ஆய்வு செய்கையில் நாம் என்றும் நினைவில் கொள்ள வேண்டிய விடயம், முதலாளித்துவ உற்பத்தியின் நோக்கம் ஒரு போதும் அந்த விதத்தில் பொருளாதார வளர்ச்சி அல்ல. ஒரு போதும் பரந்த மக்களின் சட அவசியங்களைத் திருப்தி செய்வதும் அல்ல. உபரிப் பெறுமானத்தை கறந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்ட மூலதனத் திரட்சியையே மையமாகக் கொள்கின்றது.

ஆதலால் நாம் கீழ்க்கண்ட கேள்விக்கு இட்டுச் செல்லப்படுகின்றோம்: குறைந்த பட்சம் முக்கிய முதலாளித்துவ நாடுகளில் ஜனத்தொகையில் பெரும் அளவிலானோரின் வாழ்க்கைத் தரத்தின் விஸ்தரிப்பை சாத்தியமானதாக்கிய இலாபத்தினதும் சந்தையினதும் தொடர்ச்சியான விஸ்தரிப்பை ஊர்ஜிதம் செய்த யுத்தத்தின் பின்னைய அமைப்பின் அடிப்படைப் பண்பு என்ன?

இது எல்லாவற்றுக்கும் மேலாக இணைப்பு வரிசை (assembly line) முறையை அடிப்படையாகக் கொண்ட அமெரிக்க முதலாளித்துவ உற்பத்தி விதிமுறையை அதிகமாக 1945ன் பின்னர் ஏனைய முன்னேறிய முதலாளித்துவ நாடுகளுக்கும் விஸ்தரித்ததாகும். 1913ல் முதற்தடவையாக ஹென்றி போர்ட்டினால் அபிவிருத்தி செய்யப்பட்ட 'இணைப்பு வரிசை' முறை உழைப்பின் உற்பத்தி திறனைப் பிரமாண்டமான அளவில் அதிகரித்ததோடு உபரி பெறுமானத்தை கறப்பதையும் ஒரு புதிய மட்டத்துக்கு உயர்த்தியது.

இந்த விதிமுறைகளை கைத்தொழிலின் சகல பிரிவுகளுக்கும் விஸ்தரிப்பதைத் தொடர்ந்து உருவான இலாபத்தில் ஏற்பட்ட பரந்த அதிகரிப்பும் அதன் பெறுபேறாக தேசிய சந்தைகளின் பரந்த விஸ்தரிப்புடனும் சேர்ந்து தொழிலாளர் வர்க்கத்தின் பரந்த பகுதியினர் அனுபவித்த மெய் ஊதியம் அதிகரிக்கவும் யுத்தத்தின் பின்னைய காலப்பகுதியில் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் அபிவிருத்தி செய்யப்பட்ட நலன்புரி அரச முறைகளுக்கான சட அத்திவாரத்தினை வழங்கியது.

முதலாளித்துவம் நீண்ட காலம் பூராவும் பொருளாதார, அரசியல் சமநிலையை ஸ்தாபிதம் செய்யவும், தக்க வைக்கவும் வெற்றி கண்ட போதிலும் அதனால் இயற்கையானதும் அடிப்படையானதுமான முரண்பாடுகளை வெற்றி கொள்ள முடியவில்லை. யுத்தத்தின் பின்னைய ஒழுங்கமைப்பின் பெறுபேறாக ஏற்பட்ட மூலதனத்தின் விஸ்தரிப்பே மீண்டும் இலாப வீதம் வீழ்ச்சி காணும் போக்கு தலைதூக்குவதைத் தவிர்க்க முடியாததாக்கியது. இது 1960பதுகளின் கடைப்பகுதியில் வெளிப்பாடாகியது.

உலக முதலாளித்துவம் ஒரு தொகை பொருளாதார கலகங்களினால் ஆட்டிப்படைக்கப்பட்டது. ஜனாதிபதி நிக்சன் 1971ல் அமெரிக்க ஐக்கிய அரசுகளின் டாலரின் தங்க அடிப்படையை நீக்கியதில் இருந்து யுத்தத்தின் பின்னைய ஒழுங்கின் கடை ஆணியாக 1944ல் அமைக்கப்பட்ட சர்வதேச நாணய அமைப்பு சிதறுண்டு போயிற்று. அதைத் தொடர்ந்து 1973ல் எண்ணெய் விலையும் துரித பணவீக்கமும் அதிகரித்தது. 1974 75ல் 1930பதுகளின் மாபெரும் மந்த நிலையின் பின்னர் உலகம் பூராவும் ஆழமான பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது.

1974 75 பொருளாதாரப் பின்னடைவின் பின்னர் பொருளாதார எழுச்சி காணப்பட்ட போதிலும் 1950பதுகளதும் 1960பதுகளதும் நிலைமை திரும்பவில்லை. 1981-82ல் அதைக் காட்டிலும் ஆழமான பொருளாதாரப் பின்னடைவு ஏற்பட்டது.

வானியல் ஆய்வுகளுடன் கூட்டாகப் பார்க்கையில் வர்த்தக சைக்கிளோட்டத்திலான ஏற்ற இறக்கங்களை காலநிலையின் மாற்றங்களுக்கு ஒப்பிட முடியும் என்றாலும் நீண்ட கால மாற்றங்கள் காலநிலையிலான அடிப்படை மாற்றங்களைக் குறிக்கின்றன.

1974 75ன் பின்னர் முழு பொருளாதார காலநிலையும் ஒரு பரிணாமத்துக்கு உள்ளாகியது. 1950, 1960 பதுகளில் கம்பனிகள் விஸ்தரிக்கும் சந்தைகளதும் முதலீடுகளதும் வாய்ப்புக்களுக்கு முகம் கொடுத்தன. இப்போது எல்லாவற்றுக்கும் மேலாக இலாப வீதம் மீதான நெருக்குவாரம் மூலம் பண்பாக்கம் செய்யப்பட்ட புதிய(பொருளாதார) ஆட்சி அமைக்கப்பட்டுக் கொண்டிருந்தது.

தொடரும்

## உலக நிதி சந்தையில் பெரும் நெருக்கடி...

(ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளியலாளர்களால் ' 'வருணிக்கப் பட்டுவந்த ஹொங்கொங் பங்குமுதல் சந்தையில் அக்டோபர் 27ம் திகதி வரையிலான கிழமைக்குள் பங்குகளின் பெறுமதி நூற்றுக்கு 33 வீதத்தினால் வீழ்சசி கண்டது. கடந்த நான்கு மாதங்களில் ஆசிய புலிகள் (Asian tigers) என வருணிக்கப்பட்டு வந்த மலேசியா, தாய்லாந்து, சிங்கப்பூர் முதலிய நாடுகளின் பண அலகுகளின் பெறுமதி நூற்றுக்கு 40 வீதத்தினால் வீழ்ச்சி கண்டதோடு, பங்குகளின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டன. கடந்த ஆண்டின் கடைப்பகுதியில் இருந்து இதுவரையும் தென்கொரியாவின் நாணயமான கொன்னின் பெறுமதி நூற்றுக்கு 16.6 வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது.

உலக நிதி, பங்குமுதல் சந்தைகளைப் பிடித்துக் கொண்டு, பரவிவரும் இந்நெருக்கடியை ஒரு சாதாரண செயற்பாடாக அல்லது ஊகக் காரர்களின் நிர்மாணமாகக் காட்ட முதலாளித்துவ ஆளும் வர்க்கங்களும் அவர்களின் ஆய்வாளர்களும் முயற்சிக்கின்றனர். மலேசியப் பிரதமர் மொஹமட் மஹதீர் தொடர்ந்து ஊகக்காரர்களை திட்டி வருகின்றார். சூரிச் இன்வெஸ்ட்மென்ட் செக்கியூரிட்டி மேனேஜ்மன்ட கம்பனியின் டேவிட் ஹோல் என்ற ஆய்வாளர் "இது சில இடங்களில் வீழ்ச்சியாக இருந்தாலும் ஏனைய இடங்களில் அது சந்தையை சீர்படுத்துவதாகும்"என்றுள்ளார்.

அக்டோபர் 27ம் திகதிய நெருக்கடியின் மத்தியில் பத்திரிகையாளர்கள் எதிரில் தோன்றிய அமெரிக்க திறைசேரி செயலாளர் றொபேட் ரூபின் பின்வருமாறு குறிப்பிட்டார்: "அமெரிக்க அரசுகளின் பொருளாதாரத்தின் அடிப்படை பலம் வாய்ந்தது எனவும் குறைந்த பணவீக்கத்துடனும் குறைந்த மட்டத்திலான வேலையின்மையுடனும் பொருளாதாரத்தின் எதிர்காலம் பலம் வாய்ந்தது எனவும் ஞாபகப்படுத்திக் கொள்வது முக்கியம்" என்றுள்ளார். இது முதலாளிகள் இடையே ஏற்பட்டுள்ள குழப்பத்தை தணிக்க பில் கிளின்டன் அரசாங்கத்தின் கையாலாகாத்தனமான ஒரு முயற்சியே அன்றி வேறொன்றும் அல்ல. சில ஆய்வாளர்கள் அக்டோபர் 29ம் திகதி 'கறுப்பு செவ்வாய்' எனப் பெயர் சூட்டியுள்ள பிரமாண்டமான பங்குமுதல் சந்தை வீழ்ச்சியுடன் இன்றைய நெருக்கடியை ஒப்பிட்டு அவ்வளவுக்கு ஒன்றும் இடபெற்றுவிடவில்லை எனக் கூறியதன் மூலம் இந்தக் கலக்கத்தையே காட்டிக் கொண்டுள்ளனர்.

ஆனால் நிஜ நிலைமையோ இவை அனைத்தினதும் மறு பக்கம் ஆகும். "பொருளாதாரங்களின் அடிப்படை கொள்கைகள் "பலம் பெற்றுவிடவில்லை. முதலாளித்துவ பொருளாதாரத்துடன் தொடர்பான அடிப்படை விதிகள் தொழிற்பட்டு அவற்றின் சிதைவுகளும் வீழ்ச்சிகளும் அபிவிருத்தி பெறத் தொடங்கி உள்ளன.

## தொழிலாளர் வர்க்கத்து க்கு எதிரான தாக்குதல்

நியூயோர்க் பங்குச் சந்தையில் இம்முறை வீழ்ச்சி ஏற்படுவதற்கு முன்னதாக- அக்டோபர் 8ம் திகதி அமெரிக்க காங்கிரஸ் வரவு செலவுத் திட்டச் சபையின் எதிரில் தோன்றிய அமெரிக்க பெடரல் றிசேர்வ் வங்கி (மத்திய வங்கி)யின் தலைவர் அலன் கிறீன்ஸ்பான் பங்குமுதல் சந்தையின் பெரும் அதிகரிப்பை நிறுத்தி, தொழிலாளர் வர்க்கத்தின் முன்நோக்கிய பயணத்தைத் தாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். அவர் கூறியது இதுதான்: "பங்குமுதல் சந்தை ஏறினாலும் சரி இறங்கினாலும் சரி கடந்த சில வருடங்களாக அறிக்கை செய்யப்பட்ட விதத்திலான பெரும் அளவினால் பங்குமுதல் சந்தையில் இருந்து பலன் பெறப் பார்ப்பது யதார்த்தமானது அல்ல."

தொழில்களில் ஏற்பட்ட அபிவிருத்தி சம்பளம், மற்றும் உரிமைகள் சம்பந்தமான தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களையும் தோன்ற இடமளிக்கும் எனக் குறிப்பிட்டு கிறின்ஸ்பான் பின்வருமாறு குறிப்பிட்டார்: "சமீப காலங்களில் இடம்பெற்ற 20 இலட்சங்களுக்கு அதிகமான தொழில்களின் நிர்மாணம் தொடர்ந்தும் ஏற்படுமானால் சம்பளத்தின் மீது நெருக்குவாரமும் அத்தகைய ஆட்களை 'சம்பளத்துக்கு அமர்த்தும் செலவும் மிகவும் வேகமாக அதிகரிக்கும். ஆகஸ்ட்- செப்டம்பர் மாதங்களில் தொழில் அதிகரிக்கும் வேகம் குறைந்தது. எனினும் தொழில் அதிகரிப்பு வேண்டுமான மட்டும் குறையவில்லை."

(இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன் 1997 அக்டோபர் 20)

அவர் இத்துடன் வட்டி வீதத்தினை அதிகரித்து, முதலீட்டை ஸ்தம்பிக்க வைக்கவும் மற்றும் வேறும் பல நலன்புரி சேவைகளை ஒழித்துக் கட்டவும் சிபார்சுகளை முன்வைத்தார். வர்த்தகர்களும் மின்சார அதிர்ச்சி போலிருந்த இந்த அறிக்கையினால் நியூயோர்க் பங்குமுதல் சந்தையில் டியூயோன்ஸ் கைத்தொழில் சுட்டெண் 83 புள்ளிகளால் வீழ்ச்சி கண்டது.

தொழிலாளர் வர்க்கத்தின் முன்நோக்கிய பயணத்திற்கு தாக்குதல் நடாத்தி இலாபமான உழைப்பைச் சுரண்டுவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் ஆளும் வர்க்கத்தின் கும்பல்கள் எந்தளவு நனவான முறையில் செயற்படுகின்றன என்பதை கிறீன்ஸ்பானின் கூற்றுத் தெளிவுபடுத்துகின்றது. நிதிச் சந்தையின் குழப்பங்கள் நிறைந்த இந்த நெருக்கடி, ஆளும் வர்க்கத்தின் இந்தத் திட்டங்களின் மற்றொரு குழப்ப நிலைமையையும் காட்டிக் கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com

திரைப்பட விமர்சனம்



# பண்டிட் குயின் பெண்ணீய விமர்சகர்களை சவால் செய்யும் திரைப்படம்

தர்ஷன மேதிஸ்

கடந்த ஆண்டில் இந்தியாவில் பெரும் குழுறல்களை உருவாக்கிய **Bandit Queen** (கொள்ளை ராணி) என்ற கலர்த் திரைப்படம் சமீபத்தில் இலங்கையிலும் திரையிடப்பட்டது. வர்க்கம், சாதி, பால் வேறுபாடுகளை மையமாகக் கொண்டு அளப்பரிய கெடுபிடிகளுக்கும் பயமுறுத்தல்களுக்கும் மானபங்கங்களுக்கும் உள்ளான பூலான் தேவி என்ற இளம் பெண் தனது ஒடுக்குமுறையாளர்களிடம் பழிக்குப் பழி வாங்கிய உண்மைக் கதை இங்கு சித்தரிக்கப்படுகின்றது. பிரபல எழுத்தாளர் மாலா சென் எழுதிய திரைக் கதைக்கு இணங்க இயக்குனர் சேகர் கபூரினால் 1994ல் நெறிப்படுத்தப்பட்ட இத்திரைப்படம், இன்றைய ஒடுக்கப்படும் இந்திய மகளிர் முகம் கொடுக்கும் பயங்கரமான வாழ்க்கை நிலைமைகளையும் அவர்களின் உணர்வுகளுள் சுடர்விடும் வரலாற்று விடுதலை வேட்கையையும் ஒடுக்கப்படும் ஆட்சிக்கு எதிரான தனிநபர்வாத எதிர்ப்பின் அர்த்தமற்ற தன்மையையும் தெளிவாகச் சித்தரித்துக் காட்டுகின்றது.

இத்திரைப்படத்தின் எதிரில் நடுக்கம் பிடித்த இந்திய தணிக்கைச் சபையினர் அதை திரையிட தயக்கம் காட்டிய அதே வேளையில்' பெண்ணீய சினிமா விமர்சகர்கள் முழு மௌனம் சாதித்தனர். அச்சமயத்தில் ஆளும் ஜனதா தாள் கட்சியின் பாராளுமன்ற அங்கத்தவராக விளங்கிய பூலான் தேவியும் இத்திரைப்படத்துக்கு எதிர்ப்புக் காட்டினாள்! "பண்டிட் குயின்" யதார்த்தத்தைச் சித்தரிக்கின்றது என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக்காட்டாகும்.

உத்தரப் பிரதேச மாநிலத்தில் வறிய "சாதி குறைந்த" குடும்பத்தில் பிறந்த பூலான், 11 வயது நிறைந்த பெண்ணாக இருக்கையில் தெரிந்த ஒருவருக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். வர்க்க, சமூக, ஆணீய திருமணத் துறையின் கெடுபிடிகளை அறிந்திராத இந்தப் பெண், கணவனின் கொடிய பாலியல் துன்புறுத்தல்களை சகிக்காமல் ஓடிவிடுகின்றாள். ததநன்தர மாகாணத்தில் சாதிக்காரர்களின் சல்லாப நோட்டங்களுக்கு இலக்காகும் பூலான் அவர்களின் பொருத்தமற்ற யோசனைகளுக்குத் தலைகுனியாது போகும் நிலையில் அவர்களின் பல்வேறு தொல்லைகளுக்கும் ஆளாகின்றாள். தாகூர் குடும்ப உயர்சாதி கிராமத் தலைவர்களால் ஒழுக்கக் குறைவான பெண்ணாகச் சேறடிக்கப்பட்டு, நாடுகடத்தப்படும் பூலான் வசிப்பிடம் கிடைக்காது போகும் நிலையில் மீண்டும் ஊர் திரும்புகையில் பொலிசுக்கு கொண்டு செல்லீப்படுகின்றாள். பொலிஸ் குண்டர்கள் அவளைத் தாக்குகின்றனர்; அவமானம் செய்து கிலியடைய வைக்கின்றனர். சிறீராம், லாலாராம் என்ற தாகூர் சகோதரர்கள் தீய நோக்குடன் அவளுக்கு பிணை நிற்க முன்வருகின்றனர். திரும்பவும் பெற்றோரிடம் செல்லும் பூலான் மலைநாட்டு கொள்ளையர்கள் கும்பலினால் கடத்திச் செல்லப்படுகின்றாள். தலைவன் சௌரயாவின் நோக்கமும் தாகூர்காரர்கள் வரும்வரை அவளை உடலுறவு அடிமையாக வைத்திருப்பதே. இந்தக் கும்பலில் இருந்து வேறுபட்ட ஒரு கொள்ளையர் தலைவனின் பாதுகாப்பைப் பெறும் பூலான் தனது கன்னிக் காதலை அவனுக்கு வெளிப்படுத்துகின்றாள். விக்கிரம் மல்லாக் என்ற இந்த "குறைந்த சாதி" இளைஞன் பின்னர் கள்வர் கும்பலின் தலைவனாகின்றான். ஆனால் கள்வர்களை வழிநடாத்தும் தாகூர் சகோதரர்கள் அவனைக் கொன்று விடுகின்றார்கள். பின்னர் காமவெறி கொண்ட பண்ணையர்களால் கூட்டாகக் கற்பழிக்கப்படும் பூலான் ஆத்திரமடைந்து கொதித்து எழுகின்றாள். கொள்ளையர் கும்பலுக்குத் தலைமை தாங்கி தன்னை அவமானம் செய்து, துன்புறுத்திய, கற்பழித்த உயர் சாதிக் காரர்களின் வீடுகளில் பாய்ந்து விழும் பூலான் அவர்களின் சொத்துக்களை கொள்ளையடிக்கின்றாள். அவர்களை சித்திரவதை செய்கிறாள். ஒரு கூட்டத்தினரை கொலையும் செய்கின்றாள். இறுதியில் அரச ஒடுக்குமுறை இயந்திரத்தின் முற்றுகையின் எதிரில் அடியோடு தனித்துப் போன பூலான் அரசாங்கத்திடம் சரணடைகின்றாள்.

பயங்கரமும் பரிதாபமும் நிறைந்த இந்த வாழ்க்கை வரலாறு பண்டிட் குயினில் யதார்த்தமான முறையில் அதாவது, வர்க்க, சமூக சக்திகளின் செயற்பாட்டின் பெறுபேறாகப் பகுத்துக் காட்டப்படுவதோடு, இங்கு குறிப்பிடப்பட்ட யதார்த்த சிருஷ்டியானது கற்பனை உருவினுள் சினிமா வடிவில் தொழில்சார் படைப்பில் இணைந்த மூலகங்களாக ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. முற்றிலும் வர்த்தக ரீதியில் இரண்டு' ' திரைப்படங்களை நெறிப்படுத்திய கபூர். அத்தகைய பட்டியல் சினிமாவுக்கு பொருத்தமான சகல மூலகங்களையும் கொண்டிருந்த போதிலும் மேலே குறிப்பிட்ட உள்ளடக்கத்தை கலைவடிவில் நிர்மாணிப்பதில் வெற்றி கண்டுள்ளார். இந்த வெற்றியின் இரகசியம் என்ன? நெறியாளரின் மீள்சிருஷ்டியானது நவீன மகளிர் மையங்களின் சினிமாவின் உள்ளடக்கத்தில் ஆளுமை செலுத்தும் பெண்ணீயம் என்ற பார்வை முகமூடியில் இருந்து விடுபட்டுள்ளதேயாகும். ஆண்கள் எதிர்ப்பையும், தனியாள் எதிர்ப்பையும் பெண்கள் விடுதலையின் முழு உயர்ந்த நிபந்தனையாக தனித்துவமாகக் காட்டும் பெண்ணீய சிந்தனையை இத்திரைப்படம் சவால் செய்கின்றது.

## சாதிப் பாகுபாடு

மறுபுறத்தில் பண்டிட் குயினை வெறும் சாதிப்பாகுபாட்டை அடிநாதமாகக் கொண்ட ஒரு திரைப்படமாகக் காட்டும் உத்தியோகபூர்வமான விமர்சகர்களின் மதிப்பீடுகளுக்கு இந்தியாவைப் போலவே இலங்கையிலும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் பெரும் முக்கியத்துவம் கொடுத்தன. வர்க்கப் பாகுபாடு என்ற — பெரிதும் முக்கியமான அடிநாதம் அதன் மூலம் பூசி மெழுகப்படுகின்றது.

பூலான் சாதிப் பாகுபாட்டுக்கு பலியான ஒரு பெண் என்பதும் அவளின் முழு வாழ்க்கை வரலாறும் அதன் பெறுபேறே என்பதும் உண்மைதான். சிறிய பூலான் தன்னுடன் சேஷ்டைகளில் ஈடுபட்ட கேடுகெட்டவர்களுக்கு தொடுக்கும் தூஷணங்கள் நாற்றம் கண்டதும் சாதிப்பாகுபாடு நிறைந்ததுமான சமூகத்தின் மீது எய்யும் நச்சு அம்புகள் போன்றவை. ஆனால் சாதி என்பது வர்க்கங்களுக்கு மேலாக ஆகாயத்தில் பருத்துக் கொழுத்து இனங்கண்ட சக்தி அல்ல; வர்க்க சமுதாயத்தினுள் இருந்து எழுந்ததாகும்..அடிமை முறையின் மிச்ச சொச்சங்களாகும். நிலமானித்துவ சகாப்தத்தின் நிலப் பிரபுக்கள் ஏழை மக்கள் மீது தமது வர்க்க ஆட்சியை கொண்டு நடாத்தியது இந்த "சாதி புனிதத்தின்" பேராலாகும். முதலாளித்துவ அமைப்பின் தோற்றத்துடன் நிலமானித்துவ உற்பத்தி உறவுகளுடன் தோன்றிய தோற்றப்பாடாக பழைய சாதி முறை ஒழிந்தது. (தனது பக்டரி யந்திரத்தினுள் காலடி வைக்கும் தொழிலாளர்களின் சாதியின் மூலம் முதலாளிக்கு பலன் கிடையாது என மார்க்ஸ் எழுதினார்.) ஆனால் முதலாளித்துவ புரட்சியின் பாத்திரம் இட்டுநிரப்பப்படாத இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் இன்றும் கோலோச்சும் சாதிப்பாகுபாட்டை துடைத்துக் கட்டுவதில் தேசிய முதலாளி வர்க்கம் தோல்வி கண்டுள்ளது. தொழிலாளர் வர்க்கத்திடம் இருந்து தோன்றும் சவாலை சிதறடிக்கப் பயன்படுத்தக் கூடிய ஒரு ஆயுதமாக அவர்கள் சாதிப் பாகுபாட்டை பேணி வருகின்றனர். ஆளும் அதிகாரம் கொண்ட கொம்பிரதோர் முதலாளிகளின் ஆட்சி அதிகாரம் அவர்களின் வாரிசுகளின் கைகளிலேயே இருந்து கொண்டுள்ளது. "சாதிகுறைந்த "வர்களாகக் கணிக்கப்படுபவர் களிடையில் இருந்து தோன்றிய முதலாளிகளும் சாதிமுறையை பேணுவதற்கு ஊக்கம் அளிக்கின்றனர்.

சாதிப் பாகுபாட்டின் இந்த நிலைமைகளைப் பூரணமாகவும் சகல கோணங்களிலும் ஆய்வு செய்யாது போனால் சாதிப்பாகுபாட்டுக்கான பின்னணியாக நிச்சயமாக வர்க்க (பொருளாதார) காரணி இருந்து வந்தது என்ற சக்திவாய்ந்த உண்மையில் பாலியல் வன்முறை என்பது ஏதேனும் ஒரு சிறப்பு கொடியவர்களால் அல்லது கயவர்கள் கும்பலால் ஏற்படக்கூடிய தற்செயலான தவறு அல்லாது ஒழுங்கமைக்கப்பட்ட முதலாளித்துவ வர்க்க சமுதாயத்தினுள் ஒடுக்கப்பட்ட பெண் முகம் கொடுக்கும் பொது கஷ்டமாகும் என்ற சரியான அறிவை பண்டிட் குயின் சிருஷ்டிக்கின்றது. பூலானின் இளமைப் பருவத்தில் அவளின் சுமையில் இருந்து அவளின் பெற்றோர் விடுபடுவது (சாதிப் பிரச்சினையால் அல்ல) பொருளாதார வறுமையின் காரணத்தினாலாகும்; போஷிக்க வேண்டிய இன்னும் பல குழந்தைகள் வீட்டில் இருந்ததனாலாகும். பூலர்னுடன் செல்லும் மாப்பிளையிடம் இருந்து அவர்களுக்கு ஒரு சைக்கிளும் பசுவும் கிடைக்கின்றது. நெஞ்சை அதிர வைக்கும் இந்தக் காட்சியை ரசிக்கும் இரசிகனின் ஆத்திரம் பூலானின் முதிய பெற்றோர் மீது அன்றி அவர்களை அந்த நிலைமைக்குத் தள்ளிய முதலாளித்துவ அமைப்பின் மீது படிந்தாக வேண்டும்; பூலானிடம் மனம்போன போக்கில் கெடுபிடிகளில் ஈடுபட்ட பண்ணையர் காமவெறியர்கள், உயர் சாதியினர் மீது மட்டுமன்றி, முதலாளித்துவ அதிகாரம் படைத்த தட்டினர் மீதும் படிந்தாக வேண்டும் எனத் தோன்றுகின்றது. பொலிசாருடன் சேர்ந்து செயற்படும் இந்த கோடீஸ்வரர்கள் சில வேளைகளில் கைது செய்யப்பட்டாலும்அது உலகத்தை ஏமாற்றச் செய்யும் ஒரு நடவடிக்கையாகும். சிறைச்சாலையின் உள்ளும் அவர்களின் அதிகாரம் நிலவுகின்றது. சிறைச்சாலை ஊழியர்கள் அவர்களுக்கு விசேட சலுகை காட்டுகின்றார்கள். சிறைச்சாலை அதிகாரியின் வார்த்தையில் சொன்னால்: தாகூர் சகோதரர்களுக்கு சிறைச்சாலை வாழ்க்கை என்பது அவர்களின் இல்லத்திலேயே விடுமுறையைக் கழிப்பது போன்றதாகும்.பூலானை

படிப்பகம்

www.padippakam.com



மடக்கிப் பிடிக்கச் செல்லும் அதிகாரபூர்வமான இராணுவத்தின் வழிகாட்டிகள் அவளைக் கற்பழித்த கிரிமினல்களே! ஒடுக்கும் உயர்குல ஆட்சியும் முதலாளித்துவ அரசாங்கமும் இரண்டல்ல. ஒன்றே என்பது இதன் அர்த்தமாகும்.

ஒரு சமுதாயம் பெண் தொடர்பாகக் கடைப்பிடிக்கும் மனப்பான்மை அந்தச் சமுதாயத்தின் கலாச்சாரத்தினைக் காட்டும் அளவீடாகக் கொள்ளப்படுகின்றது. நவீன அரை நிலமானித்துவ பண்புகளைக் கொண்ட முதலாளித்துவ பாரதத்துக்கு மேலாக இங்கு பாகமானியைத் தூக்கிப் பிடிக்கும் கபூர் ரசிகர்களை அதன் அளவுகோலைப் பார்த்துக் கொள்ள இடமளிக்கின்றார். திரைப்படம் ஆரம்பிப்பது : "கால்நடைகள், மேளம், படிப்பறிவற்றோர், சாதிகுறைந்தோர், அலைந்து திரிவோர் பொல்லடிக்கு இலாயக்கானவர்கள்" என்ற மனித இனத்தினுள் தோன்றும் போதனையுடனாகும். புராண (இந்து) தர்மத்திலும் சாதி ஒடுக்குமுறைக்கும் மகளிர் அடக்குமுறைக்கும் முக்கியம் அளிக்கப்படுவதை இது பிரதிபலிக்கின்றது. சாதிவெறியர்களால் அசிங்கப்படுத்தப்படுவது பூலானின் உடல் மட்டுமல்ல; முழு மகளிரினதும் ஆத்ம கௌரவமும் ஜனநாயக உரிமையும் கூடவே தவிடுபொடியாக்கப்படுவது எமக்குத் தென்படுகின்றது. மணல் நிறைந்த காய்வனவான பின்னணி நிலம், மகளிர் ஒடுக்குமுறையையும் அவமானத்தையும் பெற்றுத்தரும் வர்க்க சமுதாயம் என்ற நாசக்கேட்டைக் குறித்து நிற்கின்றது.

உயர்ந்த மட்டத்திலான உருவ அமைப்பும் எடிட்டிங்கும் 'பண்டிட் குயினைப்' பொறுத்த மட்டில் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன. சிறப்பாக பாலியல் உறவுகளை காட்டுகையில் நெறியாளர் காட்டும் திறமை பெரிதும் பாராட்டுக்கு உரியவை. மலைப் பிராந்தியங்களில் பூலான் கொள்ளையர் தலைவனின் கெடுபிடிகளுக்கு பலியாகும் வேளையும் காடையர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து மிருகத்தனமாக பூலானை கெடுக்கும் வேளைகளும் அவர்கள் அவளை நிர்வாணமாக்கி பகிரங்கமாக பொதுக் கிணற்றடிக்கு இழுத்துச் செல்லும் காட்சியும் அதற்கு நல்ல உதாரணமாகும். இளம் பூலானினால் அவளின் கணவன் தாக்கப்பட்ட உருவங்கள் அவன் பூலானின் பற்களை உடைக்கும் முன்னைய உருவங்களுடன் ஒப்பிட்டுக் காட்டப்படுகின்றன. தாக்குதலுக்கு உள்ளான கணவன் போடும் ஓலங்கள் இளம் மனைவி எழுப்பும் ஓலங்களினால் அமர்ந்து போகின்றது. இந்த விதத்தில் கலைப் பண்புகளுடன் கலை உணர்வுகளுடன் பெரிதும் அபூர்வமான விதத்தில் மிகவும் பிரபல்யமான முறையில் சேகர் கபூர் இதை நிர்மாணித்துள்ளார்.

பூலானுக்கும் விக்கிரம் மல்லாகுக்கும் இடையேயான பிணைப்புக்களும் அந்த பாத்திரங்களின் பழக்கங்களுக்கும் பின்னணி சுற்றாடலுக்கும் அமைய வெளிப்பாடாகின்றது. அந்தக் காதலிலும் கூட முரண்பாடுகளுக்கு குறைவே இல்லை. அச்சமும், சந்தேகமும் பதட்டமும் நிறைந்த சுற்றாடலின் மத்தியில் இடம்பெறும் காதல்கள் கடுமையானதும் கண்டிப்பானதும். சிலவேளைகள் அவளின் நடவடிக்கைகள் கூட அவளுக்குப் பிடிப்பதாக இல்லை. ஆனால் சேகர் கபூர் பூலானை ஆண்கள் விரோதி பாத்திரமாக சாயந் தீட்டவில்லை. அவளை பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாக்கிச் சுரண்டப் பார்க்காத இரண்டாவது கள்வர் கும்பலின் தலைவன் மீதும், இறுதி வரையும் அவளுடன் இணைந்து நிற்கும் கருணை கொண்ட சகா மீதும் பூலான் நெருக்கமான மனோபாவத்தை கொண்டுள்ளாள்.

அசோக் மேத்தாவின் கமரா பார்வையின் திறமை திரைப்படம் பூராவும் பரந்து பட்டுள்ளது. உலர் மலையகத்தை அண்டிய காட்சிகள் படமாக்கப்பட்டுள்ள முறை பாராட்டுக்குரியவை. எம். இர்ஷாட்டின் இசை ஒரு தடவை அடித் தொனியிலும் மறுதடவை உச்சத் தொனியிலும் ஒலிப்பதன் மூலம் உள்ளடக்கத்தில் சூல்கொண்டுள்ள அச்சத்தையும் சோகத்தையும் உக்கிரமாக்குகின்றது. பூலான் பாத்திரத்தை ஏற்று நடிக்கும் புதுமுகமான நடிகை சீமா பிஸ்வாஸ் தலைசிறந்த பாத்திரத்தினை வகித்துள்ளார். ஆயிரம் தொல்லைகளுக்கு உள்ளாகும் பூலானின் சிக்கல்களையும் குழப்பங்களையும் நன்கு சித்தரிப்பதில் அவர் வெற்றி கண்டுள்ளார். ஏனைய நடிகர்களும் நடிகையர்களும் அவளுக்கு அளப்பரிய உதவிகள் புரிகின்றனர்.

பூலான்தேவி சாதி ஒடுக்குமுறைக்கும் ஆடவர் ஆதிக்கத்துக்கும் பாலியல் வன்முறைக்கும் எதிராக தனிநபர்வாதத்தின் அடிப்படையில் கொதித்து எழும் ஒரு பெண் பாத்திரமாகவே வரலாற்றில் காட்டப்படுகின்றாள். உயர் சாதியினர் தொடர்பாக "சாதி குறைந்தவர்கள்" இடையே கொதித்துக் கொண்டுள்ள உணர்வுகளின் மோகினிக் கோலம் பூலானின் வன்முறை நடவடிக்கைகளில் பிரதிபலிக்கின்றது. ஆனால் அந்த விதிமுறை விடுதலைக்கு வழிவகுத்துக் கொடுக்கும் என நெறியாளர் ஒரு கணம் தன்னும் சைகை செய்வதாக இல்லை. அதற்கு முரணாக அத்தகைய வன்முறைப் பிரதிபலிப்புக்கள் முற்றுப் பெறுவது ஒன்றில் மன்னிக்க முடியாத அடக்குமுறையில் அல்லது கீழ்ப்படிவில். இந்த வரலாற்று உண்மையை அவர் எம்முன் கொணர்ந்து நிறுத்துகின்றார். உண்மையில் ஸ்பார்ட்டகஸ் தொடக்கம் பூலான் வரையிலான இங்கு குறிப்பிடப்பட்ட நாடகம் வரலாறு முழுவதும் திரும்பத்திரும்ப இடம்பெற்றுள்ளது. வரலாறு என்ற கிளர்ச்சியில் ஒரு தடவை அரங்கேறிய நாடகம் இரண்டாம் தடவை பெரும் பிரசித்தி பெறுவது வெறும் விகடமாக ஆகும் என மார்க்ஸ் கூறினார். தனிநபர் கிளர்ச்சியைத் தவிர வேறு எந்த ஒரு பதிலீடும் இருந்திராத ஒரு வரலாற்றுக் காலகட்டத்தில் அடிமைத்தனத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்த ஸ்பார்ட்டகஸ் ஒரு வீரனாக மரணமெய்தினான். ஆனால் ஒடுக்கும் வர்க்கத்தை தூக்கி வீசக் கூடிய வேலைத்திட்டமும் சிந்தனையும் விஞ்ஞானபூர்வமான சோசலிசம் அல்லது மார்க்சிச புரட்சிவாதம் ஒடுக்கப்படும் வர்க்கத்திடம் இருந்து வரும் இக்காலத்தில் தனிமைப்படுத்தப்பட்ட கிளர்ச்சிகளில் இறங்கிய பூலான் கேவலமான விதத்தில் எதிரிக்கு அடிபணிந்தாள். பிரபுத்துவத்துக்கு எதிராக அதற்கு ஈடான உக்கிரமான போராட்டத்தில் ஈடுபட்ட பூலான், இறுதியில் மாநில முதலமைச்சரை முதன்மையாகக் கொண்ட நிலமானித்துவ பண்ணையர்களின் முன்னிலையில் தலைகுனிந்து ஆயுதத்தை கீழே வைக்கும் காட்சி மெய் சிலிர்க்க வைக்கின்றது.

பொதுவில் எந்த ஒரு அதிதீவிரவாத இயக்கத்தின் பின்னாலும் இழுபட்டுச் செல்லும் மக்கள் கூட்டம் இருப்பது பிரசித்திபெற்றது என்றாலும் பூலான் சம்பந்தப்பட்ட நிலைமை அப்படி அல்ல. பூலானின் இந்தத் தற்காலிக "வெற்றி" அவளின் உறவினர்கள் உட்பட்ட சகோதர மக்களுக்கு ஏதேனும் ஒரு உத்வேகத்தை வழங்கியது. அவ்வளவுதான். எவ்வாறெனினும் பூலான் கைதுசெய்யப்பட்டதோடு அவளைச் சூழ அணிதிரளும் எதிர்ப்புரட்சி இயக்கத்தினை எதிர்வு கூறும் விதத்தில் அதாவது தனக்கு ஜே போடும் மக்களுக்கு அவள் எதிரியின் மேடையில் இருந்து கையசைப்பதுடன் திரைப்படம் நிறைவு பெறுகின்றது. அதன் மூலம் பூலான்தேவி, வெகுவிரைவில் பிற்போக்கு முகாமைச் சென்றடைய உள்ள அரசியல் வாழ்க்கை தோன்றுவதன் மூலத்தை எதிர்வு கூற முடிகின்றது.

## விடுதலையின் நிஜ பாதை

இந்த விதத்தில் பிறப்பிலேயே சினிமா கலைஞனாகப் பரிணாமம் கண்டு (பெண்ணியவாதிகளால் குறிப்பிடப்படும்) ஒடுக்குமுறையாளனுக்கு எதிரான தனிநபர் கிளர்ச்சிகளின் பெருமை பற்றிய தப்பெண்ணங்களை உடைந்து எறிந்தாலும் விடுதலையின் நிஜ பாதை-வர்க்கப் போராட்டம் திசையில் சுட்டு விரல் நீட்ட சேகர் கபூர் தவறிவிட்டார். புரட்சிகர நனவு போக்குடைய கலைஞனாக அவர் இன்னமும் வளர்ச்சி காணாததே அதற்குக் காரணம். அதனால் முதலாளித்துவ அரசாங்கத்திடம் பூலான் சமர்ப்பிக்கும் நிபந்தனைகளை தனது குடும்பங்களுக்கு பாதுகாப்பு, வாழ்க்கைக்கான நிலம், குழந்தைகளுக்கு கல்வி சோசலிசப் புரட்சியிடம் ஒப்படைக்கப்பட்ட அதன் மூலம் மட்டுமே நிறைவு செய்யக் கூடிய பணியாக காட்டுவதில் அவர் வெற்றிபெறவில்லை.

உலகளாவிய ரீதியில் பாட்டாளி வர்க்கத்தின் உச்சியில் குந்திக் கொண்டுள்ள ஸ்டாலினிஸ்டுகள் உட்பட்ட நானாவிதமான குட்டி முதலாளித்துவ, மத்தியதர வர்க்க தீவிரவாதிகள் ஒடுக்கப்படும் மக்களை ஏமாற்றி, நாற்றம் கண்ட முதலாளித்துவ அமைப்புக்கு இடமளித்துள்ள ஒரு நிலைமையில் தனிநபர்வாத வன்முறைகளும் குட்டி முதலாளித்துவ ஆயுதக் கிளர்ச்சிகளின் தோற்றமும் அதற்கு தற்காலிக வெகுஜன ஆதரவும் கிடைப்பது தவிர்க்க முடியாதது. எனினும் நாம் வாழும் இந்த இடைமருவு சகாப்தத்தில் சோசலிசப் புரட்சிக்கு முக்கிய தடையாக இருந்து கொண்டுள்ள தொழிலாளர் வர்க்கத்தின் தலைமை பற்றிய பிரச்சினை தீர்க்கப்படாத வரை இன்னும் பல பூலான் தேவிகள் மேலும் மேலும் தோன்றுவர். இந்தத் திட்டவட்டமான காரணமும் திரைப்படத்தின் உள்ளடக்கத்தில் இடம்பிடிக்கவில்லை.

மேற்குறிப்பிட்ட விதத்தில் சில பலவீனங்களுடன் தனிநபர்வாத முரண்பாடுகளின் நிச்சயமான வங்குரோத்தினையும் பிற்போக்கையும் காட்டும் பூலான் காட்சி கலையம்சங்கள் நிறைந்ததாக மீளநிர்மாணிக்கப்பட்டுள்ளதால் சேகர் கபூரின் பண்டிட் குயினை ஒரு தலை சிறந்த சினிமாப் படைப்பாக மதிப்பிட முடியும்.

எட்டு ஆண்டுகளின் பின்னர் சிறையில் இருந்து விடுதலையான பூலான் தேவி பண்டிட் குயினின் புகழ்பெற்ற எதிர்வுகூறலை நிரூபிக்கும் விதத்தில் அரசியலில் புகுந்ததோடு 1996ல் நடைபெற்ற இந்தியப் பொதுத் தேர்தலில் 37000 அதிகப்படியான வாக்குக்களால் மீராபூர் தொகுதியில் வெற்றி பெற்றாள். உரிய விதத்தில் அவள் பிரதிநிதித்துவம் செய்தது பிற்போக்கு குட்டி முதலாளித்துவ கட்சியையே. இன்று அவள் தொழிலாளர் எதிர்ப்பு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளில் நெருக்கமாக இணைந்து கொண்டுள்ளாள். நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள முதலாளித்துவ ஆசீர்வாதங்கள் அவளுக்குக் கிடைத்துள்ள போதிலும் சில நிலமானித்துவ பண்ணையர்களின் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாகும் நிலைமையும் தலைதூக்கியுள்ளது.

உண்மையில் ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினர் விடுதலை பெறுவது பூலான் முன்மாதிரியின் அடிப்படையிலோ அல்லது பூலான் எம். பி. முன்மாதிரியின் அடிப்படையிலோ அல்ல. தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள வேண்டும். சாதிப் பாகுபாடுகளை ஒழிப்பதும், மகளிர் விடுதலை உதயமாவதும் அதன் மூலமே. இந்தியத் துணைக் கண்டத்தில் இதற்கு போராடுவது நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகளான இந்திய சோசலிச தொழிலாளர் கழகமும் இலங்கை சோசலிச சமத்துவக் கட்சியுமே.



பண்டிட் குயினில் ஒரு காட்சி

www.padippakam.com

# மார்க்சிசத்தின் இன்றைய ஏற்புடமையை அக்டோபர் புரட்சி ஊர்ஜிதம் செய்கின்றது...

(11ம் பக்கத் தொடர்ச்சி)

பெப்பிரவரி புரட்சி பற்றிய செய்தி வெளியானதுதான் தாமதம் இந்தச் சஞ்சிகையின் அலுவலகத்துக்கு டசின் கணக்கில் பத்திரிகையாளர்கள் இடைவிடாது ஓட்டமெடுத்து வந்த விதத்தை ட்ரொட்ஸ்கி விபரிக்கின்றார். புரட்சியின் ஒலியினால் குழம்பிப் போயிருந்த முதலாளித்துவ பத்திரிகைக்காரர்கள் பேட்டி காண ட்ரொட்ஸ்கியிடம் விண்ணப்பித்தது ரூஷ்யாவில் நடைபெற்றுள்ளது என்ன என்பதை விளங்கிக் கொள்ள முடியாது போன நிலைமையிலாகும்.

சோசலிச பத்திரிகைகள் எனப்பட்டவற்றின் அலுவலகங்களில் நிலவியதும் இதில் இருந்து வேறுபட்ட நிலைமை அல்ல. தமது ரூஷ்ய சகாக்களான மென்ஷிவிக்குகள் அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்வது பற்றி இந்த சோசலிஸ்டுகள் ஊக்கம் அடைந்தனர். மகிழ்ச்சியில் பொங்கி வழிந்த இவர்களில் ஒருவர் ட்ரொட்ஸ்கியுடன் தொலைபேசியில் பேசி குச்சிகோவ் மிலியகோவ் கூட்டு அமைச்சரவை அமைத்துள்ளதாகக் கூறினார். அவர் ட்ரொட்ஸ்கியிடம் இதன் அர்த்தம் என்ன? எனக் கேட்டார். இதன் அர்த்தம சமூகப் புரட்சியாளர் கெரென்ஸ்கிக்கும் மென்சிவிக்குகளுக்கும் இடையே நாளை கூட்டு அமைக்கப்படும் என ட்ரொட்ஸ்கி பதில் அளித்தார். ஆ அப்படியா? அப்படியானால் அடுத்தது என்ன? பேசியவர் கேட்ட அடுத்த கேள்வி இதுதான். ட்ரொட்ஸ்கி சுருக்கமாகப் பதில் அளித்தார். "அடுத்ததா? அடுத்தது எமது முறை" என்றார். அப்படியா! எனக் கூறி தனது மகிழ்ச்சியின்மையையும் அதிருப்தியையும் வெளிக்காட்டியபடியே பேசியவர் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

இதைத் தெளிவுபடுத்துகையில் ட்ரொட்ஸ்கி கூறியதாவது, தான் கூறியதை ஒரு பெரும் பகிடிக்கு மேலாக எந்த ஒரு போலிச் சோசலிஸ்டும் கணிக்கவில்லை. அவர்களிடையே நல்லவர்கள் எனக் கணிக்கக் கூடிய ஒரு குழுவுக்கு விரிவுரை நடாத்துகையில் ட்ரொட்ஸ்கி இதே முன்நோக்கையே வர்க்க சமரசவாதிகளுக்கு எதிராகத் தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்துக்கு இருந்து வந்த இடத்தை தெளிவுபடுத்தினார். அப்போதும் இதே பிரதிபலிப்புக்களே வெளிப்பட்டன. புரட்சிகர நிலைமையினுள் மனித இனம் வரலாறு பூராவும் குறுகிய காலத்தினுள் பிரமாண்டமான பாய்ச்சல் எடுக்கும் சக்தியைக் காட்டிக் கொண்டுள்ளது. இது விஸ்தரிப்புவாத சோசலிஸ்டுப்புக்ளின் தலை மண்டைக்குள் நுழையாது போவது அவர்களின் அக்கறையின் ஊற்றுவாயாகும். அதன் மூலம் அவர்கள் வர்க்க சமரசத்தினுள் சிறைப்பட்டுக் கிடந்தனர்.

ரூஷ்யாவில் இருந்துவந்த போல்ஷிவிசத் தலைர்கள் இக்கட்டத்தில் காட்டிய முதலாளித்துவ ஆட்சி தொடர்பான சந்தர்ப்பவாத இணக்கங்களுக்கு எதிராக லெனின் ஒரு முறை தொலைவில் இருந்து அனுப்பும் கடிதங்கள் மூலம் தினமும் ஆலோசனைகள், எச்சரிக்கைகள் வழங்கி வந்தார். போல்ஷிவிக் கட்சியினுள் இந்தப் போராட்டத்தை லெனின் வெற்றி கண்டது. 1917 ஏப்பிரலில் ரூஷ்யாவுக்கு திரும்பி வந்து கட்சிக்கு சமர்ப்பித்த 'ஏப்பிரல் ஆய்வுகள்' மூலம் முன்னெடுத்த திடமான போராட்டத்தின் ஊடாகவாகும். அக்டோபர் புரட்சிக்கு தலைமை வழங்குவது தொடர்பாக போல்ஷிவிக் கட்சி திருப்பி, பதாகையை கைக்குள் கொணர்ந்தது அதன் மூலமேயாகும். நியூயோர்க் நகரத்தில் இருந்து சகிப்பற்ற விதத்தில் ரூஷ்யா செல்லப் புறப்பட்ட ட்ரொட்ஸ்கி கனடாவில் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, ஒரு மாதத்துக்கும் அதிக காலம் சிறை வைக்கப்பட்டிருந்தார். ட்ரொட்ஸ்கி ரூஷ்யா வர முடிந்தது 1917 மேயிலாகும். ட்ரொட்ஸ்கியும் லெனினும் சேர்ந்து சில மணித்தியாலங்களும் கழியவில்லை. போல்ஷிவிக் கட்சியில் உத்தியோகபூர்வமாக இணைவதற்கு முன்னரே ட்ரொட்ஸ்கி போல்ஷிவிக்குகளின் பேச்சாளராக சோவியத் சபைகளில் பேசி, தொழிலாளர் சம்மேளனத்துக்கு நடாத்திய தெளிவாக்கங்கள் தொழிற்பட்டன.

## புரட்சியின் அனைத்துலக அடிப்படை

அக்டோபர் புரட்சியில் லெனின் ட்ரொட்ஸ்கி தலைமையின் முன்நோக்கு சம்பந்தமாகத் தீர்க்கமான மற்றொரு துறைக்கு நாம் இனித் திரும்புவோம். அது ரூஷ்யப் புரட்சியின் அனைத்துலக அடிப்படை பற்றிய பிரச்சினை.

ஆட்சியாளர்கள் நிலமானித்துவ மன்னராட்சிக் காரர்களாக இருந்து வந்ததாலும் பிரமாண்டமான கிராமப்புறங்களில் நிலச்சொந்தக் காரர்களான பிரபுக்கள் ஆதிக்கம் கொண்டிருந்ததாலும் ரூஷ்யப் பொருளாதாரத்தின் அடிப்படை மையமாக விளங்கியது, முதலாளித்துவ கைத்தொழில்களைக் கொண்டிருந்த நகரமே. 1893 1913 வரையிலான காலப் பகுதியினுள் உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற விரைவான முதலாளித்துவ பொருளாதாரத்தின் அபிவிருத்தியின் காலப்பகுதியில் ஐரோப்பிய ஏகாதிபத்திய மூலதனம் ரூஷ்யாவினுள் பரந்த அளவில் பெருக்கெடுத்து வந்தது. இதனால் ரூஷ்யாவின் தலைவிதி உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தலைவிதியுடன் பிணைக்கப்பட்டு இருந்தது என்பதை மார்க்சிஸ்டுகள் தொடக்கத்தில் இருந்தே புரிந்து கொண்டிருந்தனர்.

முதலாளித்துவப் பொருளாதாரத்துடன் ரூஷ்யாவில் உருவான புதிய சமூக வர்க்கமான தொழிலாளர் வர்க்கம், ஐரோப்பிய தொழிலாளர் வர்க்கத்தின் அனுபவங்களினால் போஷிக்கப்பட வேண்டும் எனவும் சிறப்பாக உலக சோசலிச இயக்கம் போரிட்ட கோட்பாட்டு, அரசியல் பிரச்சினைகளை நெருக்கமாக ஆய்வு செய்ய வேண்டும் எனவும் ஆரம்பத்தில் இருந்தே வலியுறுத்தி வந்தனர்.

1903ல் போல்ஷிவிக் போக்குக்கு அத்திவாரமிட்ட லெனினின் 'என்ன செய்ய வேண்டும்' என்ற நூல் உருவாக்கப்பட்டது. 1890களின் கடைப்பகுதியில் ஜேர்மனி சமூக ஜனநாயக இயக்கத்தினுள் தோன்றிய பேர்ண்ஸ்டீன் சீர்திருத்தவாதத்துக்கு எதிராக உலக மார்க்கிச இயக்கம் முன்னெடுத்த போராட்டத்தின் ரூஷ்யத் தொடுவையாகும். தொழிற்சங்க ரீதியிலான தேசியவாத பொருளாதாரவாதத்துக்கு எதிராக அனைத்துலகவாத விஞ்ஞானபூர்வமான சோசலிசத்தினால் தொழிலாளர் வர்க்கத்தினைப் பயிற்றியாக வேண்டும் என்பதையே போல்ஷிவிக்குகள் உறுதியாகக் கொண்டனர். இதற்கு முரணாக தொழிற்சங்கவாத பொருளாதாரவாதத்தில் தொங்கிக் கொண்ட மென்ஷிவிக்குகளைப் போலவே சமூகப் புரட்சியாளர்களும் மாபெரும் ரூஷ்ய தேசியவாதத்தின் பாதுகாவலர்களாகினர்.

போல்ஷிவிக்குகள் சுட்டிகாட்டிய நிலைப்பாட்டின் தீர்க்கமான தன்மை, 1914ல் முதலாம் ஏகாதிபத்திய உலக யுத்தம் வெடித்ததுடன் அம்பலமாகியது. ஏகாதிபத்திய வல்லரசுள் உலகத்தைப் பங்கிட்டுக் கொள்ள இரத்தம் தோய்ந்த உலக யுத்தந்துக்கு கிளம்புகையில் ஏகாதிபத்திய மூலதனத்தின் பங்காளர்களான ரூஷ்ய ஆட்சியாளர்கள் அதில் இருந்து விலகிக் கொள்ள இடம் இருக்கவில்லை. இதனால் ரூஷ்யத் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைப்பாடானது உலக யுத்தத்தின் ஒரு பாகமாக அனைத்துலக ஐக்கியத்தின் அடிப்படையில் ஏகாதிபத்திய யுத்தத்தை எதிர்ப்பதாக விளங்க வேண்டியிருந்தது. மார்க்சிஸ்டுகளுக்கு இடையே கருத்துவேறுபாடுகள் இல்லாமல் அங்கீகரிக்கப்பட்ட கொள்கை அதுவே.

ஆனால் ஏகாதிபத்திய குத்து வெட்டுக்களுக்காக பொதுமக்களைத் தூண்டிவிடவும் அணிதிரட்டவும் ஆளும் வர்க்கங்கள் தத்தமது நாடுகளில் கட்டவிழ்த்துவிடட நச்சுத்தனமான தேசிய வெறியின் எதிரில் அநேக பழம் மார்க்சிஸ்டுகளின் இரு பாதங்களும் பலம் இழந்தன. ஜேர்மன் சமூக ஜனநாயகக் கட்சியினுள் அணிதிரண்டுபோய் இருந்த தொழிற்சங்கவாத, தேசியவாத, பொருளாதார வாதிகளின் செல்வாக்கு எத்தகையது எனச் சொன்னால் அக்கட்சி அடியோடு ஜேர்மன் ஏகாதிபத்திய யுத்தக் கரத்தைக்கு கீழ்ப்பட்டது. அக்கட்சியினுள் அனைத்துலகவாத தொழிலாளர் வர்க்க நிலைப்பாட்டுக்காக நின்றுவந்தது பொருளாதாரவாதம் தொழிற்சங்கவாத ஆளுமைக்கு எதிராக ஆரம்பம் தொடக்கம் போராடிவந்த றோஷா லக்சம்பேர்க், கார்ள் லீப்னேக்ட் போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய சிலரே.

ரூஷ்ய போல்ஷிவிக் கட்சி உலக புரட்சிகர இயக்கத்தின் உச்சிக்கு வந்தது லெனின் உலக யுத்தத்தின் மத்தியில் எடுத்த சமரசமற்ற தொழிலாளர் வர்க்க அனைத்துலகவாத நிலைப்பாட்டினாலாகும். ட்ரொட்ஸ்கியின் அனைத்துலகவாத நிலைப்பாடு பற்றி, லெனினுக்கு ஆரம்பம் தொட்டே எதுவிதமான சந்தேகமும் இருந்தது கிடையாது. இதை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு 1917 ஏப்பிரல்களில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை இங்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

நியூயோர்க் நகரில் இருந்து புறப்பட்டு வருகையில் ட்ரொட்ஸ்கி பிரித்தானிய அதிகாரிகளால் கனடாவில் ஹலிபாக்சில் சித்திரவதை முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை பற்றிய செய்தி ரூஷ்யப் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்தது. இதனால் குழம்பிப்போன பீட்ரோகிராட் நகரின் பிரித்தானிய தூதுவர் அலுவலகம் ஒரு உத்தியோகபூர்வமான அறிக்கையை வெளியிட்டது. அது கூறியதாவது : "கனடாவில் கைது செய்யப்பட்டுள்ள ரூஷ்யர்கள், தற்காலிக ரூஷ்ய அரசாங்கத்தை வீழ்த்துவதற்கு ஜேர்மன் தூதுவர் அலுவலகத்தின் உதவியோடு பயணம் செய்து கொண்டு இருந்தவர்கள்." என்பதாகும். இதைக் கண்டதும் லெனின் ஏப்பிரல் 16ம் திகதி 'பிராவ்டா' பத்திரிகையில் பிரித்தானியர்களின் குற்றச்சாட்டுக்கான பதிலாக ஒரு அறிக்கையை பிரித்தானிய அதிகாரிகளுக்கு குறிவைத்து வெளியிட்டார்.

அதில் குறிப்பிடப்பட்டு இருந்தது இதுதான்: "1905ல் சென்ட் பீட்டர்ஸ்பேக் தொழிலாளர் சோவியத் சபையின் தலைவராக சுய எதிர்பார்ப்புக்கள் இல்லாது புரட்சிக்காக வருடக்கணக்கில் அர்ப்பணம் செய்த புரட்சியாளனான ட்ரொட்ஸ்கி இந்த மனிதனுக்கு ஜேர்மன் அரசாங்கத்தின் உதவி கிடைத்த திட்டத்துடன் எந்த ஒரு தொடர்பும் இருக்க முடியும் எனக் கூறும் அறிக்கையின் நிஜத் தன்மையை ஒரு கணத்துக்கு தன்னும் நம்ப முடியுமா? இது ஒரு புரட்சியாளனுக்கு எதிராக சோடிக்கப்பட்ட பொய்யானதும் ஆதாரமற்றதும் கடைகெட்டதுமான குற்றச்சாட்டாகும். உங்களின் தகவல் கிடைத்தது யாரிடம் இருந்து திரு .புக்கனன்? நீங்கள் அதை அம்பலப்படுத்தாதது ஏன்? ஆறு ஆட்களால் தோழர்.ட்ரொட்ஸ்கி அவரின் கைகளிலும் கால்களிலும் பிடித்து இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். இவை எல்லாம் தற்காலிக அரசாங்கத்துடனான நட்புறவின் பெயரில் செய்யப்பட்டவை"

போல்ஷிவிக் கட்சியில் சேர்வதற்கு மட்டுமன்றி, 1917ல் ரூஷ்யாவில் இறங்குவதற்குக் கூட முன்னரே லெனினுக்கும் ட்ரொட்ஸ்கிக்கும் இடையே உருவாகி இருந்த தோழமையின் பிணைப்பை அந்த அறிக்கை நன்கு தெளிவுபடுத்துகின்றது. அவ்வாறே ட்ரொட்ஸ்கி கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதன் மூலம் அம்பலமாகும் மற்றொரு விடயம் என்னவெனில் தேசியவெறியில் ஊறிப் போன மென்ஷிவிக்குகள் எந்தளவுக்கு சதிகாரர்களாகி அனைத்துலகப் புரட்சியாளர்களை வேட்டையாடுவதில் ஈடுபட்டிருந்தனர் என்பதாகும். புக்கனன் தனது ஞாபகக் குறிப்புக்களில் எழுதியிருப்பதாவது: "ட்ரொட்ஸ்கியும் ஏனைய ரூஷ்யர்களும் ஹலிபாக்சில் தடுத்து வைக்கப்பட்டது அவர்களைப பற்றிய தற்காலிக அரசாங்கத்தின் கருத்தை அறிந்து கொள்வதற்காகவே இடம்பெற்றது." கைது செய்தல் இடம்பெற்றவுடன் அதைப் பற்றி ரூஷ்ய அரசாங்கத்துக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் கூறுகின்றார். ட்ரொட்ஸ்கி உட்பட்ட குழுவினரின் விடுதலை ரூஷ்ய சோவியத் சபையின் தலையீட்டைத் தொடர்ந்தே இடம்பெற்றது. இது பெப்பிரவரி புரட்சியின் பின்னர் சோவியத் சபைகளுக்கும் முதலாளித்துவ கூட்டரசாங்கத்துக்கும் இடையே நிலவிய இரட்டை ஆட்சி நிலைமையை எடுத்துக் காட்டுகின்றது. தொழிலாளர் வர்க்க சர்வாதிகாரத்துக்கான நிலைமைகள் இதன் மூலம் சிருஷ்டிக்கப்பட்டு இருந்தது.

ஏகாதிபத்திய உலக யுத்தத்தின் மத்தியில் கட்டவிழ்த்துவிடப்பட்ட தேசியவெறி நச்சுப் புகைக்கு கிராமப்புற குட்டி முதலாளித்துவத்தின் பெரும்பான்மையினர் மட்டுமன்றி, தொழிலாளர் வர்க்கத்தின் பகுதியினரும் அகப்பட்டுப் போயிருந்தனர். அந்த ஆரம்பக் காலத்தில் அனைத்துலகவாத போல்ஷிவிக்குகள் முகம் கொடுத்த கடுமையான இடர்ப்பாடுகளாகும். ட்ரொட்ஸ்கி இதைப் பற்றிக் குறிப்பிடுகையில் இந்த ஆரம்பக் கட்டத்தில் பக்டரியினுள் தம்மைப் போல்ஷிவிக்குகள் என இனங்காட்டிக் கொள்ள எவரும் முன்வரவில்லை. அதற்குக் காரணம், அரச வேட்டை மட்டும் அல்ல. பின்தங்கிய தொழிலாளர்களின் தாக்குதல்களுக்கு உள்ளாக நேரிடும் என்ற பயமுமாகும் என ட்ரொட்ஸ்கி கூறுகின்றார்.

எனினும் யுத்தம் நீண்டு செல்கையில் அது மக்களின் மேல் கொணர்ந்த பேரழிவுகள் இந்தப் பிற்போக்கு நிலைமையை ஒழித்துக் கட்டக் காரணமாகியது. புள்ளிவிபரங்களின்படி 25 இலட்சம் ரூஷ்யப் படையினர் 1917ல் யுத்தத்தில் இறந்து போயினர். 40 இலட்சம் பேர் காயமடைந்தனர். மேலும் 25 இலட்சம் பேர் யுத்தக் கைதிகளாக சிறைப்பட்டனர். ஏகாதிபத்திய யுத்தத்துக்கு எதிராக அனைத்துலகவாத லெனின் தோற்றுவித்த "ஏகாதிபத்திய யுத்தத்தை தமது நாட்டின் பிற்போக்கு ஆட்சியாளர்களுக்கு எதிரான சிவில் யுத்தமாகத் திருப்பு" என்ற சுலோகம் தொழிலாளர்களதும் கிராமப்புற மக்களதும் ஈர்ப்பை வெற்றிகொண்டது இந்த நிபந்தனையுடனேயே.

-தொடரும்.

படிப்பகம்

www.padippakam.com



# கோட்டைக் குண்டு தாக்குதல் தோற்றுவிக்கும் பிரச்சினை

அக்டோபர் 15ல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கொழும்பு கோட்டையில் நடாத்திய குண்டுத் தாக்குதலின் மூலம் முதலாளித்துவ வர்க்கமும் அவர்களின் அரசாங்கமும் நடாத்திவரும் இனவாத யுத்தத்தின் கொடிய பெறுபேறுகள் மீண்டும் ஒரு தடவை பொதுமக்களின் கண்களின் எதிரில் பிரத்தியட்சமாகி உள்ளன. விடுதலைப் புலிகளின் அரசியல் வங்குரோத்தினையும் பிற்போக்கு வேலைத் திட்டத்தையும் அம்பலப்படுத்தியுள்ள இந்தக் குண்டுத் தாக்குதலை பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத வெறியை உக்கிரமாக்கவும் தமது ஒடுக்குமுறை இயந்திரத்தினை மேலும் பலப்படுத்தவும் பயன்படுத்தும் என சோசலிச சமத்துவக் கட்சி தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கின்றது.

இந்தக் குண்டு வெடிப்புக்கும் தமக்கும் தொடர்பு கிடையாது என விடுதலைப் புலிகள் அமைப்பு கூறியுள்ளது. அங்ஙனம் கூறிக் கொள்வது அவர்களின் வாய்வீச்சுத் தந்திரங்களில் ஒன்றாகும். விடுதலைப் புலிகள் தாக்குதலுக்கு சிவில் இலக்கைத் தெரிவு செய்துள்ளது. இதில் 17 பொதுமக்கள் இறந்துள்ளனர். மேலும் சுமார் 100 உள்நாட்டு, வெளிநாட்டு மக்கள் கடுங்காயங்களுக்கும் சிறிய காயங்களுக்கும் உள்ளாகியுள்ளனர். இறந்தவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சி கண்டதால் விடுதலைப் புலிகள் அமைப்பின் நடவடிக்கைகளின் பிற்போக்கு எதுவிதத்திலும் குறைந்து விடாது. பொதுமக்களின் உயிர்களைப் பற்றி இந்த அமைப்புக்கு எதுவிதமான அக்கறையும் கிடையாது என்பது தாக்குதலுக்கென சிவில் இலக்கைத் தெரிவு செய்தமையும் பொதுமக்கள் இறக்கும் விதத்தில் இந்தத் தாக்குதலை நடாத்தியமையும் எடுத்துக் காட்டுகின்றது. இது தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த பொதுமக்களை நசுக்கியும் ஒடுக்கியும் கொன்றும் விடுதலைப் புலிகள் நடாத்திவரும் பிற்போக்கு வேலைத்திட்டத்தை தென் மாகாணங்களுக்கும் விஸ்தரிப்பதாகும்.

விடுதலைப் புலிகளின் தாக்குதல் இலக்கு, பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளிகளதும் பொருளாதார மையமாக உள்ளது. இந்த மையங்களுக்கு தாக்குதல் நடாத்துவதன் மூலம் தமது "இராணுவ பலத்தை" காட்டி, தமிழ் முதலாளிகளுக்கு வாய்ப்பான ஆளும் நிர்வாகத் துண்டை பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வழங்கும்படி நெருக்கும் முயற்சியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டுள்ளது. விடுதலைப் புலிகளின் இந்த பேரம் பேசல், பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினால் கொலை செய்யப்படும் , வதிவிடங்களை இழக்கும், பட்டினி பஞ்சத்துக்குள் தள்ளப்படும் படுகொடூரமான அடக்குமுறைக்கு ஆட்படும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கோ அல்லது அவசியங்களுக்கோ அல்ல; தமிழ் முதலாளி வர்க்கத்தின் வசதி வாய்ப்புக்களுக்காகச் செய்யும் அப்பட்டமான பேரம் பேசலாகும்.

சிவில் இலக்குகளுக்கு தாக்குதல் நடாத்துவதன் மூலம் தமிழ் மக்களை இனவாத யுத்தத்தில் இருந்து விடுதலை செய்யும் பொருட்டு சிங்களம் பேசும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவை வென்றெடுக்கும் எந்தவிதமான அவசியமும் தனக்குக் கிடையாது என்பதை விடுதலைப் புலிகள் காட்டிக் கொண்டுள்ளது. அதற்குப் பதிலாக சிங்கள தமிழ் மக்களை இரத்தக் களரிக்குள் மூழ்கடித்து, முழு நாட்டையும் அடக்குமுறை ஆட்சியின் பிடிக்குள் இறுகவைக்க இந்தத் தாக்குதல் மூலம் விடுதலைப் புலிகள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தைத் தூண்டுகின்றது.

## மத்திய வங்கி, தெகிவளை

கடந்த ஆண்டு ஜனவரியில் மத்திய வங்கியிலும் ஜூனில் தெகிவளை புகையிரத நிலையத்திலும் இடம்பெற்ற விடுதலைப்



குண்டுத் தாக்குதலினால் சேதமடைந்த கலதாரி ஹோட்டல்

புலிகளின் தாக்குதல்கள் மூலம் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டதோடு சுமார் இரண்டாயிரம் பேர் காயமடைந்தனர். மத்திய வங்கியின் ஊழியர்கள் நீண்ட நெடுங்காலமாக தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமைகளின் பேரிலும் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் சோசலிச சமத்துவக் கட்சியின் வழிகாட்டலுக்கு அமைய நின்று போராடி வந்த ஒரு நிலையிலேயே மத்திய வங்கி மீதான விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதல் இடம்பெற்றது. தெகிவளை குண்டுத் தாக்குதல் புகையிரதத்தில் பயணம் செய்து, கொண்டிருந்த அலுவலக ஊழியர்கள் மீது இடம்பெற்றது. பொதுஜன முன்னணி அரசாங்கம் விடுதலைப் புலிகளின் இந்தச் சகல தாக்குதல்களையும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தையும் அடக்குமுறையையும் நியாயப்படுத்தவும் உக்கிரமாக்கவும் பயன்படுத்தியதோடு மட்டுமன்றி, நாடு பூராவும் அடக்குமுறை ஆட்சியை பல படிகள் மேலும் முன்னெடுக்கவும் பயன்படுத்திக் கொண்டது.

இம்முறை குண்டுத் தாக்குதலின் மூலம் மீண்டும் தலைநீட்டியுள்ள நிஜ பிரச்சினையின் குரல்வளையை நசித்து, தமது உக்கிரமான வர்க்க அவசியங்களுக்காக அதன் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் துணையோடு அரசாங்கம் மேற்கொண்டுள்ள இனவாத வெறிக் கூச்சல்களால் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் வழி தடுமாறி விடக் கூடாது.

## இராணுவமயமாக்கம்

பெப்ரவரி 17ம் திகதி கூட்டப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டில் "யுத்தத்தை இறுதிவரை" முன்னெடுப்பதாகக் கூறிய ஜனாதிபதி, கொழும்பு சம்பந்தமான பாதுகாப்பு குறைபாடுகளை போக்குவது பற்றி பாதுகாப்பு அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாக தெரிவித்தார். இந்த அதிகாரிகள் கொழும்பு பாதுகாப்புக்கு இராணுவ மேஜர் ஜெனரால் ஒருவரின் தலைமையில் ஒரு பாதுகாப்பு சபையை அமைப்பது பற்றி சிபார்சு செய்துள்ளதாகவும் தெரிகிறது. இது கொழும்பு நகரில் முப்படைகளதும் பொலிசாரதும் பாதுகாப்பு மையங்களை மேலும் இறுக்கமாக்குவதாகும். முழு மக்கள் வாழ்க்கையையும் இராணுவமயத்தின் கீழ்க் கொணர்வதாகும். கடந்த சில தினங்களாக தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகள் நிலைக்குத் தள்ளப்பட்டு, விசாரணைகளுக்கும் முற்றுகைகளுக்கும் கைதுகளுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் இந்தக் கொடிய அடக்குமுறையையும் இராணுவமயமாக்கத்தையும் நீதியும் நியாயமுமான ஒரு நடவடிக்கையாகக் காட்ட இவற்றைச் செய்யாமல் பயங்கரவாதத்தை நசுக்குவது எப்படி? என முதலாளித்துவ வெகுஜனத்தொடர்புச் சாதனங்கள் கேள்வி எழுப்புகின்றன. தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் இந்த மோசடி நிறைந்த கேள்விக்கு பதிலளிக்க வேண்டும். இந்த யுத்தம் எமது யுத்தமா? இல்லை. இன்றைய யுத்தத்துக்கு வழி சமைத்ததும் அதைத் தொடக்கி வைத்ததும் அதைக் கொண்டு நடாத்துவதும் முதலாளி வர்க்கமும் அவர்களது அரசாங்கமுமே. யுத்தம் இடம்பெறும் வரை வடக்கிலும் சரி தெற்கிலும் சரி மக்கள் வாழ்க்கை ஆபத்துக்கு உள்ளாகியுள்ளது. இதற்கு முதலாளி வர்க்கமே பொறுப்புச் சொல்ல வேண்டும். விடுதலைப் புலிகள் பிரிவினைவாதிகளின் தோற்றத்துக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்ததும் அதை போஷித்ததும் சிங்கள முதலாளி வர்க்கத்தின் மக்கள் படுகொலை தேசிய ஒடுக்குமுறையே. இந்த இனவாத யுத்தம் நாடு பூராவும் உள்ள மக்களை நசுக்கித் தள்ளி, ஏகாதிபத்திய சுரண்டலுக்கு அவர்களை பலிகடாக்கள் ஆக்குவதற்கான முதலாளிகளின் ஆயுதமாகும். முதலாளி வர்க்க ஆட்சியின் கீழ் நாளுக்கு நாள் பாதுகாப்பின்மையும் அடக்குமுறை ஆட்சியும் உக்கிரமடைகின்றதே தவிர குறைவதாக இல்லை.

' 'பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஜயசிக்குறு என்ற பரந்ததும் கொடியதுமான இராணுவ நடவடிக்கை இன்று ஐந்து மாதங்களைத் தாண்டியுள்ளது. வன்னி சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டினது மக்களதும் இரத்தத்தினால் தோய்ந்து போயுள்ளது. "அரசியல் ஸ்திரப்பாட்டை" உருவாக்கித் தரும்படி கோரும் ஏகாதிபத்தியவாதிகளின் நெருக்குவாரத்தின் பேரில் அரசாங்கம் அரசியலமைப்பு சட்டத்தை முன்வைத்து அதை அமுல் செய்யும் நிலைமைகளைச் சிருஷ்டிக்கும் பேரில் யுத்தத்தை மேலும் மோசமான கட்டத்துக்கு உயர்த்தியுள்ளது. இதற்குச் சமாந்தரமாக விடுதலைப் புலிகள் அமைப்பின் கையாலாகாத்தனமான தாக்குதல்களும் உக்கிரம் அடையும்.

முதலாளித்துவ அரச படை அணிகளாலும் காவல் நிலைகளாலும் பொதுஜனங்களின் உயிர்களுக்கு பாதுகாப்பு கிடையாது. உண்மையில் அவை முதலாளித்துவ சொத்துக்களையும் முதலாளித்துவ அவசியங்களையும் பாதுகாக்கச் செய்யப்படுபவை. விடுதலைப் புலிகள் மத்திய வங்கியிலும் தெகிவளை புகையிரத நிலையத்திலும் தாக்குதல் நடாத்திய வேளையிலும் சரி அதற்குப் பின்னரும் முன்னரும் சரி சோசலிச சமத்துவக் கட்சி இந்த விடயத்தைச் சுட்டிக்காட்டியது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் சுயாதீனமான முறையில் தமது பாதுகாப்பை உத்தரவாதம் செய்வதற்கான யோசனைகளை சோ.ச.க. முன்வைத்தது.

சோசலிச சமத்துவக் கட்சியோ நடவடிக்கைக் குழுக்களின் கீழ் கட்டியெழுப்பப்படும் பாதுகாப்புக் கமிட்டிகள் விழிப்பாக இருப்பதன் மூலம் உரிய தருணத்தில் பாதுகாப்பை வழங்கத் தயாராக வேண்டும் எனக் கோரியது. மக்கள் சுயாதீனமாக கட்டியெழுப்பும் இந்தக் குழுக்களுக்கு ஆயுதம் வழங்குவதை அரசாங்கத்தின் பொறுப்பாக்கிக் கொள்ள வேண்டும் எனவும் சோ.ச.க. கூறியது. எனினும் இந்தக் கமிட்டி எந்த விதத்திலும் அரச படைகளின் ஒட்டுண்ணிகள் அல்ல. அவை விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்தும் அவ்வாறே பாசிச, குண்டர் தாக்குதல்களில் இருந்தும் பொதுமக்களைக் காக்க தம்மை அர்ப்பணிக்கும். இந்தப் போராட்டத்தை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைக் காக்கும் போராட்டத்துடன் இணைக்க வேண்டும் எனவும் நாம் கூறினோம். மேலும் காலங்கடத்தாது இந்நடவடிக்கையை எடுத்தல் அவசியம் என்பது இன்று ஊர்ஜிதமாகியுள்ளது.

## விடுதலைப் புலிகள் மீதான தடை

யூ.என்.பி.அரசாங்கமும் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கமும் இனவாத யுத்தத்தின் மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்திய இராணுவத் தலையீடுகளுக்கு பலிகடாக்களாக்கும் நிலைக்கு கொணர்ந்துள்ளன. அக்டோபர் 8ம் திகதி அமெரிக்க ஐக்கிய அரசுகளின் கிளின்டன் அரசாங்கம் "விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகப்" பெயர் சூட்டியதன் மூலம் இந்த ஆபத்து தலை தூக்கி உள்ளது.

விடுதலைப் புலிகளின் கலதாரி குண்டு தாக்குதலுடன் அமெரிக்கத் தலையீட்டை கோருவதா இல்லையா என்ற கேள்வி ஜனாதிபதி கூட்டிய பத்திரிகையாளர் மகாநாட்டில் தலைநீட்டியது தற்செயலானது அல்ல. ஏற்கனவே இலங்கையில் இராணுவத்தினரின் பயிற்சிக்கென அமெரிக்க 'கிறீன் பெரே' இராணுவத்தின் மூன்றாவது படையணி இங்கு வந்திறங்கியுள்ளதோடு குண்டு வீச்சுக்கு உள்ளான கலதாரி ஹோட்டலில் அவர்கள் தங்கியிருந்தனர். இராணுவ நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தக் கூடிய "வொயிஸ் ஒவ் அமெரிக்கா"(VOA) ஒலிபரப்பு நிலையம் கொழும்புக்கு வடக்கில் உள்ள இரணவிலவில் அமைக்கப்பட்டுள்ளது. கொழும்பில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற தினத்தன்று "வொயிஸ் ஒப் அமெரிக்கா" வுக்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதல் இடம்பெறப் போவது பற்றிய எச்சரிக்கை கிடைத்ததாயும் அதனால் அமெரிக்க ஊழியர்களை அகற்றியதாகவும் அமெரிக்க அரசாங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அமெரிக்கத் தலையீட்டை வாயைப் பிளந்தபடி பார்த்துக் கொண்டுள்ள "ஐலன்ட்" முதலாளித்துவப் பத்திரிகை அக்டோபர் 18ம் திகதி அறிக்கை செய்கையில் "தேசிய அபிலாசைகளைக் காத்தல்," "அமெரிக்க நாட்டவர்களை பாதுகாத்தல்" முதலான சுத்துமாத்துக்களில் ஈடுபட்டது.

ஏகாதிபத்தியவாதிகளின் சிபார்சுகளுடன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு எந்தவொரு சமாதான விடிவெள்ளியும் உதிக்கப் போவதில்லை. தமது உரிமைகளைக் காக்கக் கொதித்துக் கொண்டுள்ள பொதுமக்களை நசுக்கித் தள்ளவும் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் தொழில், வாழ்க்கைத்,

19ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com

# விவசாயிகளுக்கு எதிரான யுத்தப் பிரகடனம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

சிருஷ்டிப்பதேயாகும். வரவு செலவுத் திட்டத்தில் இருந்து உதாரணமாக எடுத்துக் காட்டப்பட்ட விதத்தில் இந்த இராட்சத கம்பனிகள் நிலங்களைப் பிடித்துக் கொண்டு அவற்றுக்கு அவசியமானவற்றை அவை குறிக்கும் விலைக்கு உற்பத்தி செய்யும் அரை உழைப்பு அடிமைகளாக ஏழை விவசாயிகள் மாறவேண்டி நேரிடும். கடந்த மே மாதத்தில் விவசாய அமைச்சின் செயலாளர் "உதவி மானியம் பெறும் விவசாயத்தை கைவிட்டு, இலாபம் உழைக்கும் விவசாயத்துக்கு செல்ல முடியாது போனால் விவசாயத்தில் இருந்து வெளியேறுங்கள் "எனக் குறிப்பிட்டார். விவசாயிகளை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் இலாபம் சம்பாதிக்கும் திட்டத்துக்குப் பலிகடாக்களாக்கும் திட்டத்தை தயாரித்து வந்த நிலையிலேயே அவர் இங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு கம்பனிகளுக்கும் அவற்றின் ஏஜன்டுகளான இலங்கையின் முதலாளிகளுக்கும் வளங்களை பொதி கட்டிக் கொடுக்கும் அதே வேளையில் 14 இலட்சம் ஏழை விவசாயிகள் குடும்பங்களுக்கு சமுர்த்தி திட்டத்தின் கீழ் ரூபா.100-1000 வரை உதவி நிதி வழங்குவதாகவும் பிரதி நிதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்த வரவு செலவுத்திட்ட உரையில் குறிப்பிட்டுள்ளார்.தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் தொடர்பாக பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளிகளும் எத்தகைய இரத்த வெறி கொண்டுள்ளன என்பதற்கு இந்த "நிவாரணம்" நல்லதொரு எடுத்துக் காட்டு அல்லவா?

1997 வரவு செலவுத் திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கிய ரூபா.600 சம்பள உயர்வும் கூட 'நிதிக் கஷ்டங்கள்' காரணமாக, அதில் 60 வீதம் 1998ம் ஆண்டுக்கு ஒத்திப்போடப்பட்டது. எதிர்வரும் ஜனவரி மாதத்தில் இந்த எஞ்சிய பணம் ரூபா.7500க்கு குறைவாக மாதச் சம்பளம் பெறுபவர்களுக்கு மட்டுமே கிடைக்க உள்ளது. இதற்கு கூடுதலான சம்பளம் பெறுபவர்களுக்கு இது ஜூலையிலேயே கிடைக்கும். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு நூற்றுக்கு 5 வீதம் ரூபா.150 200 அதிகரிப்பே வழங்கப்பட்டுள்ளது. இதனால் இன்றைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புடன் எந்த விதத்தில் தாக்கிப் பிடிக்க முடியும்? இது என்ன கண்துடைப்பு?ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களை அரவணைத்துக் கொள்ளக் கைநீட்டும் அரசாங்கம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை எந்தளவுக்கு நசுக்கிக் கொண்டுள்ளது பார்த்தீர்களா?

அத்தோடு அரசாங்க சேவையை மேலும் திறமையும் வர்த்தகத் தன்மையும் கொண்டதாக மாற்றும் பேரில் அரசாங்க ஊழியர்களின் வேலையை விரைவுபடுத்துவது உட்பட்ட "சீர்திருத்தங்களில்" ஈடுபடுவதாக வரவு-செலவுத்திட்டம் குறிப்பிட்டது.

## தொழிலாளர்-விவசாயிகள் கூட்டின் அவசியம்

பொதுவில் இம்முறை வரவு செலவுத்திட்டம் விசாயிகளுக்கும் வேலையற்றவர்களுக்கும் எதிராகத் தொடுத்துள்ள தாக்குதல், தொழிலாளர்களுக்கு தொடுத்துள்ள தாக்குதலைக் காட்டிலும் பெரிதும் கடுமையானது. இதனை தொழிலாளர் வர்க்கம் தீர்க்கமான முறையில் கவனத்தில் கொண்டாக வேண்டும். ஏழை விவசாயிகளின் வாழ்க்கை உரிமைகளைக் காக்க முன்வராத தொழிலாளர் வர்க்கம் இராணுவ பாசிச காட்டுமிராண்டித் தனத்துக்கு முகம் கொடுக்க நேரிடும். ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காப்பதைக் கைவிட்டு, இனவாத யுத்தத்தினை சகித்துக் கொண்டதன் மூலம் இதுகாறும் தொழிலாளர் வர்க்கத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள வறுமையும் ஒடுக்குமுறையும் தரும் படிப்பினை இதுவே. மக்கள் முன்னணி, வர்க்க சமரச கட்சிகளினதும் தொழிற்சங்கங்களதும் தேசியவாத வேலைத்திட்டங்களுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் புரட்சிகர தொழிலாளர் விவசாயிகள் கூட்டின் பேரில் தொழிலாளர் வர்க்கத்தின் அரசியல் சுயாதீனத்தை ஸ்தாபிதம் செய்யும் அவசியம் இதன் மூலம் தலையெடுக்கின்றது. இதன் பேரில் சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே போராடுகின்றது.

வரவு செலவுத் திட்டத்தில் இம்முறையும் அதிக தொகை ஒதுக்கீடு செய்யப்படுவது வெளிநாட்டு, உள்நாட்டு கடன்காரர்களுக்கு வட்டியும், கடனும் கொடுப்பதற்கேயாகும். அது 5400 கோடி ரூபா.

இனவாத யுத்தத்துக்கும் இலங்கை பூராவும் ஒடுக்குமுறை இயந்திரத்தை பலப்படுத்தவும் பாதுகாப்பு செலவாக ரூபா.4999கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் இதில் 2050கோடி ரூபாக்களை பாதுகாப்பு வரியாகப் பொதுமக்களிடம் இருந்து தட்டிப் பறிக்கப் போகின்றது. பாதுகாப்பு செலவு அதிகரித்த போதிலும் பாதுகாப்பு வரி அதிகரிக்கப்படவில்லை என நிதி அமைச்சா தெரிவித்துள்ளார்.இது பாதுகாப்பு வரி அதிகரிப்புக்கான ஒரு எச்சரிக்கையாகும்.

1998ம் ஆண்டில் அரசாங்கம் அரச நிறுவனங்களை வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளுக்கு விற்பனை செய்வதன் மூலம் 800 கோடி ரூபாக்களை திரட்டிக் கொள்ளத் திட்டமிட்டுள்ளது. பொதுஜன வளங்களை விற்றுத் தள்ளுவதன் மூலம் பெறும் இந்த நிதி, வெளிநாட்டு, உளநாட்டு கடன்காரர்களின் கடன்களை செலுத்த பாவிக்கப்படுகின்றது.

சுகாதார, கல்வி துறைகள் தவிர்ந்த ஏனைய சகல அமைச்சுக்களுக்கும் ஒதுக்கப்பட்ட செலவீனங்களில் நூற்றுக்கு 10 வீதத்தை வெட்டுவதன் மூலம் 240 கோடி ரூபாவை மிச்சம் பிடிப்பதாக வரவு செலவுத் திடடம் குறிப்பிட்டுள்ளது. இது அரசாங்க பொதுச் செலவினங்கள் மேலும் இறுக்கமாக்கப்படுவதை எடுத்துக் காட்டுகின்றது. கல்வி, சுகாதார சேவைச் செலவினங்களின் வெட்டு இந்த 10வீத வெட்டுக்குள் அகப்படாது போனாலும் இந்த இரண்டு துறைகளினதும் தொண்டைக் குழியை நசிப்பது தொடர்ந்தும் இடம்பெறும்.

அரசாங்கத்தின் செலவினங்களை மொத்த தேசிய வருமானத்தின் நூற்றுக்கு 7.5 வீதமாக குறைத்துக் கொண்டதாகவும் அடுத்த வருடம் இது நூற்றுக்கு 6 வீதம் வரை குறைக்கப்பட்டு 2000 ஆண்டளவில் நூற்றுக்கு 4 வீதமாக கட்டுப்படுத்தப்படும் எனவும் பிரதி அமைச்சர் பீரிஸ் குறிப்பிட்டாா. இலவசக் கல்வி, சுகாதார சேவை உட்பட்ட நலன்புரி சேவைகளை அடியோடு துடைத்துக் கட்ட அரசாங்கம் திட்டமிட்டுள்ளதை இந்த வெட்டுக்கள் காட்டுகின்றன.

## முதலாளிகள் பெருமகிழ்ச்சி

தமது இலாப முட்டைகளை நிரப்பிக் கொள்வதற்கு வாய்ப்பான இந்த வரவு செலவுத் திட்டம் குறித்து பெருமகிழ்ச்சியடைந்த முதலாளிகள் இதை வாய்கிழியப் பாராட்டியும் உள்ளனர். இலங்கை வர்த்தக, கைத்தொழில் சபை "வரவு செலவுத் திட்டம் புதிய சுமைகள் அற்ற நல்ல ஒன்று "எனக் கூறியுள்ள அதே வேளையில் இலங்கை வர்த்தக சபை இது "நன்கு சிந்தித்து செய்யப்பட்ட ஒன்று" எனப் பாராட்டியுள்ளது. இலங்கை ஏற்றுமதியாளர் சங்கம் இத்தகைய ஒரு கஷ்டமான நிலையில் சிறப்பான ஒரு வரவு செலவுத் திடடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என அரசாங்கத்துக்கு வாழ்த்துக் கூறியுள்ளது. அரசாங்கத்தின் எதிர்ப்பாளராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் "ஐலன்ட்" பத்திரிகை யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ரொனி டீ மெல்லும் தெரிவித்த விமர்சனங்களை கணக்கெடுக்க வேண்டியதில்லை எனக் கூறி, அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்துக்கு அதிக புள்ளிகளை வழங்கியுள்ளது. அது கூறியதாவது :" பொருளியலாளர்கள் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், அபிவிருத்தி கண்ட உலகின் நேச நாடுகளின் அரசாங்கங்கள் பேராசிரியர் பீரிசின் நான்காவது வரவு செலவுத் திட்டத்திற்கு மிகவும் அதிக புள்ளிகளை வழங்கும். சிலவேளை "ஏ" புள்ளியை வழங்கலாம்." (1997 நவம்பர் 7)

வரவு செலவுத் திட்ட உரைக்கு அடுத்த நாள் செய்தியாளர் மகாநாட்டில் பேசிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க "யுத்தமும் எதிர்க்கட்சியின் நாசகார வேலைகளும இருந்தாலும் பொருளாதாரம் மிகவும் திருப்திகரமாக செயற்பட்டுள்ளதையிட்டு அரசாங்கம் மிகவும் மகிழ்ச்சி அடைவதாக" தெரிவித்தார். இந்த ஆண்டில் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி 6 வீதம் வரை வளர்ச்சி கண்டதையும் அரசாங்கத்தின் செலவின வெட்டையும் ஜனாதிபதி சுட்டிக் காட்டியுள்ளார்.

பொருளாதாரத்தின் இந்த அபிவிருத்தி எனப்படுவதன் மூலம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நலனுக்கு ஒரு துனி தன்னும் கிடைக்கவிலலை. அபிவிருத்தி கண்டது வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் இலாப முட்டைகளே. இம்முறை வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அவை மேலும் மேலும் நிரம்பும். துன்பத்தில் சிக்கியுள்ள மக்கள் மேலும் மேலும் ஆதாளபாதாளத்தில் தள்ளப்படுவர். விவசாயத் துறையை இராட்சத முதலாளித்துவ கம்பனிகளிடம் ஒப்படைப்பது பொதுமக்களுக்கு பெரிதும் தீய விளைவுகளை ஏற்படுத்த உள்ளது.

## ச.நா.நி. சிபார்சு

இந்த வரவு செலவுத் திட்டம் வெறுமனே பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் மட்டும் அல்ல. இந்த வரவுசெலவுத் திட்டத்தின் சகல யோசனைகளும் கடந்த ஆகஸ்டு மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு இணங்கத் தயாரிக்கப்பட்டதாகும். கடந்த இரண்டு வருடங்களாக இடைநிறுத்தப்பட்டிருந்த எஸ்.டி.ஆர்.56 மில்லியன் டாலர் கடன்களை வழங்குவதற்கான நிபந்தனையாக இந்த சிபார்சுகள் முன்வைக்கப்பட்டு இருந்தன. கடந்த செப்டம்பரில் இலங்கைக்கு வர இருந்த இந்த நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மிச்செல் கமிடேசு வரவு செலவுத் திட்டத்தின் பின்னர் டிசம்பர் மாதத்தில் வருகை தர இப்பயணத்தை ஒத்திப்போட்டுள்ளார். இலாப வெறி கொண்ட ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத் தாபனங்களின் உலகளாவிய இலாப உழைப்புச் சந்தைகளையும் வளங்களையும் கொள்ளையடிப்பதற்கே இந்தச் சிபார்சுகள். இதற்குத் தோள்கொடுப்பதைத் தவிர வேறு மாற்று வழி இலங்கையிலும் சரி வேறு எந்த ஒரு பின்தங்கிய நாட்டிலும் உள்ள தேசிய முதலாளி வர்க்கம் எனப்படுவதற்கு கிடையாது. இப்போது உலகம் பூராவும் பங்குமுதல் சந்தையில் வளர்ச்சி கண்டுவரும் நெருக்கடியினால் ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் வங்கிகளதும் சுரண்டல் வெறி நாளுக்கு நாள் உக்கிரம் அடைகின்றது. இதன்படி பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் வாழ்க்கைத் தரங்களையும் ஜனநாயக உரிமைகளையும் தவிடுபொடியாக்கத் திரும்பியுள்ளது.

முதலாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பிரமாண்டமான வரிச் சலுகைகள், விவசாயிகளை காணிகளில் இருந்து வெளியேற்றி, ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு அவற்றை பலியிடுவது உட்பட வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ள தாக்குதல்களை முதலாளிகளின் கைகளில் செல்வங்கள் மேலும் மேலும் மலையெனக் குவியச் செய்யவும் தொழிலாளர், விவசாயிகள் மற்றும் ஒடுக்கப்படும் மக்களை மேலும் மேலும் வறுமையின் பிடிக்குள் தள்ளவும் வழிவகுக்கும்.

வரவு செலவுத் திட்ட யோசனைகளின் அமுலாக்கம் நகர்ப்புறங்களிலும் கிராமங்களிலும் பிரமாண்டமான போராட்டங்களை வெடிக்கச் செய்யும். எல்லாவல பொஸ்பெட் தடாகத்தை அமெரிக்காவைச் சேர்ந்த மக்மரா கம்பனிக்கு விற்றுத் தள்ள பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. இம்முடிவுக்கு எதிராக அக்டோபர் 31ம் திகதி இடம்பெற்ற 5000 விவசாயிகள் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் இத்தகைய போராட்டங்களின் வெடிப்பை சமிக்கை செய்கின்றது.

## தொழிற்சங்கங்கள்

இந்த வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக தொழிற் சங்கங்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகள் அவை தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளைக் காக்க எதுவிதமான இலாயக்கும் இல்லாதவை என்பதை காட்டிக் கொண்டுள்ளன.உண்மையில் அவை பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு பங்களிப்புச் செய்துள்ளன. சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டு வரவு செலவுத் திட்டங்கள் மூலம் புதிதாகத் தூண்டிவிட்ட தாக்குதல்களின் பங்காளிகள் ஆகியுள்ளனர். தொழிற் சங்கங்கள் இவற்றுக்கு தோள் கொடுத்தபடியே பொய்க் கூச்சலில் ஈடுபட்டுள்ளனர்.

ஸ்டாலினிச இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டீ.டபிள்யூ. சுபசிங்க வரவு செலவுத் திட்டம் பற்றி கூறியுள்ள முதலாளித்துவச் சார்பு அறிக்கையைப் பாருங்கள்: "அரசாங்கம் தனியார் துறை தொழிலாளர்களையிட்டும் கவனம் செலுத்த வேண்டும்" என நாம் வேண்டுகின்றோம். அவர்களும் பொருளாதார அபிவிருத்தி இயந்திரத்தின் ஒரு பாகமாகும்... குறைபாடுகள் என்னதான் இருந்தாலும் வரவு செலவுத்திட்டம் நல்ல எதிர்காலத்துக்கான வழியைக் காட்டும்" கம்யூனிஸ்ட் கட்சியின் மற்றொரு ஸ்டாலினிஸ்டான அரசாங்க சேவை தொழிற்சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் டபிள்யூ.எச். பியதாச கூறியுள்ளதாவது "வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நாடு உரிய பாதைக்கு திருப்பப்பட்டுள்ளதாகவும்" வளங்களை நாசமாக்கும் யுத்த நிலைமையில் இருந்து நன்கு நெறிப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்துள்ளார். சமசமாஜக் கட்சியின் அகில இலங்கை வர்த்தக, கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.சிரிவர்தன " சுமார் 35 இலட்சம் தனியார்துறை தொழிலாளர்கள் பொருளாதார அபிவிருத்தி இயந்திரத்தின் ஒரு பாகமெனினும்" அவர்கள் அடியோடு புறக்கணிக்கப் பட்டுள்ளார்கள் என்றுள்ளார்.

இந்தத் தொழிற்சங்கத் தலைவர்களுக்கு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் ஆளுமையை நிலைநாட்டும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் வேலைத் திட்டத்தையிட்டு இவர்களுக்கு எந்தவிதமான எதிர்ப்பும் கிடையாது. ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களும் தாம் முண்டு கொடுக்கும் இலங்கை முதலாளி வர்க்கமும் "பொருளாதார அபிவிருத்தியின் இயந்திரம்" என்பதை இந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். தனியார் துறை தொழிலாளர்கள் புறக்கணிக்கப்பட்டுவிட்டார்கள் என்ற இத்தலைவர்களின் ஓலமானது இரத்த பிசாசை அணைத்துக் கொண்டு, பிசாசு நன்றாகக் கவனிக்கவில்லை எனக் கூறுவது போன்றதாகும். இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் குறிப்பிடும் பொருளாதார அபிவிருத்திக்கு தொழிலாளர் வர்க்கத்தின் அபிவிருத்தி சம்பந்தப்படாது. தொழிலாளர்கள் முதலாளித்துவக் கம்பனிகளின் உழைப்பு அடிமைகளாக சதாகாலமும் வாழ வேண்டும் என்பதே அவர்களின் முன்நோக்கு. கிராமப்புற ஏழைகளை நசுக்கித் தள்ளும் பொருட்டு வரவுசெலவுத் திட்டத்தில் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்ளுக்கு நிர்மாணிக் கப்பட்டுள்ள நிலைமைகளைப் பற்றி இந்த தொழிற்சங்கத் தலைவர்களுக்கு

19ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



எந்தவிதமான அக்கறையும் கிடையாது. இதற்குக் காரணம் அவர்கள் பொதுஜனங்களை சுரண்டித் தள்ளும் இந்த முதலாளித்துவ அமைப்பினுள் நுழைந்து கொணடிருப்பதேயாகும்.

இதற்கிடையே விவசாயிகள் போராட்டங்களின் தலைமையைப் பிடித்துக் கொண்டுள்ள குழுக்கள் அரசாங்கத்துககு நெருக்குவாரம் கொடுப்பதன் மூலம் பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும் என்ற நப்பாசைகளை விதைத்து வருகின்றார்கள். அரசாங்கம் எப்பாவில பொஸ்பேட் தடாகத்தை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் கையேற்கும தீர்மானத்தை எடுத்தது இத்தகைய எதிர்ப்புக்களை எந்த ஒரு துட்டுச் சல்லிக்கும் கணக்கெடுக்காமலாகும். இப்போது அரசாங்கம் விவசாய நிலங்களை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு பலிகொடுத்துவிட்டு, விவசாயிகளை அவற்றின் உழைப்பு அடிமைகளாக மாற்றும் நீண்டதூரம் செல்லும் வேலைத்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது. இது இந்த வரவு செலவுதிட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது. இவற்றை நெருக்குவாரம் கொடுத்து மாற்றிக்கொள்ள முடியுமா? தேசியவாத வேலைத் திட்டத்தினை முன்வைக்கும் இந்த விவசாயிகள் சங்கத் தலைவர்கள் விவசாயிகள் தொழிலாளர் வர்க்கத்தினதும் இந்த ட்ரான்நஷனல் கூட்டுத்தாபனங்களின் உழைக்கும் மக்களின் அனைத்துலக ஆதரவையும் திரட்டிக் கொண்டு இத்தாக்குதலைத் தோற்கடிக்கும் பாதையில் இறங்குவதைத் தவிர்க்கின்றார்கள்.

ஏகாதிபத்திய சார்பு முதலாளி வர்க்கமும் அதன் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தொழிலாளர்களதும் விவசாயிகளதும் மற்றும் ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளை நாசமாக்குவதற்கு எதிராக அவர்கள் கிளர்ந்து எழுவார்கள் எனக் கணித்துக்கொண்டு, அவற்றைத் தாக்குதவதற்கு நனவான முறையில் தயாராகி வருகின்றார்கள். புதிய அரசியலமைப்பு சட்டத்தினையும் தயார் செய்து கொண்டு தமிழ் முதலாளித்துவ வர்க்கம் உட்பட்ட பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டிக் கொள்கின்றது. இனவாத யுத்தத்தினை உக்கிரம் அடையச் செய்து, அரச ஒடுக்குமுறை இயந்திரத்தையும் குண்டர் படைகளையும் பலப்படுத்திக் கொண்டும் அரசாங்கம் தயாராகுவது இந்தத் தயாரிப்பின் ஒரு அங்கமேயாகும்.

## வேலைத்திட்டம்

தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகள் உட்பட்ட ஒடுக்கப்படும் மக்களுக்கும் ஏகாதிபத்தியச் சார்பு ஆளும் வர்க்கத்தின் இந்தத் திட்டங்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய முன்நோக்கும் அதனை அடிப்படையாகக் கொண்ட தலைமையும் அவசியம். பழைய தொழிற்சங்கவாத நெருக்குவாரம் தரும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் பிற்போக்கு வேலைத் திட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியாது. அனைத்துலக மூலதனம் உலக பொருளாதாரத்தை ஆதிக்கம் செய்துகொண்டுள்ள ஒரு நிலைமையிலும் அதன் ஏஜண்டாக "தேசிய" முதலாளி வர்க்க ஆட்சி இடம் பெறும் ஒரு நிலைமையிலும் தொழிலாளர் வர்க்கத்தினாலோ அல்லது விவசாயிகளினாலோ இந்தத் தாக்குதலை தவிர்க்க முடியாது.

ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் மக்கள் வாழ்க்கையை கசக்கிப்பிழிந்து கொண்டு நடாத்தி வரும் தாக்குதலை நிறுத்துவதற்கு அனைத்துலக சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் ஒத்துழைப்போடு சோசலிச வேலைத் திட்டத்துக்கு போராடியாக வேண்டும். அதற்கு தொழிலாளர் வர்க்கத் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களை ஒன்றுதிரட்டி பலம்வாய்ந்த சோசலிசப் பதிலீட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். முதலாளித்துவ அரசாங்கத்தின் கீழ் அல்லாது தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தின் கீழான பூகோளமயமாக்கத்துக்கு ஒன்றிணைவதும், ஏகாதிபத்திய, முதலாளித்துவ சொத்து உரிமையை ஒழித்துக்கட்டி, பொருளாதாரத்தை சோசலிச அடிப்படையில் மறுசீரமைப்புச் செய்தலும், ஏழை விவசாயிகளின் விவசாய நிலங்களுக்கான உரிமையை ஊர்ஜிதம் செய்வதோடு மட்டுமன்றி, அதற்கு அப்பால் நவீன தொழில் நுட்பத்தின் சகல வெற்றிகளையும் பெற்றுக் கொண்டு நாகரீகமான வாழ்க்கைக்கான அடிப்படையை இந்த வேலைத்திட்டத்தின் மூலமே எட்ட முடியும். முதலாளி வர்க்கத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாகி, இந்தத் தொழிலாளர் வர்க்க வேலைத் திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

சோசலிச சமத்துவக் கட்சி இந்த முன்நோக்கையும் வேலைத் திட்டத்தையும் முன்வைக்கின்றது. இந்த முன்நோக்கிற்குப் போராடுவதற்காக தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், வீட்டுப் பெண்களை ஒன்றினைத்து கட்டியெழுப்பும் நடவடிக்கைக் குழுக்களை அமைத்து, சோசலிச சமத்துவக் கட்சியை பரந்த அளவில் மக்கள் கட்சியாக ஸ்தாபிதம் செய்வதற்கு ஒன்றிணையுங்கள்.

# கோட்டைக் குண்டு தாக்குதல் தோற்றுவிக்கும் பிரச்சினை...

(17ம் பக்கத் தொடர்ச்சி)

தரம், இலவச சுகாதார, கல்வி சேவைகளை ஒழித்துக் கட்டும் திட்டங்களை மக்களின் தலையில் திணிப்பதற்காக பிற்போக்குச் சக்திகளை அணிதிரட்டும் ஒரு குண்டாக இது உள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை தமிழ், முஸ்லீம், சிங்கள அலகுகளாக உடைப்பதன் மூலம் இன, மத சுவாலைக்கு எண்ணெய் வார்க்க முதலாளிகளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் துடிக்கின்றன. எதற்கு? பாசிச ,இராணுவ சர்வாதிகாரத்துக்கு வழி சமைக்கவே சிங்கள ஆணைக்குழுவை முன்னணியில் தள்ளி இனவாத ஆத்திரமூட்டல்களை கிளறி விட்டுக் கொண்டு, நாடுபூராவும் வலம் வந்து கொண்டுள்ளனர். ஜே.வீ.பி.யின் பாசிஸ்டுகள் இதற்குச் சமாந்தரமான விதத்தில் "நாட்டைக் காக்க பேயுடனும் ஒன்றிணையத் தயார்" எனக் கூறி பாசிச சக்திகளைத் தூண்டிவிட்டுக் கொண்டுள்ளது.

யுத்தத்தில் இருந்தும் பாதுகாப்பற்ற நிலைமையில் இருந்தும் ஏகாதிபத்திய அபிலாசைகளுக்கு வாய்ப்பான விதத்தில் மக்களைத் தள்ளிவிடும் காட்டுமிராண்டி நிலைமைகளில் இருந்து தலையெடுப்பது எப்படி ? சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் எதிரிலும் இந்த அவசரமானதும் பிரமாண்டதுமான பிரச்சினை தலைதூக்கியுள்ளது.

## நவசமசமாஜக் கட்சி

இந்நிலைமையில் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் இ.தொ.கா., மலையக மக்கள் முன்னணியும் அரசாங்கத்துடன் சேர்ந்து தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு குழிபறிக்கின்றன. யூ.என்.பி.யையும் அணிதிரட்டிக் கொண்டு அரசாங்கத்தின் தாக்குதலை முன்னெடுக்க வேண்டும் என இக்கட்சிகள் கூறிக் கொள்கின்றன. 1987 இந்திய இலங்கை உடன்படிக்கைக்கு சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளும் இ.தொ.கா.வும் ஆதரவு வழங்கியதால் இப்போது யூ.என்.பி.தமக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதே இக்கட்சிகளின் வாதமாக உள்ளது.

இதே வேளை அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு குழிதோண்டும் வேலையில் நவ சமசமாஜக் கட்சி ஈடுபட்டுள்ளது. இக்கட்சி கலதாரி குண்டுவெடிப்பைத் தொடர்ந்து வெளியிட்ட அறிக்கையில் அதன் பொதுச் செயலாளர் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்ன பின்வருமாறு கூறியுள்ளார்: "புலிகள் அமைப்பு உட்பட்ட உலகம் பூராவும் உள்ள போராளி அமைப்புக்களுக்கு எதிராக செயற்பட்ட அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு விழுந்த காதாவடி அறையாகவும் இதைக் (கோட்டை குண்டு தாக்குதல்) கணிக்க முடியும். இம்முறை போயா நாளை கொண்டதால் கடந்த முறையைப் போலல்லாது இம்முறை உழைக்கும் மக்களுக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது போல் தெரிகின்றது."

நவ சமசமாஜக் கட்சி ஏகாதிபத்தியச் சார்பு விடுதலைப் புலிகளுக்கு ஏகாதிபத்திய எதிர்ப்பு சரிகைப் பட்டாடை போர்க்க மட்டுமல்லாது, மரணத்தின் எண்ணிக்கையின் வீழ்ச்சி விடுதலைப் புலிகளின் முற்போக்கு சிந்தனையின் பெறுபேறு எனவும் காட்டப் பார்க்கின்றது. கடந்த ஆண்டில் மத்திய வங்கி குண்டு வெடிப்பில் 100க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டபோது நவ சமசமாஜக் கட்சி அது "தமிழ் மக்களின் யுத்த எதிர்ப்பின் நியாயமான வெளிப்பாடு" என்றது. 1983 கறுப்பு யூலையில் தமிழ் மக்கள் சங்காரம் செய்யப்பட்ட போது இதே நவசமசமாஜக் கட்சி கூறியது என்ன? சிங்கள மக்களின் நியாயமான ஆத்திரத்தின் வெளிப்பாடு என்றது. குட்டி முதலாளித்துவ தீவிரவாத அரசியல் இன்று இந்த இலட்சணத்தில் தமிழ் சிங்கள மக்களுக்கு முற்றிலும் எதிரானதாக வளர்ச்சி கண்டுள்ளது. அத்தோடு ஏகாதிபத்தியவாதிகளின் எதிரில் தலைகுனிந்து நிற்கும் விடுதலைப் புலிகள், பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆகியவைகளை ஏகாதிபத்திய எதிர்பாளர்களாகத் தாக்கிப் பிடிப்பதன் மூலம் சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவ சக்திகளின் பின்னால் தள்ளுவதற்கு ந.ச.ச.க. தனது சேவையை முதலாளிகளுக்கு வழங்கியுள்ளது.

## மாற்று வேலைத்திட்டம்

இனவாத யுத்தத்தை முடிவுக்கு கொணரவும் யுத்தத்தின் மூலம் அபிவிருத்தி காணும் இராணுவ பாசிச சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை ஒழித்துக் கட்டவும் ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு இடமளியாதிருக்கவும் வாய்ப்பான மாற்று வேலைத் திட்டத்தினை சிங்களம் தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கட்சியினால் மட்டுமே வழங்க முடியும். முதலாளித்துவத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமான இந்த வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடுவதற்கான முதன்மைப் பாத்திரத்தை தொழிலாளர் வர்க்கம் ஏற்க வேண்டும். அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முழு இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்திலும் தயார் செய்யும் எதிர்ப்புரட்சி திட்டங்கள், முழுப் பிராந்தியத் தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒன்றுபட்ட போராட்டத்தின் அவசியத்தை ஊர்ஜிதம் செய்துள்ளது. இனவாத யுத்தத்தினை முன்னெடுக்கும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் முதலாளி வர்க்கத்தினதும் விடுதலைப் புலிகள் உட்பட்ட தமிழ் முதலாளி வர்க்கத்தினதும் பிற்போக்கு அரசியலுக்கு தொழிலாளர் வர்க்கத்தின் ஒன்றுபட்ட போராட்டத்தின் மூலமே குழிபறிக்க முடியும்.

* தேசிய சமத்துவமின்மையை ஒழித்துக் கட்டி, தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகள் உட்பட்ட ஜனநாயக உரிமைகளை ஸ்தாபிதம் செய்கின்றதும் அனைத்து ஒடுக்குமுறை சட்டதிட்டங்களையும் ஒழித்துக் கட்டுகின்றதுமான அரசியலமைப்பு நிர்ணய சபைக்காகத் தொழிலாளர் வர்க்கம் போராட வேண்டும். முதலாளி வர்க்கத்தின் போலி அரசியலமைப்பு நிர்ணய சபைகளுக்கும் தெரிவுக் குழுக்களுக்கும் அவ்வாறே கருத்துக் கணிப்புக்களுக்கும் எதிராக அவை தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் நிஜ பிரதிநிதிகளைக் கொண்ட அரசியலமைப்பு நிர்ணய சபையாக விளங்க வேண்டும். அத்தகைய ஒரு அரசியலமைப்பு நிர்ணய சபையை நாடு பூராவும் தொழிலாளர், விவசாயிகளின் நடவடிக்கை குழுக்களை கட்டியெழுப்பப் போராடுவதன் மூலமே கூட்ட முடியும்.

* பிற்போக்கு குண்டர், அரச, பாசிச படைகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பு பெற நடவடிக்கைக் குழுக்களின் பந்தோபஸ்தைப் பெறும் படையணிகளை கட்டியெழுப்பத் தொழிலாளர் வர்க்கம் ஒடுக்கப்படும் மக்களதும் இளைஞர்களதும் ஒத்துழைப்பை திரட்டிக் கொள்ள முன்வர வேண்டும்.

* ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் தமது இலாப வெறி அபிலாசைகளின் பேரில் சிங்கள தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் மக்களை நசுக்குவதற்கு முற்றுப் புள்ளிவைக்கவும், பொதுமக்கள் வறுமையின் பிடியில் இருந்து விடுபடவும் அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாக முதலாளித்துவச் சொத்துக்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கி, பொதுமக்களின் அபிலாசைகளை இட்டு நிரப்புவதற்காக பொருளாதாரத்தை மீளமைக்க வேண்டும்.

இந்த உரிமைகளுக்கான போராட்டத்தினை ஒரு தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தினால் மட்டுமே இட்டு நிரப்ப முடியும். அதாவது, சிங்கள, தமிழ் பேசும் மக்களை சமத்துவத்தின் அடிப்படையில் ஐக்கியப்படுத்தும், சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை ஸ்தாபிதம் செய்வதன் மூலமே சாத்தியமாக்க முடியும். உலக சோசலிச ஐக்கிய குடியரசின் ஒரு பாகமாக இந்தியத் துணைக் கண்டத்தின் சோசலிச குடியரசு ஒன்றியத்தை அமைக்கும் முன்னோக்கின் அடிப்படையில் இந்த வேலைத் திட்டத்துக்காகப் போராட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் குண்டுத் தாக்குதலும் அதைச் சூழ வளர்ச்சி பெறும் அரசியல் நிலைமையும் இந்த வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தில் தொழிலாளர் வர்க்கம் முன்னணியில் நிற்பதைக் காலம் கடத்த முடியாது. முதலாளி வர்க்கத்தின் முகாமிற்குள் பாய்ந்து கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவ சமசமாஜ, இ.தொ.கா.மற்றும் தொழிற் சங்கங்கள் உட்பட்ட அமைப்புக்கள் முதலாளித்துவ வேலைத் திட்டத்தினுள் பொதுமக்களை மூழ்கடிக்கும் பிற்போக்கு வேலைத்திட்டம் பெரும் அழிவைச் சிருஷ்டித்துள்ளது.

தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் சோசலிச முன்னோக்கின் அடிப்படையில் அணிதிரட்டுவதைத் தவிர வேறு வழியில்லை. காலனித்துவ ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னர் கழிந்து சென்றுள்ள 50 வருடங்களிலும் முதலாளித்துவ ஆட்சியின் அனுபவத்தின் மூலம் இந்த மூலோபாய அவசியம் வேண்டிய மட்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்.ஒடுக்கப்படும் மக்கள் தமது தலைவிதியை தீர்த்துக் கொள்ளும் பணியைத் தமது கைகளில் கொள்ள வேண்டும். அனைத்துலக சோசலிச வெகுஜன இயக்கமாக அணிதிரள்வதன் மூலம் மட்டுமே அதைச் சாதிக்க முடியும். நனவான சகல பகுதியினரதும் பொறுப்பு, இந்த சோசலிச இயக்கத்தை ஸ்தாபிதம் செய்வதற்காக போராடுவதேயாகும். நனவான தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து இந்த போராட்டத்தில் இணைந்து கொள்ள வேண்டும் என நாம் வேண்டுகின்றோம். முதலாளித்துவ ஆட்சியின் பேரழிவுகளுக்கு எதிரான மாற்று வேலைத் திட்டத்தினை முன்வைக்கும் ஒரே கட்சி அதுவே.

படிப்பகம்

www.padippakam.com

பியகம சுதந்திர வர்த்தக வலயம்:

# அன்சல்-லங்கா கம்பனி தொழிலாளர் விசாரணைக் கமிட்டி விசாரணையில் நீங்களும் கலந்து கொள்ளுங்கள்

பியகம சுதந்திர வர்த்தக வலயத்தில உள்ள அன்சல்-லங்கா கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருக்கையில் நோய்வாய்ப்பட்ட மூன்று தொழிலாளர்கள் இதுவரையில் இறந்துள்ளனர். இவர்கள் ஜீ.கே.சாந்த நளின், எல்.கே.லக்மினி, தயாவதி. இம்மூவரதும் மரணத்துக்கு காரணம் அன்சல்-லங்கா நிறுவனத்தினுள் பாவிக்கப்படும் நச்சு இரசாயனத் திரவியங்கள் உடலில் கலப்பதேயாகும் என ஊழியர்களும் அவர்களின் உறவினர்களும் நம்புகின்றனர்.

அத்தோடு இன்னும் பல தொழிலாளர்கள் நோய்வாய்ப்பட்டு உடம்பு செயலிழந்து போன நிலைமைக்கும் தள்ளப்பட்டுள்ளனர். சேவையில் ஈடுபட்டிருக்கையில் இந்த தொழிலாளர்களில் பலர் அடிக்கடி ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படும் அவலமும் ஏற்பட்டுள்ளது. அவர்களது இந்த நோய் சுகப்படுவதாக இல்லை. மிகவும் சமீபத்தில் குசுமாவதி, தீபிகா, இந்திகா என்னும் தொழிலாளர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டதாக தெரிகின்றது. சில தொழிலாளர்கள் பெரும் சத்திர சிகிச்சைகளுக்கும் உள்ளாகி உள்ளனர்.

இந்நிலைமையினுள் அன்சல் லங்கா தொழிலாளர்கள் தாம் முகம் கொடுக்கும் ஆபத்து நிலைமை பற்றி விசாரணை நடாத்துவது சம்பந்தமாக பெரும் அக்கறை காட்டி வருகின்றனர். சோசலிச சமத்துவக் கட்சியினால் அமைக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலய சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி என்ற கமிட்டி அன்சல்-லங்கா பற்றிய விசாரணையில் முன்னணியில் நிற்கின்றது.

ஏற்கனவே இந்த விசாரணை பல துறைகளிலும் ஆரம்பமாகி முன்னேறி வருவதாக விசாரணைக் கமிட்டியின் தலைவியும் சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினருமான விலானி பீரிஸ் தெரிவித்தார். இரசாயனத் திரவியங்கள் பற்றிய நிபுணர்கள், டாக்டர்கள், பொறியிலாளர்கள், சட்டத்தரணிகல் ஆகியோர் இந்த விசாரணையின் நடவடிக்கைகளில் கலந்து கொண்டுள்ளார்கள். அன்சல் லங்கா தொழிலாளர்களின் விசாரணைகளுக்கு மிகவும் முக்கியமான ஆதரவு கிடைத்து வருகின்றது. சுதந்திர வர்த்தக வலயங்களின் அயல் வேலைத்தலங்கள் பலவற்றில் இருந்தும் தொழிலாளர்கள் விசாரணைக்கு உதவி வருகின்றனர்.


அன்சல் -லங்கா சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டி தலைவி விலானி பீரிசுடன் கொட்டும் மழையிலுப் கலந்துரையாடுவதில் ஈடுபட்டுள்ள அன்சல்-லங்கா தொழிலாளர்கள்.

## அன்சல் -லங்கா சுயாதீன விசாரணை: விசாரணைக்கு ஆதரவு வழங்க விருப்பம்

5 வருடங்களுக்கு மேலாக அன்சல் லங்கா நிறுவனத்தில் சேவை புரிந்து நோய்வாய்ப்பட்டதால் சேவை நீக்கம் செய்யப்பட்ட மாகொன ஜே.ஏ.பிரேமரத்ன சுயாதீன தொழிலாளர் விசாரணைக்கு பூரண ஆதரவு வழங்கவும் விசாரணைகளில் சேர்ந்து செயற்படவும் தமது தயார் நிலைமையைத் தெரிவித்துள்ளார். அதன்படி சுயாதீன தொழிலாளர் விசாரணைக் கமிட்டியின் அங்கத்தவர்கள் அவரைச் சந்தித்தனர்.

பிரேமரத்னவின் தகவல்கள் அன்சல் லங்கா நிறுவனத்தின் கொடிய சேவை நிலைமைகளையும் ஊழியர் கமிட்டி எனப்படுவதன் நடவடிக்கைகள், ஊழியர் கமிட்டி அங்கத்தவர்களை உள்ளடக்கி உள்ள இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் (கம்யூனிஸ்ட் கட்சி) தலைவர் சுபசிங்கவின் துரோகங்களையும் அம்பலப்படுத்தியது.

பிரேமரத்ன 1991 மார்ச் 26ம் திகதியில் இருந்து அன்சல் லங்கா கம்பனியில் சேவை செய்துள்ளார். கலப்புக் கிளையில் வேலையில் ஈடுபட்டிருந்த சமயத்தில் தலையிடி, மூச்சடைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார். அவரைப் பரீட்சித்த ஆஷா சென்றல் ஆஸ்பத்திரியின் சிரியந் மெண்டிஸ் என்ற சிறப்பு வைத்திய நிபுணர் வேலைத்தலத்தின் சுற்றாடல் காரணமாக இந்த நோய் ஏற்பட்டுள்ளதாகவும் இரசாயன திரவியங்கள் குறைவாகப் பாவிக்கும் கிளைகு அவர் ஒரு மாதத்திற்கு இடமாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும எழுத்து மூலம் அறிவித்தார். ஆனால் அது நடைபெற்றதா? இல்லை. அதற்குப் பதிலாக பிரேமரத்னவுக்கு அன்சல் லங்கா ஊழியர் கமிட்டியும் கம்யூனிஸ்ட் கட்சியின் இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் தலைவரான சுபசிங்கவும் வழங்கிய ஆலோசனை என்ன தெரியுமா? சுகவீனத்தின் அடிப்படையில் சேவையில இருந்து இராஜினாமாச் செய்! இத்தொழிலாளி விருப்பமில்லாத நிலைமையிலும ஆதரவற்ற நிலையிலும் இராஜினாமாச் செய்தார். தொழிற்சங்கத் தலைவர்களின் நடவடிக்கையை விமர்சனம் செய்யும் பிரேமரத்ன இறுதியில் கூறியதாவது:

"காசு சேர்க்க 'லிஸ்ட்' கொண்டு வரும் இத்தகைய தொழிற்சங்கக் காரர்கள், ஊழியர் கமிட்டியின் உள்ளே ஒன்றாக இருக்கும் ஆட்கள் கூட தீர்க்கமான பிரச்சினையில் நிர்வாகிகள் கூறுவதையே கூறுகின்றார்கள்."

5ஆண்டுகள் சேவை பூர்த்தி செய்த நிலையிலும் கூட பிரேமரத்ன இராஜினாமாச் செய்த போது கிடைத்தது இராஜினாமா அத்தாட்சிப் பத்திரமும் இரண்டரை மாதச் சம்பளமும் மட்டுமே.

கலப்புக் கிளையில் அவர் செய்த வேலையை விளக்குகையில் பிரேமரத்ன பின்வருமாறு விளக்கினார்:

"பயாகலை, மாவனெல்லை பகுதிகளில் இருந்து இறப்பர் பால் கொண்டு வருவார்கள்.பெரும் டாங்கிகளில் இந்த பாலை குழாய்கள் மூலம் நிரப்புவோம். இங்கு டாங்கி நிரம்பிவிட்டதா என்பதை பார்ப்பது ஒரு விசேட அம்சம். 20 அடி உயரமான டாங்கியில் ஏறி, டாங்கியின் வாய்க்கு கிட்டச் சென்று எட்டிப் பார்க்க வேண்டும். பாலில் அமோனியம் கலந்து இருப்பதால் ஒரு கணத்துக்கு மேல் அதைப் பார்க்க முடியாது. நிரம்பும் போது சத்தமிட்டு சொல்ல வேண்டும். டாங்கி மேலே உருண்டை வடிவில் இருப்பதால் இருக்க முடியாது. ஒரு நாள் மேலிருந்து கீழே வீழ்ந்து விடடேன். கால் சுழுக்கி ஒரு கிழமை வீட்டில் இருந்தேன். விபத்து விடுமுறை. ஒரு நாளைக்கு மட்டுமே கிடைத்தது." என்றார்.



### கீர்த்தி பாலசூரிய: ட்ரொட்ஸ்கிச தலைவரின் 10வது நினைவு தினம்

டிசம்பர் 21
கொழும்பு பொது நூல் நிலைய மண்டபம்

கண்காட்சி : காலை 10 மணி
பொதுக்கூட்டம்: மாலை 3 மணி

சோசலிச சமத்துவக் கட்சி,
இளம் சோசலிஸ்டுகள்.




சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 3 | ரூ.27 |
| இதழ் 6 | ரூ.54 |
| இதழ் 12 | ரூ.108 |
| இதழ் 24 | ரூ.216 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

### சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு 10
தொ.பே. 682220

90, 1 வது மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால் ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்